கல்கி

KALKI
19.6.88
ரூ. 2.



எதிர்க்கட்சி ஒற்றுமை-
சீட்டுக் கச்சேரிதானா?


உங்களுக்குத் தெரியுமா?
கோகுல் பவுடர் தூய சந்தனமும், ஸ்டார்ச் கலவையும் இணைந்துள்ளதால் வியர்க்குருவை அகற்றுகிறது.
கோகுல் பவுடர் கோடையில் சருமத்தை மென்மையாக பாதுகாக்கிறது.
நாள் முழுவதும் கமழும் நறுமணக்கலவை தனித் தன்மை வாய்ந்தது. ஏனெனில் மிக உன்னதமான வாசனை திரவியங்கள் கொண்டு தயாரிக்கப்படுவது.
கோகுல் பவுடர் இனிமை !
தென்றல் போல் குளுமை !
கோகுல் - தூய சந்தனத்தில் தயாரான ஒரே உன்னதப் பவுடர்.
"GOKUL"
SANTOL
TALCUM POWDER
ADWAVE/TSR/3527

“மூன்று சபதங்கள் செய்திருக்கிறேன்!”



— வன்னியர் தலைவர் ராமதாஸ் பேட்டி

நிருபர்: ஏற்கெனவே தமிழ்நாட்டில் ஐம்பது சதவீத இட ஒதுக்கீடு பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இருக்கிறது. இது தவிர அட்டவணை இனத்தவருக்கு (Scheduled Caste and Tribe)த் தனி ஒதுக்கீடு. அது போதாதென்று பொது இடங்களிலும், இவர்கள் போட்டியிடலாம் என்றிருக்கிறது. இந்த நிலையில் நீங்கள் மட்டும் தனியாக இருபது சதவீத இட ஒதுக்கீடு கேட்பது எந்த விதத்தில் நியாயம்? இதனால் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் வராதோர் மேலும் பாதிக்க இடம் இருக்கிறது அல்லவா?

ராமதாஸ்: இட ஒதுக்கீடு கேட்பது எங்களுக்கு மட்டுமல்ல. வன்னியர் சங்கத்தின் ஒரே கோரிக்கை எல்லா ஜாதிகளையும் (முன்னேறிய ஜாதிகள் உட்பட) கணக்கிலெடுத்துக் கொண்டு அந்தந்த ஜாதியின் மக்கள் தொகைக்கு ஏற்ப இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதுதான். நாங்கள் தமிழ் நாட்டில் இரண்டு கோடிப் பேர் இருக்கிறோம்; ஆனால் 33 சதவீதம் கேட்க வேண்டிய நாங்கள் இருபது சதவீதம் தான் கேட்கிறோம். வன்னியர் குல க்ஷத்திரியர்களான நாங்கள் மிக மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். இதுவரை பிற்படுத்தப்பட்டவர்களுக்குக் கிடைத்த சலுகைகளைப் பெரும்பாலும் பிற்படுத்தப்பட்டவர்களில் உள்ள ஆதிக்க ஜாதிகள்தான் அதிகம் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். இப்போதுள்ள முறை ஆறைத் தேங்காய் விடுவது போன்றது. இதை விட்டு விட்டுத் தேங்காயை, இருக்கும் ஆட்களுக்கு ஏற்ப சீராகப் பத்தை போட்டுக் கொடுங்கள் என்றுதான் கேட்கிறோம். இப்போதுள்ள ஐம்பது சதவீதக் கோட்டாவை உயர்த்தினாலும் பயன் பெறப் போவது பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள சில ஆதிக்க ஜாதிகள்தான். அவர்கள்தான் இன்று நிர்வாகத்திலும், அரசியலிலும் முன்னணியில் இருக்கிறார்கள்.


நிருபர்: வன்னியர் சங்கங்கள் இரண்டு, மூன்று உள்ளன. இந்த நிலையில் உங்களுக்கிடையே ஒற்றுமை இல்லையே?

ராமதாஸ்: எல்லா முற்பட்ட ஜாதிகளிலும் ஒரே ஒரு சங்கம்தான் இருக்கிறது.

ஆனால் அட்டவணை இனத்தவருக்கு மட்டும் இருபத்தியெட்டுச் சங்கங்கள் உள்ளன. நாங்கள் எங்களிடையே இருந்த இருபத்தியெட்டுச் சங்கங்களை ஒன்றாக்கினோம். எங்கள் சங்கத்தில் பொருளாளராக இருந்தவர்தான் வன்னிய அடிகளார். அரசியலே வேண்டாம் என்று இருந்த எங்களை விட்டுவிட்டு, தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் கலைஞரைச் சந்தித்துப் பேசி, தனியாகச் சங்கம் துவக்கினார். ஆனால் அவர் சங்கமெல்லாம் லெட்டர் பேட் சங்கம்தான். எங்கள் சங்கத்தில் 35 லட்சம் ஆண்கள் உறுப்பினராக இருக்கிறார்கள். இது தவிர மகளிர் அணி, அரசியல் அணி என்றும் இருக்கின்றன.

நிருபர்: கலைஞர் முதல்வராக இருந்த போதுதான் பிற்படுத்தப்பட்டோர் கோட்டாவை உயர்த்தினார். அப்படியிருக்க அவர் எப்படி உங்களுக்கு முதல் எதிரி ஆவார்?

ராமதாஸ்: இதற்குப் பல காரணங்கள்... கலைஞர் முதல்வராக இருந்த போது, வன்னியர் உட்பட மிக பிற்படுத்தப்பட்டவர்களுக்கு (39 ஜாதிகளுக்கு) தனியாகப் பதினைந்து சதவீத இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற யோசனையைத் தி.மு.க. வில் இருந்த நெல்லிக்குப்பம் கிருஷ்ண மூர்த்தி, மதுராந்தகம் ஆறுமுகம் ஆகியோர் சொன்னார்கள். இதற்காக அரசு வழக்கறிஞரின் கருத்தும் கேட்கப்பட்டு அரசு வழக்கறிஞரும் 'ஒன்றும் ஆட்சேபணை இல்லை' என்று சொல்லி விட்டார். ஆனால் இந்த யோசனை காபினெட்டில் வந்த போது ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த ப. உ. சண்முகம், அன்பழகன், நெடுஞ்செழியன், ராஜாராம் ஆகியோர் கடுமையாக எதிர்த்தார்கள். அதைக் கண்டு பயந்த கலைஞர் யோசனையைக் கைவிட்டு விட்டார். 'நான் மிக, மிக, பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன்' என்று சொல்லும் கருணாநிதி, அரசியல் ஆதாயத்தைக் கருதாமல் பதினைந்து சதவீத இட ஒதுக்கீட்டைக் கொடுத்திருப்பாரேயானால் இப்போது எங்களுக்குப் போராட்டம் நடத்த வேண்டிய அவசியமே இருந்திருக்காது.



• வன்னியர் சங்கம் நடத்திய சாலை மறியல் போராட்டத்தின் போது......

— காமராஜ் ஆட்சி செய்த போது, கல்விச் சலுகைகளைப் பெற பிற்படுத்தப்பட்ட பட்டியலில் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு உண்டு. யாரோ சுப்ரீம் கோர்ட்டில் 'மிகவும் பிற்படுத்தப்பட்டோர்' என்று இருக்கக் கூடாது என்று கேஸ் போட, சுப்ரீம் கோர்ட்டும் ஆமாம் என்று சொல்லி விட்டது. இந்தத் தீர்ப்பை அடுத்து, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்குக் கல்வித் துறையில் கிடைத்து வந்த சலுகைகளை வெட்டியவர் கலைஞர். அவர் நினைத்திருந்தால் மாற்று ஏற்பாடு செய்திருக்கலாம்.

— கோட்டாவை அதிகப்படுத்தினாலும் வோட்டுக்கள் பெறுவதற்காக மேலும் பல முன்னேறிய ஜாதிகளைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தார்.

— தி.மு.க. வில் இருந்த எங்கள் சங்கத்து ஆட்களை, எங்கள் கூட்டத்திற்குச் செல்ல வேண்டாம் என்று கட்டுப்பாடு விதித்தார்.


— நாங்கள் உண்ணாவிரதம், ரயில் மறியல் என்று போராட்டம் செய்யும் போது அவரும் தி.மு.க. சார்பாக ஏதாவது போராட்டங்களை அறிவித்துக் கொண்டிருந்தார். ரயில் மறியலில் நான் சிறையில் இருந்த போது, வேறு ஏதோ போராட்டத்தில் கைதாகி அவரும் சிறையில் இருந்தார்.

— எங்கள் போராட்டத்தைப் பற்றிய செய்திகளை முரசொலியில் போடக் கூடாது என்று தடை விதித்தார்.

— நாங்கள் சாலை மறியல் போராட்டம் வைத்திருந்த போது அண்ணா அறிவாலயத் திறப்பு விழாவை வைத்தார். எங்கள் சமூகத்தைச் சேர்ந்த தலைவர்கள் பலர் சொல்லியும் கேளாமல் அந்த விழாவை வைத்தார். இதனால் அந்த விழாவில் கலந்து கொண்ட







தி.மு.க.வினர் சாலை மறியலில் மாட்டிக் கொண்டு கஷ்டப்பட்டதும் கலாட்டா செய்ததும் அதன் விளைவாகத் துப்பாக்கிச் சூடு நடந்ததும் உங்களுக்குத் தெரியும்.

இப்போது சொல்லுங்கள் இப்படிப்பட்ட மனிதர் எங்களுக்கு முழு எதிரியாகத்தானே இருக்க முடியும்.

நிருபர்: சமீபத்தில் ஜெயலலிதா பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு' என்று சொன்னதற்கு நீங்கள் 'இனி ஜெயலலிதாதான் முதல் எதிரி' என்று சொன்னீர்கள். இது பற்றிச் சொல்ல முடியுமா?

ராமதாஸ்: பொருளாதார அடிப்படையை வைத்து இட ஒதுக்கீடு என்று யார் சொன்னாலும், எந்த விதத்தில் சொன்னாலும் அவர்கள் எங்களுக்கு முதல் எதிரிகள்தான். வை. பாலசுந்தரம் கூடக் கடுமையாக எதிர்த்திருக்கிறாரே!

நிருபர்: எம்.ஜி.ஆரின் கடைசிக் காலத்தில் எல்லா ஜாதிச் சங்கங்களையும் கலந்து பேசினார். அவரது அணுகுமுறை பற்றி உங்கள் கருத்து? அ-இ-அ-தி.மு.க.வுடன் உங்கள் தொடர்பு?

ராமதாஸ்: நாற்பது வருடங்களாக ஒரு ஜாதி, திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுகிறது என்பது நன்கு தெரிந்தும் கூட, எங்களைச் சந்திக்க விருப்பப்படவே இல்லை எம்.ஜி.ஆர். நாங்கள் எவ்வளவோ முயற்சி செய்தோம். கடைசியில் சாலை மறியல் செய்து நாங்கள் பல உயிர்களை இழந்த பிறகுதான் விழித்துக் கொண்டார். நிதர்சன நிலையை அவர் புரிந்து கொண்டு எல்லா ஜாதிச் சங்கங்களையும் பேச அழைத்ததே எங்களுக்கு ஒரு வெற்றிதான். மேலும் அந்தச் சந்திப்பில் எண்பதுக்கும் மேற்பட்ட ஜாதிச் சங்கங்கள் எங்களின் ஒரே கோரிக்கையான ஜாதிகளின் மக்கள் தொகை அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று ஆதரித்துப் பேசியது எங்களுக்கு ஒரு தார்மீக பலத்தை அளித்திருக்கிறது. எங்கள் இயக்கத்தில் இருக்கும் இளைஞர்களில் பெரும்பாலோர் எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகர்கள்தான்; கையில் பச்சை குத்தியவர்கள் தான். ஆனால் இப்போது முற்றிலுமாக மாறி அரசியல்வாதிகளின் முகமூடியைக் கிழித்தெறியத் தயாராகி விட்டார்கள்.

நிருபர்: தமிழ்நாடு முழுவதும் உங்கள் சங்கம் இருந்தாலும் தென் ஆர்க்காட்டில் தானே தீவிரமாக இருந்தது. மற்ற இடங்களில் அப்படி இல்லையே!

ராமதாஸ்: தென் ஆர்க்காட்டில் சாலை மறியலின் போது துப்பாக்கிச் சூடு நடந்ததால் போராட்டம் தீவிரமாக இருந்தது உண்மைதான். என்றாலும், வேறு பல மாவட்டங்களிலும் போராட்டம் நடந்தது. இப்போது எங்கள் சங்கத்தைச் சேர்ந்த 42,000 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு கேஸ் நடந்து கொண்டிருக்கிறது.

நிருபர்: பக்கத்தில் உள்ள பாண்டிச்சேரியில் உங்கள் வகுப்பினர் இருக்கிறார்களா?

ராமதாஸ்: எழுபது சதவீதம் நாங்கள் தான். தேர்தல் வந்தால் ஆட்சியைக் கூடப் பிடிப்போம். இன்னும் கேட்டால் அங்கு பிற்படுத்தப்பட்டோருக்குக் கோட்டா கிடையாது. ஏதோ பஞ்சாயத்து யூனியன் போல் உள்ள அந்த இடத்தில் கவனத்தைச் செலுத்தாமல் பரந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் தான் கவனத்தைச் செலுத்தி வருகிறோம்.

நிருபர்: அப்படியென்றால் பாண்டியில் சட்டமன்றத் தேர்தலில் உங்கள் சங்கம் போட்டி போடுமா?

ராமதாஸ்: கட்டாயமாகப் போட்டி போடுவோம்.

நிருபர்: தேர்தலைப் புறக்கணிப்போம் என்று சொல்லும் நீங்கள் இது போல் பேசுவது எப்படி சரி?

ராமதாஸ்: அங்கு எங்களுக்கு வாய்ப்பிருக்கும் போது போட்டியிட்டு வெற்றி பெற்றுப் பிற்படுத்தப்பட்டோருக்குச் சலுகைகள் வாங்கிக் கொடுப்பதில் என்ன தவறு! ஆனால் தமிழ்நாட்டில் எங்களால் ஆட்சியைப் பிடிக்க முடியாதே! அந்த அளவுக்குப் பலம் இல்லையே!

நிருபர்: தேர்தலைப் புறக்கணிப்பதன் மூலம் என்ன சாதித்து விட முடியும் என்று நினைக்கிறீர்கள். எப்படியும் ஏதோ ஒரு கட்சி ஆட்சி அமைக்கப் போகிறது. அந்தக் கட்சி, வோட்டுப் போடாத வன்னியர்களைக் கண்டு கொள்ளாத அபாயம் இருக்கிறதே!

ராமதாஸ்: மிகப் பெரிய ஜனநாயக நாடான நமது நாட்டில், எதிர்ப்புத் தெரிவிக்கத் தேர்தலைப் புறக்கணிப்பதுதான் சரியான வழி. நாங்கள் இரண்டு கோடி வன்னியர்கள் இருக்கிறோம். எங்கள் ஆதரவு இல்லாமல் எந்த அரசும் நீடிக்க முடியாது.

ஆட்சிக்கு வரும் கட்சி, ஒரு மாதத்தில் எங்கள் கோரிக்கையைத் தீர்க்க வேண்டும். இல்லையேல் மிகக் கடுமையான போராட்டம் வெடிக்கும்.

நிருபர்: உங்கள் போராட்டத்தின் போது பொது மக்களுக்குக் கடும் பாதிப்பு உண்டாகிறதே! சமீபத்தில் கூட நீங்கள் தாக்கப்பட்டதாக வதந்தி பரவி வன்முறைச் சம்பவங்கள் நடந்தன. இவற்றுக்கு முடிவே கிடையாதா?

ராமதாஸ்: இனிமேல் எங்கள் போராட்டம் எது நடந்தாலும், பொது மக்களுக்குப் பாதிப்பு வராது. அது போல், வன்முறையில் இறங்குபவர்களைச் சங்கத்தில் இருந்து தள்ளி வைக்க முடிவு செய்து இருக்கிறோம்.

நிருபர்: ஹரிஜனங்களுக்கும் வன்னியர்களுக்கும் அடிக்கடி மோதல் வரக் காரணம் என்ன?

ராமதாஸ்: சாலை மறியலில் ஈடுபட்ட போது எங்கள் கோரிக்கைகளில் ஒன்று ஹரிஜனங்களுக்கு மத்திய அரசு கொடுக்கும் கோட்டாவை பதினெட்டு சதவீதத்திலிருந்து இருபத்திரண்டு சதவீதமாக உயர்த்த வேண்டும் என்பது. வன்னியர்களும் சரி, ஆதி திராவிடர்களும் சரி, உழைக்கும் வர்க்கம்தான். அவர்களின் தலைவர்கள் எங்கள் மேடைகளில் பேசுகிறார்கள். 'எங்கெங்கு தீண்டாமை இன்னும் இருக்கிறதோ எங்களுக்குச் சொல்லுங்கள்; நாங்கள் உங்களுக்காகப் போராடுகிறோம்' என்று ஆதி திராவிடத் தலைவர்களிடம் சொல்லியிருக்கிறோம். அரசியல் கட்சித் தலைவர்கள் சொந்த நலத்தை ஆதாயமாகக் கருதி, இது போல் பொய்ப் பிரசாரத்தைச் செய்கிறார்கள். 'வோட்டுப் பொறுக்கிகளான' அவர்கள் சொல்வதை நீங்கள் நம்பக் கூடாது. என் கூட கிராமங்களுக்கு வாருங்கள். உண்மை தெரியும்.

நிருபர்: தமிழ்நாட்டில் 202 பிற்படுத்தப்பட்ட ஜாதிகள் இருக்கின்றன. இவர்களுக்கு எந்த விகிதத்தில் இட ஒதுக்கீடு செய்வது?

ராமதாஸ்: பக்கத்தில் உள்ள கேரளாவில் ஈழவர், முஸ்லீம், ஆங்கிலோ—இந்தியர் என்று பிற்படுத்தப்பட்ட ஜாதி வாரியாக ஐம்பது சதவீதத்தைப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். மீதி ஐம்பது சதவீதத்தைத் திறமையுள்ளவர்களுக்கு வைத்திருக்கிறார்கள். அதே போல் கர்நாடகாவில் மக்கள் தொகையை மனத்தில் கொண்டு, ஏ,பி, ஸி,டி,இ என்று பிரித்து, அதற்கேற்றவாறு ஐம்பது சதவீத இட ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். மனமிருந்தால் மார்க்கமுண்டு.

நிருபர்: நீங்கள் வன்னியர் இட ஒதுக்கீட்டுக்குப் போராடுகிறீர்கள் என்பதை விட உங்களை ஒரு சக்தியாக வளர்த்துக் கொள்ளவே வன்னியர்களைப் பயன்படுத்திக் கொள்கிறீர்கள் என்று சொல்லலாமா? அதனால்தான் பண்ருட்டி போன்றவர்கள் உங்களை ஆதரிக்கவில்லை என்று சொல்லலாமா?

ராமதாஸ்: பதவி, பணம் என்பது எனக்கு முக்கியமல்ல. மேலும் சொன்னால் இந்தப் பணியில் இறங்கியிருப்பதால், டாக்டர் தொழில் மூலம் எனக்குக் கிடைக்கும் வருமானம் குறைந்து விட்டது. இந்தச் சங்கத்தை ஆரம்பித்த போது, மூன்று சத்தியங்கள் செய்திருக்கிறேன்.

— எந்தக் காலத்திலும் தலைமைப் பொறுப்பை ஏற்பதில்லை.

— இயக்க சம்பந்தமாகச் சொந்தப் பணத்தைச் செலவு செய்வது.

— எந்தக் காலத்திலும் என் கால்கள் சட்டமன்ற பாராளுமன்றப் படிகளில் படக் கூடாது. என்னை ஒரு சக்தியாக வளர்த்துக் கொள்வது என்று நான் முடிவு செய்திருந்தால், இந்தச் சத்தியங்களை எப்போதோ மீறியிருக்கலாம். மேலும் பண்ருட்டி போன்றவர்கள் அரசியல் கட்சியில் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பல நிர்ப்பந்தங்கள் இருக்கின்றன. அவரையும் என்னையும் இணைத்துப் பார்ப்பதே தவறு!


நிருபர்: இந்த நாட்டில் ஜாதிகள் ஒழியவே ஒழியாதா? திறமைக்கு எப்போதுதான் முதலிடம் கிடைக்கும்?

ராமதாஸ்: நாற்பது வருடங்களாகப் பேசுகிறார்கள்; ஜாதி ஒழிந்ததா? உண்மை என்னவென்றால் சிறுபான்மைச் சக்திகள் ஆட்சியில் இருக்கவும் பெரும்பான்மையான சக்திகளை அடிமைப்படுத்தவும்தான் 'ஜாதி ஒழிப்பு'ப் பேச்சு பயன்படுத்தப்படுகிறது. ஒரு காலத்தில், பிராமணர் பிராமணல்லாதோர் போராட்டம் நடந்தது. இந்தப் போராட்டத்தின் விளைவாக நாங்கள்தான் உயர்ந்திருக்க வேண்டும். ஆனால் நடந்ததே வேறு. வேறு பல முன்னேறிய ஜாதிகள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு நியோ பிராமின்களாக (**Neo-Brahmins**) மாறிச் சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு விட்டார்கள். 'இன்றைக்கு எந்தக் காரணத்தைக் காட்டிப் பிற்படுத்தப்பட்டவர்கள் அடக்கப்படுகிறார்களோ, அதே சாதிக் காரணத்தைக் காட்டி அவர்களை முன்னுக்குக் கொண்டு வர வேண்டும்' என்றார் பெரியார். அந்த அடிப்படையில்தான் நாங்கள் இட ஒதுக்கீடு கேட்கிறோம். அரசாங்கம் ஏதாவது ஒரு நாளைக் குறிப்பிட்டு, அப்போதிலிருந்து ஜாதி சமயங்கள் கிடையாது என்று ஒரு தீவிர முடிவு எடுக்கும் பட்சத்தில் அதற்கு முதல் நாளே ஜாதியின் பெயரைச் சொல்லிப் போராடுவதை விட்டு விடுவோம். அப்படிப்பட்ட ஜாதி சமயமற்ற சமுதாயம் இந்தியாவில் வருவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவாக இருப்பதாகத்தான் நான் கருதுகிறேன்.

பேட்டி: **ப்ரியன்**

படங்கள்: **கே. வி. ஆனந்த்**

சுபா



"விஜயவாடா மாநாடு வெறும் நாடகம்தான்!"

—எம். கல்யாணசுந்தரம் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி) கூறுகிறார்...

"என். டி. ராமராவ் கூட்டிய பத்துக் கட்சி மகாநாட்டைப் பற்றிச் சொல்லும்பொழுது, 'சீட்டாட்டத்தில் ஒரு கை குறைந்தது: அதனால் தான் கலைஞர் கருணாநிதியை அங்கே அழைத்தார்கள்!' என்று மூப்பனார்-கூறினாரே, நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"


"என். டி. ஆருக்குத் தம்முடைய மாநிலத்திலேயே எதிர்ப்புகள் அதிகரித்து வருகின்றன. அவர் போட்டு வந்த தூய்மை வேடம் கூடக் கலைந்து வருகிறது. எனவே, பிற மாநிலங்களிலிருந்தும் பெரும் அரசியல் தலைவர்கள் தமக்கு ஆதரவு கொடுப்பதாகத் தம் மாநில மக்களுக்கு எடுத்துக் காட்டுவதற்காக நடத்தப்பட்ட ஒரு நாடகம்தான் விஜயவாடா மாநாடு. அதில், காங்கிரசைக் காட்டிலும் ஒரு கொள்கையும் திட்டமும் இல்லாத காரணத்தால் விரக்தி அடைந்த, இதர காங்கிரஸ் எதிர்ப்புக் கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டு, அம் மகாநாட்டைப் பயன்படுத்திக் கொண்டனர். கருணாநிதிக்கும் அத்தகைய ஒரு செயற்கை முறையான உற்சாகம் தேவைப்பட்டது. ஆகவே அம் மகாநாட்டுக்கு அழைக்கப்பட்டவுடன், அவரும் வந்த வாய்ப்பை விடாது அங்கே சென்று வந்தார் என்றே நான் கருதுகிறேன்."

"குறைந்த வோட்டுக்கள் பெற்றும் அதிக இடங்களைத் தேர்தலில் வென்று, காங்கிரஸ் செலுத்தும் ஆட்சி, நம் ஜனநாயக முறையில் உள்ளது. இப்படி குறைந்தபட்ச வோட்டுக்கள் பெற்றவர்கள், தங்களை விரும்பாத பெரும்பான்மையான மக்களை ஆளும் இந்த முறை மாற்றியமைக்கப்பட வேண்டும்' என்று ராஜாஜி ஒரு முறை சொல்லியிருக்கிறார். இந்தக் கருத்து உங்களுக்குச் சரியென்று தோன்றுகிறதா?"

"இந்தக் கருத்து எனக்கு உடன்பாடானதுதான். எவ்வளவு சதவிகிதம் ஒரு கட்சி வோட்டுப் பெறுகிறதோ, அவ்வளவு சதவிகிதம் சட்டமன்றத்திலோ, பாராளுமன்றத்திலோ இடம் பெறும் அளவுக்குத் தேர்தல் முறைகள் திருத்தி அமைக்கப்பட வேண்டும். அப்போதுதான் மெஜாரிட்டி மக்கள் விரும்புகிற மெஜாரிட்டி கட்சியின் ஆட்சி நடைபெறும் வாய்ப்பு ஏற்படும். அப்படி அல்லாமல் இருப்பது நம்முடைய தேர்தல் முறையில் உள்ள குறைபாடு. ஆனால் எதிர்க் கட்சிகளும் மேற்படி முறையை விரும்புவதாகத் தெரியவில்லையே! பொய்யான வாக்குறுதிகளையும், கறுப்புப் பணத்தையும் வைத்தே தேர்தலில் வெற்றி பெற முயற்சி செய்கிறார்கள். ஆக, அரசியல் விவேகத்தின் அடிப்படையில் தேர்தல் நடத்துவதற்குப் பதிலாக, ஆர்ப்பாட்டமும், 'கட்-அவுட்'களும்தான் இன்றைக்கு இருக்கின்றன. ஆகவே, ஒரு வகையான கற்பனா ஜனநாயகம்தான் இப்போது நடைபெறுகிறது."

"ராஜீவ் காந்தியே தொடர்ந்து பிரதமராக இருப்பதை ஏற்க முடியாமல்தானே, விஜயவாடா மாநாட்டில் பத்துக் கட்சிகள் இணைந்து செயல்பட்டு, மாற்றுத் தலைமை காணும் முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள்?"

"1977-ல் இந்திரா காந்தியை எதிர்த்து, மொரார்ஜி தலைமையில் ஒரு கூட்டணி ஆட்சி நடந்ததும், அது இரண்டாண்டுக் காலம் கூட நீடிக்க முடியாமல் போனதையும் நமது சமீபத்திய வரலாற்றில் கண்டறிந்தோம். காங்கிரசை எதிர்ப்பது மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட எந்த ஒரு கூட்டணியும் பலன் அளிக்காது. 'லோக் நாயக்' என்று புகழப்பட்ட ஜெயப்பிரகாஷ் நாராயண் தலைமையில் உருவான 'முழுப் புரட்சி' கூட்டணியே நீடிக்க முடியாமல் மறைந்து விட்டது. இந்த உண்மையை விஜயவாடா மாநாட்டில் கலந்து கொண்ட கட்சித் தலைவர்கள் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். ஒரே கட்சி-ஆட்சி நடக்கின்ற மாநிலங்களில் கூட ஆள் கவிழ்ப்பும், ஸ்திரமற்ற தன்மையும் பார்க்கிறோம். அடிக்கடி முதலமைச்சர்கள் மாற்றப்படுகிறார்கள். ஜனநாயகத்தின் பெயரால் கொள்கையற்ற கோஷ்டிச் சண்டைகளும், பதவி வேட்டை



''ஒற்றுமைக்கான வாய்ப்புக்கள் பிரகாசமாக உள்ளன''

— மு. கருணாநிதி

''எதிர்க்கட்சிகள் ஒரு கொடியின் கீழ் ஒன்றுபடுவதற்கான வாய்ப்புக்கள் பிரகாசமாக உள்ளன. இந்த ஒற்றுமை முயற்சிக்குத் தி. மு. க. முழு ஆதரவு தரும். எதிர்க்கட்சித் தலைவர்களின் மற்றொரு கூட்டம் நாடாளுமன்றத் துணைத் தேர்தல்களுக்குப் பிறகு தில்லியில் நடக்கலாம்'' என்று விஜயவாடாவில் எதிர்க்கட்சிகள் கூட்டத்தில் கலந்து கொண்டு திரும்பிய கருணாநிதி கூறினார்.

எதிர்க்கட்சிகளிடையே அனைவரும் ஏற்கத்தக்க ஒரு தலைவர் தேர்வு பற்றிக் கேட்டபோது, ''அத்தகைய தலைவர் காலாகாலத்தில் தோன்றுவார்'' என்று கருணாநிதி கூறினார். ''தேசிய அளவில் செல்வாக்கு அல்லது பிராபல்யம் உள்ள தலைவர் என்று யாருமே தயார் நிலையில் இல்லை. பிரதமர் ராஜீவ் காந்தி கூட அரசியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டுத் தலைவராக உருவாக்கப்பட்டாரே யொழிய, அதற்கு முன்பு அவர் ஒரு விமானி என்ற முறையில்தான் மக்களுக்கு அறிமுகமாகியிருந்தார். அனைவரும் மனமொப்பி ஏற்கக் கூடிய தலைவரைத் தேர்ந்தெடுக்க எதிர்க்கட்சிகளிடையே ஒற்றுமை உணர்வும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் தேவை'' என்றார் தி. மு. க. தலைவர்.

— ஹிந்து. மே. 30, 1988.

யும், அதன் மூலம் பிறக்கின்ற லஞ்சமும் தான் அதிகரிக்கின்றன. ஒரு கட்சி ஆட்சியிலேயே கொள்கைத் தடுமாற்றம் ஏற்படுகின்றது. அவ்வாறிருக்க, வெவ்வேறு கொள்கைகளையுடைய கட்சிகளின் கூட்டணி ஒரு வேளை தேர்தலில் வெற்றி பெறலாம்; ஆட்சியில் எவ்வாறு வெற்றி பெற முடியும்? எனவே முக்கியமான பல அம்சங்களிலேனும் கொள்கைகளில் ஒற்றுமை காண முடியுமா, அனைவரும் ஏற்கக் கூடியதான செயல் திட்டம் வகுக்க முடியுமா என்று இவர்கள் பார்க்க வேண்டும். இந்த அடிப்படையில் கூட்டணி அமையுமேயானால், பங்கு கொள்ளும் கட்சிகள் ஒன்றை ஒன்று கண்காணித்துக் கொண்டு ஓரளவுக்காவது தடுமாற்றம் இல்லாத ஆட்சி அமைக்க முடியும்.''

''சரி, 'தாங்கள் ஏற்கெனவே பாடம் கற்றுக் கொண்டு விட்டோம்; இனி அம்மாதிரி நடக்க விட மாட்டோம்' என்று இந்தக் கட்சித் தலைவர்கள் உறுதி எடுத்துக் கொள்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம்......''

''அந்த உறுதி மட்டும் போதாது. முற்போக்கான திட்டம், பொருளாதாரச் சீர்திருத்தங்கள், சமுதாய மாற்றத்துக்கான தீவிர நடவடிக்கைகள் ஆகிய லட்சியங்களை அடிப்படையாகக் கொண்ட, ஒரு முற்போக்கான கூட்டணி அமைந்தால்தான் ராஜீவ் காந்தியின் ஆட்சியை மாற்ற முடியும். அத்தகைய கூட்டணி ஸ்திரமாக ஆட்சி நடத்துவதற்கு மக்களின் ஆதரவைப் பெறுவதும் அப்போதுதான் சாத்தியமாகும்.''

''வலது, இடது கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் பங்கு கொண்டு, உருப்படியாகக் கொள்கைகளும் திட்டங்களும் உருவாக உதவியிருக்கலாமே?''

''இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் இந்த 'அவியல் கூட்டணி'யிலிருந்து ஒதுங்கி நிற்பதே இடது சாரி சக்திகளைப் பற்றி மக்களுக்குக் கௌரவமான அபிப்பிராயம் ஏற்பட உதவியிருக்கும் என்பது என் கருத்து! இவர்கள் கூடுவதே யார் அடுத்த பிரதமர் என்று சர்ச்சை செய்யவே ஒழிய, என்ன கொள்கை, என்ன அரசியல் திசைவழி என்பதைப் பற்றி அவர்களுக்குத் தெளிவான கருத்துக்கள் இருக்க முடியாது. ஏனென்றால், காங்கிரஸ் பின்பற்றுகின்ற தேசியக் கொள்கையைக் காட்டிலும் பிற்போக்கான, முதலாளித்துவ நிலப் பிரபுக்களின் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவையாகும் இந்தக் கட்சிகள். ஆகவேதான் காங்கிரசை இவர்களால் முறியடிக்கவும் முடியவில்லை; முறியடித்தாலும் நீடிக்க முடியவில்லை!''

''மக்களின் அன்றாடப் பிரச்னைகள் பல தீர்க்கப்படாத போதிலும், இத்தனை ஆண்டுகள் தொடர்ந்து காங்கிரஸ் ஆட்சி செய்வதை மக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என்றால், என்ன காரணம்?''

''காங்கிரசின் பொருளாதாரக் கொள்கையின் காரணமாக விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற வேதனைகள் அதிகரித்த போதிலும், வேறு சிறந்த மாற்று அணி இல்லாத காரணத்தால் தான் காங்கிரசே மத்தியில் ஆட்சிக்கு வருவது சாத்தியமாகிறது. எதிர்க்கட்சிகளின் கொள்கைகளை, இத்தகைய மக்கள் பிரச்னைகளுக்கு நம்பிக்கை ஊட்டக் கூடிய மாற்றாக மக்கள் மதிக்கவில்லை. அத்துடன் காந்திஜி, நேரு, இந்திரா காந்தி போன்றவர்களுடைய பாரம்பரிய அபிமானமும் காங்கிரசுக்கு ஒரு கூடுதல் சக்தியாக இருந்து வருகிறது. காங்கிரசை எதிர்க்கின்ற கட்சிகள் பெரும்பாலானவை, விடுதலைப் போராட்ட காலத்தில் பங்கு பெறாத கட்சிகளையும் தலைவர்களையும் சேர்ந்தவையாகும். இதில் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள் மட்டும் விதிவிலக்கு.

பேட்டி: சாருகேசி


டீ உலகில் உயர் வட்டம்
சக்கரா டீ
உயர் வகுப்பினர் பாராட்டும்
தேநீர்ச் செல்வம் சக்கரா டீ.
சொகுசான சுவைமண, திட
குணங்களின் முழுமை
வட்டம். தேநீரிலே
சுக போகத்தின் உயர்
வட்டம்: சக்கரா டீ.
உயர் வட்ட ரசிகர்களுக்கு
உயர் வளமுள்ள தேயிலை
சக்கரா டீ
CHAKRA
PREMIUM
DUST TEA
டாட்டா டீ லிமிடெட்
உலகிலேயே மிகப்பெரிய டீ கம்பெனி.
daCunha/TT/246/87/TM





என். டி. ஆர். கூட்டிய பத்துக் கட்சிகள் மாநாட்டில் கலந்து கொண்ட முக்கியமான கட்சிகளுள் ஒன்று ஜனதா. அதன் தமிழகத் தலைவரைச் சந்தித்த போது.....

"எதிர்க்கட்சிகள் ஒற்றுமைக்கு மூன்று வழிகள்!"

நிருபர்: எதிர்க்கட்சிகள் ஒன்றுபடுவது என்பது சாத்தியமானதா?

செழியன்: சாத்தியமே. இதற்கு மூன்று விதமான வழிகள் உள்ளன. எது சிறந்தது என்று பார்க்க வேண்டும். முதலாவது, எதிர்க்கட்சிகள் அனைத்தும், ஒன்றாய் இணைந்து, ஒரே எதிர்க்கட்சியாய் மாறுவது. இப்போதுள்ள சூழ்நிலையில், எதிர்க்கட்சிகள், ஒரே கட்சியாய் உருவெடுத்து, ஆட்சியைப் பிடித்தாலும், 1977—ல் நடந்தது மறுபடி நடக்காது என்பதற்கு எந்த வித உத்திரவாதமும் இல்லை. எனவே, இந்த முயற்சியினால் நல்ல பலன்கள் விளையுமென்கிற நம்பிக்கை எனக்கு இல்லை. அடுத்தபடியாய், தேர்தலுக்காக மட்டும் ஒருவித உடன்பாட்டிற்கு வருவது. இதன் மூலம், எதிர்க்கட்சிகள், ஒன்றாய் இணையாவிட்டாலும், எதிர்க்கட்சிகளின் வோட்டுக்கள் சிதறாமல் தடுத்து விடலாம். இதனால் காங்கிரஸ் கட்சியைத் தோல்வி காணச் செய்வது சுலபமாகி விடும்.

நிருபர்: அப்படியெனில் காங்கிரஸைத் தோற்கடிப்பது மட்டுமே எதிர்க்கட்சிகளின் லட்சியமா?

செழியன்: அது மட்டுமே லட்சியமாக இருக்கக் கூடாது. எனவே இந்த இரண்டாவது வழிமுறையும் எனக்கு உடன்பாடானதல்ல. இது நெகடிவ் அப்ரோச். காங்கிரஸ் தோற்று விட்டால்... அப்புறம்... ஆட்சி அமைக்கப் போவது யார்? ஆட்சி எப்படிப் பட்டதாய் இருக்கும் என்று பொது மக்களுக்குக் குழப்பம் ஏற்படும்.

நிருபர்: அப்படியெனில் பாசிடிவ் அப்ரோச் என்ன?

செழியன்: அதுதான் மூன்றாவது வழிமுறை. குறைந்தபட்சக் கொள்கை மற்றும் செயல் திட்டம் ஒன்றை நிர்ணயித்துக் கொள்வதுதான் அது. இந்திய சரித்திரத்தில் ஜனதா ஆட்சிக் காலத்தில்தான் விலைவாசி கட்டுப்பாட்டில் இருந்தது; அண்டை நாடுகள் அனைத்துடன் உறவு சுமுகமாய் இருந்தது. எனவே வெவ்வேறு கட்சிகளின் கொள்கைகள் எப்படிப்பட்டவையாய் இருப்பினும், பொருளாதாரம், பாதுகாப்பு, அயல்நாட்டு உறவு போன்ற முக்கியமான அம்சங்களில் ஒரு பொதுவான கொள்கையை வகுத்துக் கொள்ள முடியும். அது போதும். அந்தக் கொள்கைகளின் அடிப்படையில் முன்னேற்றத் திட்டங்களைத் தீட்டி, அறிவிக்கலாம். ஊழல் இல்லாத ஆட்சியைத் தருவதாக வாக்குறுதி அளிக்க வேண்டும். அதிகாரங்கள் மிகப் பரவலாய் ஆக்கப்படும், விவசாயிகளின் பிரச்னைகள் அனுதாபத்துடன் கவனிக்கப்படும் என்று எல்லா எதிர்க் கட்சிகளும் ஒப்புக் கொள்ளக் கூடிய கொள்கைகளைப் பட்டியலிட்டு அறிவிக்கலாம். மக்கள் தொகையில் விவசாயிகள் எழுபது சதவீதம். ஆனால் தேசிய மொத்த வருமானத்தில் இவர்களின் பங்கு முப்பது சதவீதம்தான். ஆனால் மக்கள் தொகையில் முப்பது சதவீதமே உள்ள தொழில் துறையினரிடம், வருமானத்தில் எழுபது சதவீதம் உள்ளது. இந்த வித்தியாசத்தால்தான், வாங்குவதற்குக் கடையில் பொருட்கள் இருந்தால் கூட, விவசாயியிடம் வாங்கப் பணமில்லை. பொருளாதாரமும் எதிர்பார்த்த வேகத்தில் முன்னேற முடியவில்லை. இந்தப் பிரச்னைகளையும் அதற்கான தீர்வுகளையும் மக்களிடம் விளக்கி எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும்.

நிருபர்: எதிர்க்கட்சிகளுக்கு இன்னொரு வாய்ப்புக் கொடுத்தாலும், அது முந்தைய ஜனதா பரிசோதனை போல படுதோல்வி அடையாது என்பதை மக்களுக்கு எப்படி உணர்த்துவீர்கள்?

செழியன்: அதற்குச் சிறந்த தலைவர்களை மக்களின் கவனத்துக்குக் கொண்டு வருவதுதான் வழி. ஹெக்டே, வி.பி. சிங், பகுகுணா போன்றவர்கள் நிர்வாகத் திறன் படைத்த, அனுபவமுள்ள, நல்ல தலைவர்கள். இவர்களை முன் வைத்துப் பிரசாரம் செய்தால் நல்ல கொள்கைகள், செயல் திட்டங்கள் தவிர, நிலையான ஆட்சியும் கிடைக்கும் என்று மக்களுக்கு நிச்சயம் நம்பிக்கை ஏற்படும்.

பேட்டி: **எஸ். சந்திரமௌலி.**

அட்டை வண்ணப்படங்கள்: **யோகா**

புகைப்படங்கள்: **சுபா**



சென்னையில் மீண்டும் குதிரைப் பந்தயம் துவங்கப்படுகிறது



கல்கி

1988 ஜூன் 19
மலர் 46 இதழ் 47
விபவ ஆனி 5



தமிழக அரசின் தமிழ்த் துரோகம்!

நூல்களை விலை கொடுத்து வாங்க முடியாத லட்சோப லட்சம் மக்களுக்கு நூலகங்கள் மிகச் சிறந்த சேவை செய்ய முடியும். புதுப் புத்தகங்களை வாங்கி அடுக்கி மக்களை ஈர்க்க வேண்டும்., நூலகர்கள் மக்களை வரவேற்று, அவர்களுடன் பேசி, கருத்தறிந்து, நூல்களை எடுத்துக் கொடுத்துப் படிக்கச் செய்து, உற்சாகப்படுத்த வேண்டும். இதுதான் நூலக இயக்கம். ஆனால் இங்கு நடப்பது என்ன?

தமிழக அரசு கல்வித் துறைக்குச் செலவிடும் தொகை ஆண்டொன்றுக்கு 577 கோடி. இதில் நூலகங்களுக்குச் செலவிடப் படும் தொகை ஐந்து கோடிதான். அதாவது ஒரு சதவிகிதத்துக்கும் குறைவு. அதுதான் போகட்டும் அந்த ஒரு சதவிகிதமாவது ஒழுங்காகச் செலவாகிறதா? ஐந்து கோடியில் இவர்கள் நூல்கள் வாங்கச் செலவிடும் தொகை கேவலம் எழுபத்திநாலு லட்சமே! பாக்கி நாலு கோடியே இருபத்தாறு லட்சமும் கட்டடங்கள் கட்டவும், பழுது பார்க்கவும், ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கவுமே சரியாகப் போய் விடுகிறதாம்! இது தமிழக அரசின் தன்னிரகற்ற நியாயமாகத்தான் இருக்க வேண்டும். போகட்டும், 'கட்டடம் இல்லாமல் நூல்களை எங்கே வைப்பதாம்?' என்று நம்மை இவர்கள் திரும்பக் கேட்கக் கூடும். ஆனால் பல நூலகக் கட்டடங்கள் கடைகளுக்கு வாடகைக்கு விடப்படுவதைப் பார்க்கும்போது இவர்களுடைய நோக்கம் என்ன என்பது மறைந்த தமிழ்வாணன் திரும்பி வந்தாலும் விடுவிக்க முடியாத மாபெரும் மர்மமாய் இருக்கிறது.

தமிழ்நாட்டில் தமிழக அரசு செய்யும் இன்னொரு தமிழ்த் துரோகத்தைப் பற்றியும் சொல்லியாக வேண்டும். நூலகங்களுக்குத் தமிழ் நூல்களை வாங்கினால் பதிப்பாளர்கள் பதினைந்து சதம் தள்ளுபடி செய்துதர வேண்டும். அதுவே ஆங்கில நூலென்றால் பத்து சதம் தள்ளுபடி செய்து கொடுத்தால் போதுமாம்! தவிர, 'தமிழ் நூல்களுக்கு ஒரு ஃபாரத்துக்கு ஒரு ரூபாய் பத்து பைசாதான் விலை தருவோம்' என்ற உச்ச வரம்பை அரசு விதித்திருக்கிறது. புத்தகத்தின் விலை என்னவாயிருந்தாலும் சரி, அரசு நிர்ணயித்துள்ள இந்த விலைக்குத்தான் வாங்குவார்கள்; அதில் பதினைந்து சதம் கமிஷனும் தரவேண்டும். ஆங்கில நூல்களுக்கு இத்தகைய விலை உச்ச வரம்பு எதுவுமே கிடையாது. என்ன விலை வைத்தாலும் மறுப்பின்றி அரசு வாங்கிக் கொள்ளும்! 'அட, ஆண்டவனே! சுதந்திரம் பெற்று நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகுமா இந்த ஆங்கில அடிமைப் புத்தி' என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? இன்னும் கேளுங்கள்!

தமிழகத்திலுள்ள மொத்தமுள்ள நூலகங்கள் 1525. இவற்றில் ஒரு நூலகத்துக்கு ஒரு புத்தகம் என்றால் கூட ஆயிரத்து ஐந்நூறு பிரதிகளுக்கு ஆர்டர் கொடுக்கலாம். ஆனால் தமிழக அரசு கேவலம் முந்நூறு பிரதிகளுக்கு மட்டுமே ஒரு புத்தகத்துக்கு ஆர்டர் தருகிறது.

லைப்ரரி செஸ் என்று மாநகராட்சிகளும் நகர சபைகளும் மக்களிடம் சொத்து வரியுடன் சேர்த்து வசூலிக்கின்றன. ஆனால் நூலக இயக்கத்துக்குப் பயனாக வேண்டிய இந்தத் தொகையில் ஒரு பைசா கூட அதற்கென்று செலவாவதில்லை. எல்லாம் ஜோதியில் கலந்து மறைந்து விடுகின்றன!

இந்தச் சங்கடங்கள், ஏக்கங்கள், ஏமாற்றங்கள் எல்லாம் சராசரித் தமிழ் எழுத்தாளருக்குத்தான். செல்வாக்கு மிக்க பெரியசாமிகளுக்கும் ஒரு சிறுசான சாமிகளுக்கும் கவலை இல்லை. அவர்களுடைய படிக்கப்படாத நூல்களை ஆயிரம் பிரதிகள் ஸ்பெஷல் ஆர்டர் போட்டு அரசு வாங்கிக் கொள்ளும். நூலகங்களில் வைத்து நூலாம்படை சேர அனுமதிக்கும்! மாஜி ஆளுனரின் தலைமையுரைகள் அடங்கிய ஆங்கில நூலானால் அதன் விலை 130 ரூபாயானாலும் சரி, இரண்டாயிரம் பிரதிகள் வாங்கி வைத்து சூடம், சாம்பிராணி காட்டிக் கன்னத்தில் போட்டுக் கொள்ளும்!

நூல்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் தமிழ் எழுத்தாளரோ அல்லது விமர்சகரோ அல்லது வாசகர் பிரதிநிதியோ கிடையாது! டெக்னிகல் எஜுகேஷன் டைரக்டரும், மருத்துவத் துறை இயக்குனரும் உட்கார்ந்து கொண்டு நீங்களும் நானும் என்ன படிக்க வேண்டும், எதைப் படிக்கக் கூடாது என்று நிர்ணயிக்கிறார்கள்! எத்தகைய நூல்களை வாங்குவது என்பதிலும் குழப்பம். ஓர் அமைச்சர், 'ஜோசியம் மற்றும் சமையல் குறிப்புக்களை வாங்கு' என்றார். அடுத்து வந்தவர், 'அறிவியல் நூல்கள்' என்றார். மூன்றாவதாக இன்று கல்வி இலாகாவைக் கவனிப்பவர், 'நாவல் வாங்கலாம்; ஆனால் ஆண் பெண் சந்திப்பு கூடாது' என்கிறார்! மறு பதிப்புக்களை வாங்கக் கூடாது என்று ஒரு மூடக் கொள்கை வேறு! நூலக இயக்குனர் நூலக விஞ்ஞானம் படித்தவரா, அறிந்தவரா என்பது பற்றி யாருக்கும் கவலை கிடையாது! தனி மனிதர்களுக்காகப் பல்வேறு தமிழ்த் துறைகள் உருவாக்கப்பட்டது போல் இதுவும் வேண்டப்பட்டவரை உட்கார்த்தி வைக்க ஒரு பதவி நாற்காலியாகி விட்டது. இந்தச் சூழ்நிலையில் நூலக இயக்கம் தமிழகத்தில் எப்படி உருப்படும்?

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

காஞ்சிப் பெரியவர் கலைஞருக்கு வாழ்த்துச் சொன்னது பற்றி...?



* பொது வாழ்வில் பொன்விழா.

நீங்கள் கேட்டவை — தராசு

* எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? 'மத்திய அரசால் புதிதாகத் துவங்கப்படும் நிறுவனங்களின் பெயர்கள் இந்தியிலேயே இருக்க வேண்டும்' என்ற மத்திய அரசின் உத்தரவு பற்றி?

! ஒருமைப்பாடு உணர்வுக்கு மேலும் ஓர் அடி! இந்தி ஏகாதிபத்திய உணர்வுக்கு மேலும் ஒரு ஷொட்டு!

* ஆற்காடு எழிலன், திருச்சி — 2.

? தற்சமயம் மக்களுக்குக் கேட்காமல் கிடைப்பது எது?

! அரசியல்வாதிகள் கொடுக்கும் தேர்தல் வாக்குறுதிகள்தாம், வேறென்ன?

* ஆர். முரளி, மயிலாடுதுறை.

? 'ஜெயலலிதாவைப் பிடிக்காமல்தானே அப்போது கட்சியை விட்டு வெளியேறினீர்கள். இப்போது ஜெயலலிதாவையே ஆதரிக்கிறீர்களே' என்று யாராவது எஸ். டி. எஸ்ஸிடம் கேட்டால்?

! இது மாதிரியான அசிங்கம் பற்றிய அவமானங்களெல்லாம் நம்மைப் போன்றவர்களுக்குத்தான். அரசியலில் இல்லை நண்பரே இல்லை!

* பி. எல். பரமசிவம், மதுரை — 1.

? சமீபத்தில் யாருடைய செயல் உங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது?

! பல்லவன் பஸ் நிர்வாகத்தினர் செயல். பாம்குரோவ் ஹோட்டல் வழியாகச் செல்லும் பஸ்களில் வள்ளுவர் கோட்டத்தில் ஏறி சாந்தி தியேட்டரில் இறங்கினால் எழுபது பைசா. இடையில் அப்பல்லோ மருத்துவமனைக்கும், தாஜ்கோரமண்டல் ஸ்டார் ஹோட்டலுக்கும் குடிநீர்க் குழாய்கள் இணைக்கும் பணி நடைபெற்றதால் பாம்குரோவ் ஹோட்டல் வழியாகச் செல்லும் பஸ்களெல்லாம் சுமார் இரண்டு வார காலத்திற்குமேல் வேறு வழிகளில் திருப்பி விடப்பட்டன. அதற்காகப் பயணிகளிடம் பத்து பைசாவை அதிகக் கட்டணமாக வசூலித்தார்கள். திருப்பி விட்டது பொது மக்களின் குற்றமா? அல்லது அப்பல்லோ மருத்துவமனையும், அந்த ஸ்டார் ஹோட்டலும் பஸ்ஸில் செல்லும் சாதாரண மக்களுக்கு எந்த விதத்திலாவது பயன்படப் போகிறதா? இந்த நிலையில் பொது மக்களிடம் அதிகக் கட்டணம் வசூலித்தது அக்கிரமமில்லையா?

* சு. தியாகராசன், நெய்வேலி.

? கலைத்துறையிலும் வரலாறு படைத்துப் பொது வாழ்விலும் பொன்விழாக் காணும் கலைஞர் பற்றி?

! இந்தக் கேள்விக்கு நான் சொல்லும் பதிலைவிட வரப்போகும் தேர்தலில் தமிழக மக்கள் சொல்லப் போகும் பதில் தான் முக்கியமானதாக இருக்க முடியும். அதற்கே காத்திருப்போம்.

* எஸ். தங்கராஜு, சென்னை — 35.

? 'அண்ணா ஆட்சியமைப்போம்' என்கிறார் கலைஞர். 'காமராஜர் ஆட்சி அமைப்போம்' என்கிறார் மூப்பனார். 'எம். ஜி. ஆர். ஆட்சி அமைப்போம்' என்கிறார்கள் ஜெயலலிதாவும் ஜானகியும். கடைசியாக யாருடைய ஆட்சி தமிழகத்தில் அமையும் என்கிறீர்கள்?

! ஆகக் கூடி யாருமே மக்கள் ஆட்சியை அமைக்க மாட்டார்கள் போல் இருக்

கிறதே!

* எம்.குணசேகரன் ,வேலாயுதம்பாளையம்

? இந்தித் திரையுலகின் முடிசூடா மன்னரான ராஜ்கபூர் மறைவு குறித்து?

! ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் கே. ஏ. அப்பாஸுடன் இணைந்து ஆவாரா, பூட்பாலிஷ், ஸ்ரீ — 420; ஜாக்தே ரஹோ முதலிய சமுதாய நோக்குக் கொண்ட திரைப் படங்களைத் தயாரித்த ராஜ்கபூரைக் கேட்கிறீர்களா, அல்லது மனிதாபிமானம், நட்பு இவற்றை உன்னதமாகச் சித்திரித்த மேரா நாம் ஜோக்கர், பாபி, சங்கம் போன்ற படங்களைத் தயாரித்த ராஜ்கபூரைக் கேட்கிறீர்களா, இல்லை கவர்ச்சியையும் கண்ணியமாகக் கலையழகோடு காண்பிக்க முடியும் என்று நிரூபித்த ராஜ்கபூரைப் பற்றிக் கேட்கிறீர்களா? எப்படியானாலும் மறக்க முடியாதவர் அவர்.

* பாபுகுமார், பெங்களூர் — 21.

? கலைஞருக்குக் காஞ்சிப் பெரியவர் பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்திருப்பது எதைக் காட்டுகிறது?

! ஒரு நல்ல முன்னுதாரணத்தை.

* போடி ப்ரியபாரதி, சென்னை — 26.

? பாம்பன் பாலத்திற்குப் பாரதியின் பெயரை வைக்கச் சொல்லி ஜெயலலிதா ராஜீவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளாரே?

! சமீப காலத்திய அவருடைய பல பிதற்றல்களைக் கொஞ்சம் மறந்துவிட்டு இந்த யோசனைக்காக ஜெயலலிதாவை மனம் திறந்து பாராட்டுகிறேன்.

* ஆர். சாந்தகுமாரி, சீர்காழி.

? 'நான் வசிக்கும் தஞ்சை மாவட்டம் மிகவும் வறட்சியாக இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் தஞ்சை மாவட்டத்தைத் தொழில் மயமாக்குவோம்' என்று மூப்பனார் கூறியிருக்கிறாரே?

* ரூ. 15 பரிசு பெறுபவர்:
எஸ். தங்கராஜு,
கோழி இன ஆராய்ச்சி நிலையம்,
நந்தனம், சென்னை — 35.

! தஞ்சையில் விவசாயம் தவிர தொழில் வளமும் பெருக வேண்டியது தவிர்க்க முடியாதது; காலத்தின் கட்டாயம். அதில் கவனம் திரும்பியிருப்பது வரவேற்கத்தக்க விஷயம். ஆனால் தேர்தல் வாக்குறுதிகளுக்கும், நிறைவேறுகிற திட்டங்களுக்கும் இடையில் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசங்கள் இருப்பதைக் கண்டு வரும் நாம் மூப்பனாரின் அறிக்கையை மெலிதான ஏளனப் புன்னகையோடுதான் ஏற்க வேண்டியிருக்கிறது.

* எம். முஹம்மது பஜ்ருதீன்.

? அமரர் கல்கியின் பொன்னியின் செல்வன் — கலைஞரின் பொன்னர் — சங்கர்; ஒப்பிடுங்கள்?

! இரண்டு பேருமே தஞ்சை மாவட்டத்துக்காரர்கள். இரண்டு கதைகளுமே 'பொ' என்ற எழுத்தில் ஆரம்பிக்கிறது. இருவரின் பெயரும் 'க'வில் ஆரம்பிக்கிறது. இருவரின் கதைகளைப் போட்டாலும் ஆச்சரியப்படும் அளவுக்குப் பத்திரிகை விற்பனை அதிகரிக்கிறது.

* இடலை சுதா, குளத்தூர்.

? தேர்தல் பிரசாரத்தில் தி. மு. க. வுக்கு ஆதரவாக டி. ராஜேந்தருடன் தானும் பிரசாரம் செய்யப் போவதாக அவரது மகன் சிலம்பரசன் கூறியிருப்பது பற்றி?

! 'தி. மு. க. வுக்குப் போடுங்கள் வோட்டு! மற்றவருக்கு வையுங்கள் வேட்டு' என்றா? ஆக, தேர்தல் பிரசாரக் கூட்டங்களெல்லாம் சிறுபிள்ளைத்தனமாக இருக்கிறது என்பதற்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டு.

* தட்டிக் கேட்டால்?......



* முடிசூடா மன்னர்.



* தஞ்சையில் தொழில்வளம்



* பாரதி பாலம்



வ.உ.சி. மாவட்ட ரீ—விசிட்

பாதிக்குப்பாதி பழுதில்லை...



ஸ்ரீவைகுண்டம் கோவில்: திருப்பணி துவங்கி விட்டது...

வ. உ. சி. மாவட்டப் பிரச்னைகளைக் கடந்த 25.10.87, மற்றும் 1.11.87 தேதியிட்ட இரண்டு கல்கி இதழ்களிலும் விரிவாக வெளியிட்டிருந்தோம். அந்தப் பிரச்னைகள் எந்த அளவிற்குத் தீர்க்கப்பட்டுள்ளன என்பதை நேரில் கண்டறிய, இப்போது 'ரீ — விசிட்' செய்தோம். இதோ நமது ரீ — விசிட் ரிப்போர்ட்......

முதலில் தீர்க்கப்பட்டுள்ள பிரச்னைகளைப் பார்ப்போம்...

•• 'தடைப்பட்டுக் கிடக்கும் தமிழக முன்னேற்றம்' என்ற தலைப்பில் தூத்துக்குடி துறைமுகம் ஆழப்படுத்தப்படாததால், ஏற்பட்டுள்ள தொழில் தொய்வுகளைப் பற்றி விரிவாக எழுதியிருந்தோமல்லவா! இப்போது துறைமுகத்திற்கு வந்து செல்லும் கப்பல்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. ஏற்றுமதியில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சரக்குகளைக் கையாளும் திறனிலும் இரண்டு சதம் அதிகரித்திருக்கிறது. கணிசமான அளவுக்குப் பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பளித்ததற்காக இத்துறைமுகம் கடந்த ஆண்டில் மாநில அரசின் விருதையும் பெற்றுள்ளது. இருப்பினும் ஆழப்படுத்துவதற்கான பணிகள் மட்டும் இன்னமும் துவக்கப்படாமல்தான் இருக்கின்றன என்பதுதான் வருத்தமடையச் செய்கிறது.

•• ஸ்ரீவைகுண்டம் அருள்மிகு வைகுண்டபதி கோவில் இராஜகோபுரம் இடிந்து போனதிற்குத் திருப்பணி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டிருந்தோம் அல்லவா? தற்போது, இந்த இராஜகோபுரத்தைப் புதுப்பிக்கும் திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

•• ஸ்ரீவைகுண்டத்திலுள்ள குமரகுருபர சுவாமிகள் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 'வேதியியல்' ஆசிரியர் நியமிக்கப்படவில்லை என்று எழுதியிருந்தோமல்லவா? தற்போது அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

•• கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சாக்கடை வெளியேற வடிகால் கட்டும் பணிக்காக 4.68 லட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மதுரையிலுள்ள பொதுப்பணித்துறை சிறப்புக் கட்டடக் கண்காணிப்புப் பொறியாளருக்கு 15.12.1987 — இல் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், மருத்துவமனையில் இரண்டு நிலத்தடிக் கூழாய்கள் அமைக்கப்பட்டு, தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனையில், தற்போது மாதந்தோறும் இரண்டாவது வியாழக்கிழமையில் பி. ஸி. ஜி. ஊசிகள் போடப்படுகின்றன! மேலும் திருச்செந்தூர் தாலுகாவில் முகாம் செய்து, கிராமம் கிராமமாகச் சென்று பி. ஸி. ஜி. தடுப்பு ஊசி போடப்பட்டு வருகிறது. இதுதவிர, மாவட்டத்திலுள்ள கோவில்பட்டி, சாத்தான்குளம், திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் விளாத்திகுளம், ஓட்டப்பிடாரம் — ஆகிய தாலுகா மருத்துவமனைகளிலும் மாதம் ஒரு முறை குறிப்பிட்ட நாளில் பி. ஸி. ஜி. தடுப்பு ஊசி போடப்படுகிறது.

•• தூத்துக்குடி அரசினர் தலைமை மருத்துவமனையில் கடந்த 15.7.1987 — இல் நீரிழிவுப் பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டு 1.12.1987 முதல் நீரிழிவு நோயாளிகளுக்குத் திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்



கிழமைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், மருத்துவமனை வளாகத்தில் புதிதாகக் கட்டப்பட்ட 260 படுக்கைகள் வசதி கொண்ட மூன்று மாடிக் கட்டடத்தில், தற்போது 104 படுக்கை வசதி கொண்ட தரைப் பகுதி மட்டும் 25.1.88 முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மற்றவற்றிலும் குறையாக நிற்கும் பணிகளை நிறைவேற்றப் பொதுப் பணித்துறையினரால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

•• பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள பழைய கட்டபொம்மன் கோட்டையைச் சுற்றிப் போடப்பட்டுள்ள வேலிக்குள் முன்பு போல தற்போது பார்வையாளர்களை அனுமதிப்பதில்லை! மேலும், பாஞ்சாலங் குறிச்சி கட்டபொம்மன் கோட்டையைப் பார்க்க வருபவர்களுக்குப் பாஞ்சாலங் குறிச்சி போர் நடந்ததைக் காட்டும் சான்றாக விளங்குகின்ற ஆங்கிலேயர் கல்லறை எங்கிருக்கின்றது என்ற குறையைத் தீர்க்கும் வகையில், ஒட்டப்பிடாரத்தை யொட்டி, பாஞ்சாலங்குறிச்சி விலக்கு ரோட்டில் ஓர் அறிவிப்புப் பலகையும் சுற்றுலாத் துறையினரால் எழுதி வைக்கப்பட்டுள்ளது.

•• பாரதி நூற்றாண்டு விழா நினைவு மகளிர் தொழில் நுட்பக் கல்லூரிக்காகக் கையகப்படுத்தப்பட்ட நாற்பது ஏக்கர் நிலத்துக்கும் அதன் சொந்தக்காரர்களுக்கு இழப்பீட்டுத் தொகை கொடுக்கப்பட்டுவிட்டது.

•• வடக்கு ஆத்தூரில் உள்ள ஷேக் சாகுல் ஹமீதுக்கு 28.10.87 அன்று சமூக நலத் துறையினரால் காது கேட்கும் கருவி வழங்கப்பட்டுவிட்டது.

இப்படி ஏராளமான பிரச்னைகள் தீர்க்கப்பட்டிருந்தாலும் இன்னும் தீர்க்கப் படாத பிரச்னைகளும் நிறைய இருக்கின்றன. அதுபற்றிக் கலெக்டரிடம் எடுத்துச் சொன்னோம். கலெக்டர் ஆறுமுகம் முன்பிருந்த அதே கலெக்டர்தான்.

"வ. உ. சி. யின் கொள்ளுப் பேத்தி உமா மகேஸ்வரிக்கு இன்னும் ஒரு வேலை போட்டுக் கொடுக்கவில்லையே...?'' — முதல் கேள்வியைத் தொடங்கினோம்.

"அவர் வேலை விஷயமாக, அரசுக்கு நாங்கள் அனுப்பிய கடிதத்திற்கு அரசுத் தரப்பிலிருந்து வந்துள்ள பதிலில், 'உமா மகேஸ்வரிக்கு அரசு வேலை தர இயலாது!' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதில், காரணம் என்ன என்று குறிப்பிடப் படவில்லை! எனினும், அவர் அரசுக்கு மீண்டும் விண்ணப்பித்துப் பார்க்க



* தூத்துக்குடி சேர்மன்: பெரியசாமி.

லாம். தனியார் துறை எதிலாவது அவர் வேலை பார்க்க விரும்பினால், அவருக்காக நானே தனிப்பட்ட முறையில் சிபாரிசு செய்யவும் தயாராக இருக்கிறேன். அரசு வேலையைப் பொறுத்தமட்டில், அரசு அனுமதியின்றி என்னால் எதுவும் செய்ய முடியாது.''

"திருச்செந்தூர் தாலுகாவிலுள்ள சொக்கப் பழங்கரை என்னும் ஊரில் சேதுக்கு வாய்த்தான் என்று ஒரு குளம் உள்ளது. அதற்கு ஆத்தூர்க்கால்வாயிலிருந்து மாவடிப் பண்ணை என்ற இடத்தில் பிரியும் வாய்க்கால் மூலம் தண்ணீர் வரவேண்டும். அவ் வாய்க்கால் தூர்ந்து போனதால் தண்ணீர் வராததையும், அதனால் சுமார் 2500 ஏக்கர் வெற்றிலைக் கொடிக்கால் நீரின்றிப் பாதிக்கப்படுவதாகவும் முன்பு குறிப்பிட்டிருந்தோமே... அதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?''

"முன்பு நீங்கள் இங்கு வந்தபோது, கடுமையான வறட்சி நிலவிய நேரம். தற்போது நல்ல மழை பெய்துள்ளதால் நிலைமை சீரடைந்துள்ளது. தூர்ந்து போன நீர்நிலைகளை ஆழப்படுத்திக் கொண்டு தான் இருக்கிறோம். மேலும், ஐரோப்பிய



* தூத்துக்குடி துறைமுகம்: ஏற்றுமதி அதிகரித்துள்ளது.



• கலெக்டர் ஆறுமுகம்.

பொருளாதார அமைப்பு நிதியுதவியோடு சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள பாசனக் குளங்களெல்லாம் நவீனப்படுத்தப்படவிருக்கின்றன."

"ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனைக் காம்பவுண்ட் அருகிலேயே பேரூராட்சி குப்பை கொட்டுவது இன்னும் தொடர்கிறதே...?"

"இன்னும் பதினைந்தே நாட்களில் அக்குப்பைகளை அகற்றி, வேறு இடத்தில் கொட்டுவதற்கு உத்தரவிடுகிறேன்."

"ஸ்பிக்கிற்குத் தொடர்ந்து தண்ணீர் அளிப்பதால்... நிறைய நீர் வீணாவதாக விவசாயிகள் சொல்கிறார்களே?"

"ஸ்பிக் மற்றுமுள்ள தொழிற்சாலைகளுக்குத் தற்போது திறந்தவெளிக் கால்வாய் மூலம் தண்ணீர் சப்ளை செய்வதால், நிறையத் தண்ணீர் விரயமாகிறது என்பது உண்மைதான். எனவே, அதற்குப் பதிலாக 'பைப்' மூலம் தண்ணீர் சப்ளை செய்யத் திட்டமிட்டிருக்கிறோம். இதனால், எல்லோருக்கும் போதிய அளவிற்குத் தண்ணீர் கிடைக்குமல்லவா?"

"திருச்செந்தூர், இம்மாவட்டத்திலுள்ள ஒரு முக்கியமான சுற்றுலாத் தலமாகும். ஆனால், அங்குள்ள மக்களுக்குப் போதிய குடிதண்ணீர் வசதி, சாக்கடை வசதி, சாலை வசதி, மின்சார வசதிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லையே?

"திருச்செந்தூரிலுள்ள எல்லாப் பிரச்னைகளுக்கும் திட்டங்கள் தீட்டப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அரசின் பரிசிலனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. விரைவில் திருச்செந்தூரிலுள்ள பிரச்னைகள் தீர்க்கப்படும். மேலும், அங்குள்ள மின்சார 'சப்ளை'யிலுள்ள கவனக்குறைவுகளுக்கு, நானே நேரில் சென்று விசாரிக்கிறேன்."

"கோவில்பட்டியிலிருந்து கழுகுமலை செல்லும் பதினைந்தாம் எண் டவுன் பஸ்ஸின் நேரம் பள்ளி மாணவ, மாணவிகளின் வசதிக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்டு விட்டதா...?"

"இவர்கள் சொல்கிற நேரத்தில் அந்த பஸ் வெள்ளாங்கோட்டை வழியில் செல்கிறது. அந்த வழியில் செல்கிற ஒரே பஸ் இதுதான். ஆனால், பள்ளி மாணவர்களுக்கு நிறையப் பஸ்கள் உள்ளன. இருப்பினும் இருதரப்பினரையும் அழைத்து, விசாரித்து... ஒரு சுமுகமான முடிவு விரைவில் எடுக்கப்படும்."

"விளாத்திகுளம் தாலுகாவிலுள்ள ப. துரைசாமிபுரம் மக்களுக்கு இன்னும் பாதை வசதி கிடைக்கவில்லையே?"

"இதற்கான பதில் நான் முன்பே சொன்னதுதான். அங்குள்ள பெரும்பகுதி நிலம் அவ்வூர் பஞ்சாயத்துத் தலைவருக்கே சொந்தமானது. அவர் நிலம்தர மறுக்கிறார்! இந்நிலையில் என்ன செய்வது...?"

"பரமன்குறிச்சியிலுள்ள செல்லத்துரை நாடார் என்ற ஊனமுற்றவர், ஒரு மூன்று சக்கர வண்டி வேண்டும் என்று கேட்டாரே... கொடுத்தீர்களா?"

"அவருக்கு 14.3.88 — இல் இங்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தோம். அவர் வரவேயில்லையே...?"

"சிவகளைவிவசாயக்கூட்டுறவுச்சேவைச் சங்கத்தில் நடைபெற்ற சுமார் ஒரு லட்ச ரூபாய் மோசடி என்னவாயிற்று? இதனால் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கப்படுவதும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதே...?"

"மோசடி வழக்கு சம்பந்தமாக அச்சங்கத் தலைவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு விசாரணையில் உள்ளது. தற்போது விவசாயிகளுக்குக் கடன் வழங்கப்படுகின்றது!

"தூத்துக்குடி கூவம் என்றழைக்கப்படும் பக்கிள் கால்வாயைச் சுத்தப்படுத்தும் முயற்சி என்னவாயிற்று?"

"தற்போது அதைச் சுற்றி ஆக்கிரமிப்புகள் அதிகரித்து விட்டன. முதலில் அதை அகற்ற வேண்டும். அதிலும் பிரச்னை உள்ளதால் கால்வாயைச் சுத்தப்படுத்தும் பணி அப்படியே முடங்கிக் கிடக்கின்றது!" என்று முடித்தார் கலெக்டர் ஆறுமுகம்.

"பக்கிள் கால்வாய் ஆக்கிரமிப்பை அகற்றக் கலெக்டர் நடவடிக்கை எடுத்தால் நாங்கள் ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறோம்! இந்நகரின் முன்னேற்றம்தான் எங்களுக்கு முக்கியம்!" என்கிறார் தூத்துக்குடி சேர்மன் பெரியசாமி. ஆக, பூனைக்கு யார் முதலில் மணி கட்டுவது என்பதுதான் கேள்வி!

கட்டுரை, புகைப்படங்கள்

பானு மணாளன்

N.S.K. பில்டர்ஸ்


டெபாசிட் சேகரிப்பு காலம்!

25.5.88 முதல் 25.8.88 வரை

நில உத்திரவாதத்துடன் கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள்.

ஐந்து வருட டெபாசிட்டுகளுக்கு இலவச பரிசுகள்

		பணம் (அ) பொருள்
ரூ. 5,000	ரூ. 150/-	டான்டி பிளாஸ்க் (1 லிட்டர்)
ரூ. 10,000	ரூ. 300/-	கேசரோல் டுவின் பேக்
ரூ. 25,000	ரூ. 750/-	வாட்டர் பில்டர்
ரூ. 50,000	ரூ. 1500/-	சுமித் கிச்சன் மிஷின்
ரூ. 1,00,000	ரூ. 3000/-	ஸ்டீல் அல்மிரா



1 வருடம்	2 வருடங்கள்	3 வருடங்கள்	5 வருடங்கள்
16%	**17%**	**18%**	**20%**

வருட வட்டிக்கு 1% கூடுதல் போனஸ் குறிப்பிட்ட காலத்துக்குள் டெபாசிட்டை செலுத்தி பயனடையும்படி கேட்டுக் கொள்கிறோம்.

N.S.K நகர் திருநின்றவூர்

M.M.D.A. அங்கீகாரம் பெற்றது எண்: PPD/LO 10/87

அனைத்து வசதிகளும் நிறைந்த குடியிருப்புக்கு மிகச் சிறந்த இடம்.

ஒரு மனையின் விலை ரூ. 20,000/-

வங்கி ஊழியர்கள் கவனத்திற்கு!

N.S.K. நகரில் 500 சதுர அடி முதல் 800 சதுர அடிகள் அளவு உள்ள 2 படுக்கை அறைகளுடன் மிகச்சிறந்த முறையில் கட்டப்பட்ட வீடுகள் உள்ளன. விலை ரூ. 1.25 இலட்சம் முதல் ரூ. 2 இலட்சம் வரை. 1 சதுர அடி விலை ரூ. 250/- உடனே அணுகவும்.

அடுக்கு மாடி குடியிருப்புகள்:

அனைத்து நவீன வசதிகளுடன். இன்றைய நாகரீக தலைமுறைக்கேற்றவாறு கட்டப்படும். அடுக்குமாடி குடியிருப்புகள் (Flats) விசாலமான நுழைவாயில் 24 மணிநேரமும் தங்கு தடையில்லாத மின்சாரம் மற்றும் தண்ணீர் சப்ளை. 2 படுக்கை அறைகளுடன் 750 சதுர அடி உள்ளது. 1 சதுர அடி விலை ரூ. 200/- முன்பணம் செலுத்தி உங்களுக்கு தேவையான அடுக்கு மாடி குடியிருப்பை தேர்ந்தெடுத்திடுவீர்.


மாதிரி வீடுகளை (மினியேச்சர் மாடல்) எங்கள் அலுவலகத்தில் பார்வையிடலாம்.

N.S.K. ரியல் எஸ்டேட்ஸ்

38-B, பர்கிட் சாலை (முதல்மாடி), தி. நகர், சென்னை-600 017.

தொலைபேசி எண்: 445252, 442106

EXELADS/NSK/110/88 TML


பிம்பம்
வையவன்

நீ எதிர்த்து ஒண்ணுமே செய்யலியா?''

''இல்லே.''

''பயந்துட்டியா?''

''கிட்டத்தட்ட.''

''ஏன் பயப்படணும்?''

''ஒரு பொண்ணு ஓடிட்டா. நான்தான் அவளை இழுத்துக்கிட்டு ஓடிப் போயி எங்கேயோ ஒளிச்சு வெச்சுட்டுத் திரும்பி வந்திருக்கறாப்பல விசாரிக்கறாங்க. பயப்படாமே எப்படி இருக்க முடியும்?''

''நீதான் என்னை இழுத்துக்கிட்டு ஓடலியே. அப்புறம் ஏன் பயம்?''

''செய்யாத குற்றத்தைச் செய்ததுன்னு ஒருத்தர் சாதிச்சா... வீண் பழி சுமக்கிற பயம். இவ்வளவு நாள் யோக்கியமா வாழ்ந்த நேர்மை சிதைஞ்சுடுமோங்கிற பயம்...''

''அது பயமில்லே, கோழைத்தனம்.''

''என்னை 'மிஸ்' பண்ணணும் போல இப்ப உனக்கு ஒரு 'மூட்' அதானே விமலா?''

விமலா ஜனார்த்தனத்தைத் துளைக்கிற மாதிரி ஒரு பார்வை வீசிவிட்டுக் கண்களை ஒருகணம் மூடினாள்.

மோட்டார்ப் படகு அரபிக் கடலைக் கிழித்துச் சென்றது. ஜனா இடமும் வலமுமாக எண்ணெய்க் கப்பல்களை ஒதுக்கிச் செல்லும் அந்தப் படகிலிருந்து திரும்பிப் பார்த்தான்.

பம்பாய் பின்வாங்கிக் கொண்டிருந்தது. ஆகாயம் நோக்கிப் பல ஆள்காட்டி விரல்கள் நீண்டது போலப் பல மாடிக் கட்டடங்கள். எல்லாம் தண்ணீருக்கப்பால் விலகி விலகி ஒதுங்கின.

''என்ன பார்க்கிறே ஜனா?''

''பம்பாய்.''

விமலாவும் பார்த்தாள்.

''இட்ஸ் எ கிரேட் ஸைட்.''

''பிரிகிற சொர்க்கம்'' என்றான் ஜனா.

''கை நழுவிய சந்தர்ப்பம்'' என்றாள் விமலா. முடியை இழுத்தது போல் திரும்பினான் ஜனா.

விமலா தன் உவமைக்கு அவனிடம் விளைவு எதிர்பார்த்தாள்.

சும்மாயிருப்பதே உத்தமம். ஜனா அவளை, அந்தப் பார்வையைத் தவிர்த்தவாறு எதிரே எலிபெண்டா குகையிலிருந்து திரும்பி வரும் ஒரு மோட்டார்ப் படகைக் கவனித்தான்.

''நீ ஒரு கோழை ஜனா.''

அது ஒரு குற்றச்சாட்டுத்தான். ஆனால் மூன்று வருஷங்களுக்கு முன்பு அது பொருந்தும். இப்போதல்ல. இதை இரண்டு நாட்கள் ஆபீஸ் வேலையாக பம்பாய் வந்து அவளோடு அவள் அறையில் தனியாகத் தங்கிய வாய்ப்பில் ஜனா நிரூபித்திருக்க முடியும்.

தவிர்த்தான். நல்ல பிள்ளை என்று மீண்டும் மீண்டும் நிரூபித்தான். கடைசி வரை அதைப் பரீட்சிக்கிறாள் விமலா. புரிந்தது.

மூன்று வருஷங்களுக்கு முன் உயிர் நண்பனாய்ப் பழகியவன் தங்கை அவள். அடிக்கடி அவளைக் காண வீட்டிற்குப் போன ஒரே குற்றத்திற்காக, கவிதை சுடுபாட்டிற்காக, அழகை அழகென்று சொல்லி ரசித்ததற்காக நான்கு பேர், க்ரைம் பிராஞ்ச் சி.ஐ.டி. போலீஸ் மாதிரி அவள் இவனோடு தான் ஓடிப் போனாளா என்று துப்புத் துலக்கும் முயற்சியில் அவனைத் துளைத்தெடுத்தார்கள்.

ஜனாவினுள்ளிருந்த ஒரு வெகுளியை ஒரு நிரபராதியைக் கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் உரி வைத்துப் பிளந்தார்கள்.

''என் மேலேயா சந்தேகப்படறீங்க? இது என்னய்யா நியாயம்?'' என்று சீறினான் ஜனா.

''ஒரு பொண்ணு ஓடிப் போனால் யார் மேலேயும் சந்தேகப்படலாம். முட்டாள், கத்தாதே'' என்றான் ஒருவன்.

நாலு பேரும் உதைக்கத் தயாராயிருந்தவர்கள்.

செய்யாத குற்றத்தைச் செய்யவில்லை செய்யவில்லை என்று மன்றாடிக் கெஞ்சாத குறையாக அவன் விண்ணப்பிக்க வேண்டி வந்தது.

விமலாவை அழைத்துக் கொண்டு பம்பாய்க்கு ஓடியவன் சேகர். பேட்டையில் ஒரு ரௌடி. திருமணம் ரிஜிஸ்தர் ஆபீஸில் நடந்து விட்டது என்று அங்கிருந்து திமிராக ஒரு கடிதம் போட்டான்.

ஒரு மாதம் கழித்து ஊருக்கு வந்தான். அதே தெருவில் தினம் இரண்டு முறை சுற்றினான். எல்லோரும் நிசப்தமாய் விட்டனர்.

''என்னை வெட்டி முறிக்க வந்தீங்களே, அவன்கிட்டே போய் உங்க கைவரிசையைக் காட்டுங்களேன்'' என்று சீறினான் ஜனா.

எல்லோரும் நிசப்தத்தைக் கடைப்பிடித்தனர்.

விமலாவை அவன் கைகழுவிப் பம்பாயிலேயே உதறித் தள்ளிவிட்டு மீண்டும் ஊருக்கு வந்தான். யாரும் கண்டு கொள்ளவில்லை.

அப்புறம்தான் ஜனாவுக்குள் வைராக்கியம் முளைத்தது. தன்னை மதிக்காத உலகைத் தான் மதிக்க வேண்டியதில்லை என்ற வைராக்கியம்.

வானமே இன்னும் விரிவடைந்தாற்போல் அந்த வைராக்கியத்தில் ஒரு சுதந்திரம். சுவைக்கச் சுவைக்க வளர்ந்து வந்த சுதந்திரம்.

பம்பாயில் ஒரு ஹோட்டலில் காப்பி சாப்பிடும்போது எதிர் நாற்காலியில் எதிர்பாராமல் வந்து உட்கார்ந்தாள் விமலா.

அவன் சுதந்திரத்திற்கு மையமிட்டவள்.

''விமலா!''

''ஜனார்த்தன்! நீ இங்கே?''

காப்பிக்குப் பிறகு அவனைத் தன் அறைக்கு அழைத்துப் போனாள். லாட்ஜில் அவன் போட்டிருந்த அறையைக் 'கான்சல்' செய்யச் சொன்னாள்.

வசதியாய் இருந்தாள். பர்ஸாத்தியில் பாத் அட்டாச்சுடன் கிச்சன், பெட்ரூம். தனியார் கம்பெனியில் நல்ல வேலை.

கொழுத்த சம்பளம்.

முகம் கழுவித் தலைவாரிக் கொண்டு லாட்ஜ் அறையைக் 'கான்சல்' செய்ய இருவரும் காலார நடந்தனர். விமலா அசல் பம்பாய்ப் பெண் ஆகியிருந்தாள்.

''கல்யாணம் நடந்ததுன்னு சொன்னாங்களே?''

''அது ஒரு கெட்ட கனவு.''

''இப்போ தனியாவா இருக்கே?''

''என்ன அவ்வளவு பயமுறுத்தறாப்பலே கேக்கறே? சுதந்திரமா இருக்கேன்.''

''ஒரு பெண் தனியா... பம்பாயிலே?''

''தைரியம். புத்திசாலித்தனம். தட்ஸ் எனஃப். அயோக்கியர்களோடு ஒன்றாய் வாழ்வதைவிட இதுமேல்.''

விமலா தீர்மானமாகத்தான் வாழ்க்கையைச் சந்தித்துக் கொண்டிருக்கிறாள். ஜனா அதை வாய்விட்டுச் சொன்னான். காற்றை ஊதி விட்டு அவள் பதில் தந்தாள்.

''அப்படி இருக்க வேண்டியிருக்கு. தட்ஸ் ஆல்.''

எனினும் அவள் மீது ஜனாவுக்கு இரக்கம் சுரந்தது. பரிவு வந்தது.

''ஆனா எதிர்காலம்?''

''அறுபது வயசுக் கெழவனாட்டம் ஏன் பேசறே ஜனா?''

அவன் மேற்கொண்டு பேசவில்லை.

''அன்றைய பாடு அன்றன்றைக்குப் போதும். எதிர்காலம்கறது என்னிக்குமே ஒரு 'மித்'!'' என்று அவளே பதிலளித்தாள்.

மறுநாள் காலையில் ஆபீஸுக்குப் போய் லீவு போட்டுவிட்டு வந்தாள். மட்டன், சிக்கன் என்று சமைத்தாள். அவள் கைபாகம் உன்னதம். அறை, தனிமை, பிரியம், உபசாரம். சந்தர்ப்பத்தின் கதவுகள் விரியத் திறந்திருந்தன. அவன் கனவானாகவே இருந்தான்.

காலையில் எலிபெண்டாவுக்குப் படகு ஏறும் போதுதான் அவளது முன் நிகழ்ச்சிகளின் பின் விளைவுகளைச் சொன்னான்.

எலிபெண்டாவில் இறங்கி தீன் மூர்த்தியைப் பார்த்துவிட்டு ஓர் ஒதுக்குப்புறத் தனிமையில் ஐஸ் கிரீம் கப்புகளுடன் உட்கார்ந்தனர்.

தூரத்தில் எலிபெண்டா தீவே அவர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட நினைவில் ஓர் இளம் காதல் ஜோடி.

அருள்வாக்கு

மனஸை நிற்கப் பண்ணுவதற்குப் பூர்வாங்கமாக, அதை நாலா திசையிலும் வெறி நாய் மாதிரி ஓடிக் கொண்டிருக்காமல் முதலில் கட்டுப்படுத்த வேண்டும். இதற்கு அவரவரும் ஸ்வதர்மப்படி கர்மா செய்து கொண்டே இருக்க வேண்டும். நமக்கென்று ஆசை, த்வேஷம் இல்லாமல் லோகோபகாரமாக நமக்கென்று வாய்த்திருக்கிற கர்மாவை அவரவரும் பண்ணிக் கொண்டிருப்பது சித்த சுத்தியைத் தரும் என்பதால் ஆசார்யாள் கர்மாநுஷ்டானங்களை நம் எல்லோருக்கும் விதித்திருக்கிறார். 'கர்மா' என்பது ஓரளவுக்கு மனஸை மறந்து செய்கிற கார்யம். வேலையிலேயே நம் குறி இருப்பதால் சித்தம் தறிகெட்டு ஓடிக் கொண்டிருக்க விடாமல் பண்ணுகிறோம். இம் மாதிரி மனஸை மறந்து (Ignore பண்ணி) கார்யம் பண்ணுவதோடு அதை நல்லதிலேயே பழக்கி, முழுக்கி ஒருமுகப்படுத்த வேண்டும். மனஸுக்கு ஐகாக்ரியம் (ஒருமுகப்படுதல்) ஏற்பட ஏற்படத்தான் அது அடங்கி, அப்படியே ஆத்மாவில் கரைந்து விட வழி உண்டாகும். இதற்காகத்தான் அத்தனை நல்லதும் சேர்ந்ததான, ஸகல கல்யாண குண நிலயமான ஸகுண மூர்த்தியிடம் பக்தி உபாஸனை செய்ய வேண்டும். மனஸ் அப்படியே ஆனந்தத்தில் ரொம்பி அந்த மூர்த்தியிடம் ஒருமுகப்பட்டு நின்று விட்டால் அப்புறம் கண்ட கண்டபடி ஓடாது. அந்த இஷ்ட மூர்த்தி ஒன்றிடமே பதிந்து நிற்கும். பிறகு அந்த மூர்த்தியின் அநுக்ரஹத்தால் இப்படிப் பிரிந்திருந்து அதன் குணங்களை அநுபவிப்பது என்றில்லாமல், அதற்கும் மேலே போய், அதிலேயே கரைந்து நிர்குணமான ப்ரஹ்மமாக ஆகி விடலாம்.



— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

ஏன் நல்லோர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.



நல்லார் உறவால் பற்றின்மை ஏற்படும். பற்றின்மையால் மதி மயக்கம் நீங்கும்.
மதி மயக்கம் நீங்கினால் மாறுபடாத உண்மை விளங்கும். மாறுபடாத உண்மை விளங்கினால் அதுவே ஜீவன் முக்தி.

தர்மச்சக்கரம்.

ஆகையால் கிராண்ட் ஸ்வீட் வாங்கி நல்லோர்களுக்கு விநியோகம் செய்யவும்.

கல்யாண வைபவங்களுக்கு: சீர் முறுக்கு, சீர் முள்ளுத் தேன் குழல், தேன் குழல், அதிரசம், திரட்டுப்பால், அப்பம், பருப்புத் தேங்காய் வகைகள் முதலியவை செய்துத் தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2-வது மெயின் ரோடு,
அடையாறு, காந்தி நகர்.
சென்னை-600 020.
போன்: 412557

அவர்களை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்து விட்டு கப் ஐஸ் கிரீமின் உறையை அகற்றினாள் விமலா. தக்கை ஸ்பூனில் கொஞ்சமாக வழித்துச் சுவைத்தாள்.


''அவர்களைப் பார்!'' என்று தக்கை ஸ்பூனால் சுட்டிக் காட்டினாள். அவன் திரும்பிப் பார்த்துவிட்டுத் தன் கப் ஐஸ்கிரீமில் சிறிது வழித்தான்.

''பிரேவ் நியூ வேர்ல்ட்'' என்றாள்.

தீரமான புத்தகம். அது ஆல்டஸ் ஹக்ஸ்லியின் நாவல். அந்த இளம் ஜோடிக்கு அவள் வழங்கிய சான்றிதழ் அது.

ஆனால் மோட்டார்ப் படகில் வரும்போது அவனைப் பற்றித் தெரிவித்த கருத்துக்கு ஒரு கோர்வை வைத்த மாதிரி உணர்ந்தான் ஜனா.

நிமிர்ந்து அவளைப் பார்த்து ஊர்ஜிதம் செய்து கொண்டான்.



''இந்தக் கடையிலே முதலுதவிப் பெட்டி வைத்திருக்கிறார்களே, எதுக்கு?''

''விலையைப் பார்த்து மயங்கி விழுகிறவர்களுக்குச் சிகிச்சையளிக்கத்தான்!''

— வாசி—ஜான்.

''நான் கோழை இல்லே விமலா!''

அவள் ஒன்றும் சொல்லாமல் இன்னொரு ஸ்பூன் வழித்துச் சுவைத்தாள். அவனைக் கண்கொட்டாமல் பார்த்தான்.

பிறகு மற்றொரு ஸ்பூனை வழித்து, ''டூ யூ வான்ட்?'' என்று நீட்டினாள்.

ஜனா அவள் கண்களைச் சந்தித்தான். ''நோ தாங்க்ஸ்'' என்றான்.

''ப்ச்ப்'' என்று சப்புக் கொட்டிவிட்டு நீட்டிய ஸ்பூனைத் தன் உதட்டிற்குக் கொண்டு சென்றாள் விமலா.

''நீ கோழையில்லேன்னு யாருக்காவது நிரூபிச்சிருக்கியா?''

''ஓ எஸ்.''

''யாருக்கு?''

''எனக்கு.''

''எனக்கு நிரூபிக்க மாட்டியோ?''

''நிரூபிச்சிகிட்டே இருக்கேனே.''

புரியவில்லை என்பது போல் கண்களைச் சுருக்கிக் கொண்டு அவனைப் பார்த்தாள்.

''நேத்து, முந்தா நாள்... இதோ இப்போ இந்த யாருமறியாத தனிமையிலே...''

''மே ஐ ஹாவ் யுவர் கப்?''

''ரெண்டுமே பிஸ்தா ஐஸ்கிரீம்தான்'' அவன் அழகாக மறுத்து விட்டான்.

''ப்ச்ப்'' என்று அலட்சியமாக அவள் சப்புக் கொட்டிவிட்டுத் தன் ஐஸ்கிரீமைச் சுவைக்கத் தொடங்கினாள்.

''ஐ ஆம் ஸாரி'' என்று அவன் வருத்தம் தெரிவித்தான்.

''டனின்ட் மேட்டர். நானும் சும்மா ஜஸ்ட் கோகோவாத்தான் கேட்டேன்.'' அவள் சகஜமாய்ச் சொன்னாள்.

நாலைந்து குரங்குகள் அவர்களைச் சுற்றிச் சூழ வந்தன. அவன் பதறாமல் குனிந்து ஒரு கல்லை எடுத்து அவைகள் மேல் வீசினான். அவை கொர் கொர் என்று உறுமி இளித்துவிட்டு அகன்றன.

''கோழைகள்தான் தனிமையை உபயோகிச்சுக்குவாங்க'' என்றான்.

''இது யாருக்கோ நிரூபிக்கிறாப்பல இருக்கே!''

''இல்லே. அன்னிக்கு எவனோ சொன்னான்னு நான் உன்னைப் பத்தி ஒரு 'இமேஜ்' வச்சுக்கலே. ஏற்கெனவே உண்டு. உயர்வான இமேஜ். இப்ப எவனோ சொல்லிட்டான்னும் நான் மாத்திக்கப் போறதில்லே!''

''நானே'' என்று சொல்லிப் பூர்த்தியாக்காமல் நிறுத்தினாள் விமலா.

''நீயே விரும்பினாலும் கூட என் மனசிலே இருக்கிற உன் 'இமேஜை' அழிச்சிட மாட்டேன்.''

விமலாவுக்குக் கொஞ்சம் தொண்டையைக் கூட்டி விழுங்கத் தோன்றிற்று.

''ஐ ஆம் ஸாரி'' என்றான் ஜனா.

''இதென்னது மறுபடியும் மறுபடியும் ஸாரி ஜாக்கெட்டுன்னுக்கிட்டு. ஒன்னை இப்ப எனக்கு பர்ஃபெக்டா புரியுது.''

''தாங்க் யூ.''

''அடாடா... ஃபார்மாலிட்டியை விட மாட்டே போலிருக்கே. கொஞ்சம் துடுக்கா ஏதாவது சொல்லணும்னு எனக்கு நாக்கு துறுதுறுக்குது.''

''சொல்லேன்.''

''பேசாமே நெஜம்மா நீயே என்னை இழுத்துக்கிட்டு ஓடி வந்திருக்கலாம்.''

அவள் சிரித்துக் கொண்டேதான் சொன்னாள். தனக்கு நேர்ந்த சோகச் சேறுழியின் இருள் வலையைக் கிழித்தெறிந்த சுதந்திரத்தோடுதான் சொன்னாள்.

எனினும் இதய நரம்பில் எங்கோ ஒரு சுண்டுச் சுண்டியது மாதிரி அது அவனுக்கு வலித்தது.

''இப்போ நீ ஓடி வருவியா என்னோட?'' என்று கேட்டான்.

''மாட்டேன்.''

''ஏன்?''

''ஒம் மனசிலிருக்கிற என் இமேஜை நானும் காப்பாத்த வேண்டாமா?''

என்ன பொருத்தமான பதில் என்று அவன் நிறைவுற்றான்.



பாலைவனத்தில் பட்டாம்பூச்சி

கதை என்று பார்த்தால் ஒன்றும் ஆஹா அல்லது ஓஹோ இல்லை.

யோசித்துப் பார்த்தால் நிஜ வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களாகவே தெரியவில்லை. ஸீன் பை ஸீன், ரீல் பை ரீல் சினிமாச் சம்பவங்கள்தான்.

நாய், பூனை, குரங்கு மூன்றும் வழக்கம் போல் சினிமா சர்க்கஸ்களைச் செய்து காண்பிக்கின்றன.

அனுராதாவிற்குப் பரவாயில்லை என்று சொல்லப்படுகிற மாதிரி ஒரு ரோல். ஜமாய்த்திருக்கிறார்.

புதுமுகம் சௌந்தர்யாதான் ஹீரோயின். மோசமில்லை. முதல் படத்திலேயே இவ்வளவு முகபாவங்களைக் காட்டியிருப்பது வரவேற்கப்பட வேண்டிய விஷயம்.

எம்.ஆர்.வி. பார்த்திபன் (எம். ஆர். ராதாவின் பேரன்) இதில் அறிமுகமாகி இருக்கிறார். தாத்தாவைப் போல வசனம் பேச முயன்று தோற்றிருக்கிறார். அப்படி வசனம் பேசுவது தாத்தாவின் ஒரிஜினாலிட்டி. அடுத்த படத்திலிருந்து இவர் தம்முடைய ஒரிஜினாலிட்டியைக் காண்பிப்பார் என்று நம்புவோமாக

சங்கர் கணேஷின் இசையில் ஒரே ஒரு பாட்டு. நல்ல பாட்டு. இந்த மாதிரி இன்னும் நான்கு பாட்டுக்களாவது இருந்திருக்கலாமே என்று நினைக்க வைத்து விடுகிறது.

எம்.ஆர். ராதா ரவியும் சுமித்ராவும் இடம் பெறுவது பத்து நிமிட நேரத்திற்குத்தான் என்றாலும் மனத்தில் நிற்கும்படி செய்து விட்டார்களே.

'நாங்க புதுசாக் கட்டிக்கிட்ட ஜோடி தாங்க' பாட்டை முழுக்க முழுக்க மறுபடி ஒரு டான்ஸோடு காட்டுவதும், பராசக்தி படத்தின் சிவாஜி வசனத்தை உபயோகிப்பதற்காகவே ஒரு கோயில் பூசாரி கதாநாயகியைக் கோயில் பிராகாரத்தில் கெடுக்க முயல்வதாகக் காட்டுவதும் உவ்வே!

சந்திரசேகரை நல்லபடியாக உபயோகித்திருக்கலாம். ஹும். கலைஞர் வசனப் பிரசாரத்திற்காக மட்டும் வந்து போவதோடு சரி.

பாதிப் படத்திற்கு மேல் செந்தில் வருகிறார். சிரிப்பு டானிக் என்று நினைத்துக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தால் வழிசல் டானிக் ஆகிவிட்டது.

டைரக்டர் துரை, டி.விக்காக ஒரு ஸீரியல் எடுக்க ஆசைப்பட்டிருக்கிறார். டி.வியில் சான்ஸ் கிடைக்கவில்லையோ என்னவோ, செலுலாய்டில் எடுத்து விட்டார். அபத்தமான தொலைக்காட்சித் தொடரைத் திரையில் பார்த்த மாதிரி இருக்கிறது.

— ஜெயமன்மதன்.



"யூரேகா ஃபோர்ப்ஸ் சேல்ஸ்மேன் தான் எவ்வளவு நல்லவர். என் வீட்டில், சுத்தம் மற்றும் சுகாதாரத்திற்கு நவீன முறைகளை அறிமுகப்படுத்திய இனிய நண்பர் அவர்தான்"

திருமதி. அர்ச்சனா சம்பானி, பம்பாய்



இவர்தான் முதல்வர்



அரசியல் வானில் ஒரு விடிவெள்ளி

அல்ஹாஜ் அப்துஸ் சமது அவர்கள் அறிஞர், அன்பானவர். அடக்கமானவர். எதிர்க்கட்சிகள் நடத்திய 'பாரத் பந்த்' போன்ற பந்த்களினால் வன்முறைதான் மிஞ்சும்; நன்மை ஏதுமில்லை என்று எடுத்துரைத்த அஹிம்சாவாதி.

ஆழ்ந்து சிந்தித்த பிறகு முடிவெடுக்கும் குணமுடையவர். ஆண்டுகள் பலவாக நாடாளுமன்றத்தில் எம்.பி.யாகவும், சென்ற தேர்தலில் தமிழக சட்டமன்றத்தில் எம்.எல்.ஏ.வாகவும் பதவிகள் வகித்தவர். ஆயினும் பதவியின் ஆணவம் சற்றும் இல்லாதவர்.

இனிய சொற்கள் இருக்க, இன்னாதவற்றைக் கூறாதவர். ஜனவரி 28—ல், சட்டமன்றத்தில் நடந்த அத்தனை அமளியிலும், அமைதியுடன் தன் பங்குப் பணியைச் செவ்வனே ஆற்றினார். நாகாக்க மறந்தவர்களின் மத்தியில்,

'ஒழுக்கமுடையார்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்'

என்ற குறளுக்கேற்ப வாழ்கிறவர்.

ஈகைக் குணம் கொண்டுள்ள உழைப்பாளி. ஊழல் குற்றச்சாட்டுக்களையே அனுபவமாகக் கொண்டு வாழும் அரசியல்வாதிகளின் மத்தியில், ஊழல் கறை படியாதவர். பல்லாண்டு காலமாக அரசியல் வாழ்க்கை வாழ்ந்தாலும், எளிய வாழ்க்கை வாழ்பவர். ஏழைகளின் வறுமையைத் துடைக்கப் பாடுபடுபவர்.

ஐந்து வேளைத் தொழுகையைத் தவறாமல் கடைப்பிடித்து முஸ்லிம்களின் வேதமான, திருக்குர் ஆனைத் தமிழாக்கம் செய்வதில் தந்தைக்கு உதவியவர். ஆன்மீகவாதியாகத் தம் சொந்த வாழ்க்கையை ஒழுக்கத்துடன் நடத்தி வருபவர். 'அரசன் எவ்வழி அவ்வழி மக்கள்' என்பார்கள். ஆட்சி செய்யும் தலைவன் ஒழுக்கமில்லை என்றால் குடிமக்களும் கெட்டலைவார்கள். இதனை மறக்காமல் இத்தகைய நெறியான வாழ்க்கை நடத்தியவர்கள் நாம் பார்த்த ராஜாஜி, காமராஜ் ஆகியோர். இவர்கள் வரிசையில் அப்துஸ் சமது இடம் பெறுகிறார்.

வாக்காளர் பட்டியலும், வேட்பாளர் பட்டியலும் தயாராகாத நிலையில், 'நான் தான் முதலமைச்சர்' என்றும் 'என்னைத் தவிர வேறு யாருக்கும் அந்தத் தகுதி இல்லை'யென்றும் பலர் தங்களைத் தாங்களே முதல்வராகக் கற்பனை செய்து நாடே சிரிக்கும் வகையில் பத்திரிகைகளில் எழுதி, அறிக்கை விட்டு வருகின்ற நேரத்தில், அப்துஸ் சமது அவர்கள் அரசியல் வானில் தனியதோர் விடிவெள்ளியாகத் திகழ்கிறார்.

கட்சியின் கொள்கைகள்

முஸ்லிம்களுக்கு அரசியல் ரீதியாக நலன் கிடைக்க வேண்டுமென ஏற்படுத்தப்பட்ட கட்சியானாலும் மற்றவர்களின் நலன் கெடுக்க நினைத்த வகுப்புவாதக் கட்சியாக வளரவில்லை.

தலைவர், மத சம்பந்தமுடையவராக இருப்பதால் நாட்டில் மத உணர்வுடன் மக்கள் வாழ்வர், நாட்டில் சுபிட்சம் பெருகும். கோயில் திருட்டு, கொள்ளை தடுக்கப்படும்.

மதுவிலக்கு நூறுசதம் அமுலாகும். சோம்பேறித்தனமாய் வருமானம் கிடைக்கும் லாட்டரி, குதிரைப் பந்தயம் ஆகியவை முழுவதுமாக ஒழிக்கப்படும்.

தேசியக் கட்சியாக இருப்பதால், பிராந்தியக் கட்சிகளுக்கு உரிய பிரிவினை உணர்வு இல்லாமல் நாட்டின் ஒற்றுமை பாதுகாக்கப்படும்.

அரபு நாடுகளின் உதவியோடு அதிக அளவில் தொழில்கள் தொடங்கப்படும். வேலை வாய்ப்பு வசதி இங்கு அதிகரிக்கும்.

மக்களிடையே சமத்துவம், சகோதரத்துவம் ஏற்பட ஆட்சியும் கட்சியும் பாடுபடும்.

பெண்கள் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.


பணக்காரர்களிடமிருந்து எளிய வரி வசூல் மூலம் ஏழைகளின் வறுமை துடைக்கப்படும்.

நாட்டின் பிரச்னைகள் அமைதியான முறையில் தீர்க்கப்படும். அடிக்கடி நடக்கும் வன்முறை பந்த்துகளுக்கு முழு 'பந்த்' ஏற்படுத்தப்படும்.

எனவே, இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் (தமிழ்நாடு) கட்சியின் தலைவராக இருந்து வரும் அல்ஹாஜ் அப்துஸ் சமது அவர்களே, தமிழ்நாட்டின் அடுத்த முதல்வராக வரவேண்டுமென வாழ்த்தி — விரும்பி இக் கட்டுரையை முடிக்கிறேன்.

— எஸ். ரஷீத் அலி, திருச்சி—20.

புகைப்படம்: சுபா


நான் ஸின்த்தால் உபயோகிக்கிறேன். நீங்கள்
NEW
Godrej
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
CINTHOL
வினோதின் உடலுக்கும் உள்ளத்திற்கும் தன்னம்பிக்கை தருவது ஸின்த்தால்
MADISON-G-001-TAM

க்ரேட் ஷேக் பற்றி, சில உண்மைகள் உங்களை வியப்பில் ஆழ்த்திடும்.

க்ரேட் ஷேக். முழுமையான புரதச்சத்து ஆகார பானம்.

உலகிலேயே மிகச் செறிவான இயற்கைப் புரதச்சத்தின் மூலாதாரமான ஸோயாவிலிருந்து தயாராவது க்ரேட் ஷேக். ஏதோவொரு புரதம் நிறைந்தது அல்ல க்ரேட் ஷேக். இதில் உள்ளது, உங்கள் உடல் வளர்ச்சிக்கும், தசை வளர்ச்சிக்கும் மிகத் தேவையான உயர்தர புரதச்சத்து. இது, 22 அமினோ அமிலங்களில் 20 அமினோ அமிலங்களை, நல்ல விகிதத்தில் கொண்டது; இன்றியமையாத எல்லா 9 அமினோ அமிலங்களையும் கொண்டது.

க்ரேட் ஷேக் விட்டமின் நிறைந்தது— மாத்திரையோ மற்றதோ இன்றியே.

B காம்ப்ளெக்ஸ் விட்டமின்கள் செறிந்தது க்ரேட் ஷேக்; அத்துடன், A மற்றும் E விட்டமின்களும். இரும்புச் சத்து, பாஸ்வரம் மற்றும் கால்சியம் ஆகிய கனிமச் சத்துக்களும் செறிந்தது.

க்ரேட் ஷேக். ஆரோக்கியமான மாற்றுணவு

க்ரேட் ஷேக் கொழுப்புச் சத்து அற்றது. இம்மியும் கொலெஸ்டிரால் இல்லை. சிலர்க்கு அலெர்ஜியான, பண்ணைப்பாலிலுள்ள லாக்டோஸ் அற்றது இது.

க்ரேட் ஷேக். சாப்பாடுகளுக்கிடையே ஒரு ஆகாரம்.

அடுத்த முறை பசிக்கும்போது, அதுவும் சாப்பாட்டு வேளை அல்லாத போது, குளுமையான க்ரேட் ஷேக் அருந்துங்கள்.


செறிவான, திருப்திதரும் இந்த ஸோயாமில்க் பானம் சுவைமிக்க பல மணங்களில் கிடைக்கிறது.



க்ரேட் ஷேக் ஸோயா நலமிக்க ஹாயான உணவு பானம்.
உலகிலேயே மிகச் செறிவான புரதச்சத்தின் மூலாதாரம்.

தயாரிப்பாளர் : நோபிள் ஸோயா ஹவுஸ் லிமிடெட்,
விநியோகஸ்தர்கள் : கோத்ரெஜ்

Enterprise/NS/269 Tm



அத்தியாயம் 16
மதுராந்தகத் தேவர்

இந்தக் கதையில் ஒரு முக்கிய பாத்திரமாகிய மதுராந்தகத் தேவரைக் கதை ஆரம்பத்தில் கடம்பூர் மாளிகையிலேயே நாம் சந்தித்தோம். இன்னொரு முறை பழுவேட்டரையரின் பாதாள நிலவறைப் பாதை வழியாக நள்ளிரவில் அவர் அரண்மனைக்குச் சென்ற போது பார்த்தோம். அப்பொழுதெல்லாம் அந்தப் பிரசித்தி பெற்ற இளவரசரை, — பின்னால் பரகேசரி உத்தம சோழர் என்னும் பட்டப் பெயருடன் தஞ்சைச் சிம்மாதனத்தில் வீற்றிருக்கப் போகிறவரை, — நல்ல முறையில் வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கவில்லை. அந்தக் குறையை இப்போது நிவர்த்தி செய்து வைக்க விரும்புகிறோம்.

மதுராந்தகரைப் பற்றிச் சொல்வதற்கு முன்னால் அவருடைய பரம்பரையைக் குறித்தும் வாசகர்களுக்குச் சிறிது ஞாபகப்படுத்த வேண்டும்.

சுந்தர சோழ சக்கரவர்த்திக்கு முன்னால் சோழ நாட்டில் நீண்ட காலம் அரசு செலுத்தியவர் அவருடைய பெரிய தந்தை கண்டராதித்த சோழர். அவரும் அவருடைய தர்மபத்தினியான மழவரையர் மகள் செம்பியன் மாதேவியும் சிவபக்த சிகாமணிகள். சிவாலயத் திருப்பணிகளிலேயே தங்கள் வாழ்க்கையை அவர்கள் முழுதும் ஈடுபடுத்தியவர்கள்.

தமிழ் நாடெங்கும் சிதறிக் கிடந்த தேவாரத் திருப்பதிகங்களைத் தொகுத்துச் சேர்க்கக் கண்டராதித்தர் ஆசை கொண்டிருந்தார். அந்த ஆசை அவர் ஆயுள் காலத்தில் நிறைவேறவில்லை. ஆயினும் சில பாடல்களைச் சேகரித்தார். தேவாரப் பதிகங்களின் முறையில் தாமும் சில பாடல்களைப் பாடினார். அவற்றில் சிதம்பரத்தைப் பற்றி அவர் பாடிய பதிகம் திருவிசைப்பா என்ற தொகுதியில் இன்னும் வழங்கி வருகிறது.

கண்டராதித்தர் தமது அரும்பெரும் தந்தையாகிய பராந்தக சக்கரவர்த்தி

அமரர் கல்கி

தில்லையம்பலத்துக்குப் பொன் வேய்ந்தது பற்றித் தாம் பாடிய பதிகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்:—

"வெங்கோல் வேந்தன் தென்னன்
நாடும் ஈழமும்கொண்ட திறல்
செங்கோற்சோழன் கோழிவேந்தன்
செம்பியன் பொன்னணிந்த
அங்கோல்வளையார் பாடியாடும்
மணி தில்லையம்பலத்துள்
எங்கோல் ஈசன் எம்மிறையை
என்றுகொல் எய்துவதே!"

என்ற பாடலில் தம் தந்தை பாண்டிய நாடும் ஈழமும் வென்றவர் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார். பதிகத்தின் கடைசிப் பாடலில் தமது பெயரை அவர் குறித்திருப்பதுடன், தம்முடைய காலத்தில் சோழரின் தலைநகரம் தஞ்சையானதையும் குறிப்பிட்டிருக்கிறார்.

"சீரான்மல்கு தில்லைச்
செம்பொனம்பலத்தாடி தன்னைக்
காரார் சோலைக் கோழிவேந்தன்
தஞ்சை யர்கோன் கலந்த
ஆராவின் சொல் கண்டராதித்தன்
அருந் தமிழ் மாலைவல்லார்
பேராவுலகிற் பெருமையோடும்
பேரின்பம் எய்துவரே!"

கண்டராதித்தருக்குப் போர் செய்து இராஜ்யத்தை விஸ்தரிப்பதில் நம்பிக்கை இருக்கவில்லை. போர்களினால் மனிதர்கள் அடையும் துன்பங்களைக் கண்டு வருந்தியவரான படியால் கூடிய வரையில் சண்டைகளை விலக்க முயன்றார்; சமாதானத்தையே நாடினார். இதன் காரணமாக இவர் ஆட்சிக் காலத்தில் சோழ சாம்ராஜ்யம் மிகச் சுருங்கலாயிற்று.

கண்டராதித்தர் தம் முதிர்ந்த வயதில் மழவரையர் மகளை மணந்து கொண்டார். அவர்களுடைய புதல்வன் மதுராந்தகன், கண்டராதித்தரின் அந்திய காலத்தில் சின்னஞ் சிறு குழந்தை. இராஜ்யத்தைச் சுற்றிலும் எதிரிகள் தலையெடுத்துக் கொண்டிருந்தனர். அதே சமயத்தில் கண்டராதித்தரின் தம்பி அரிஞ்சயன் போரில் காயம்பட்டு மரணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தான். அரிஞ்சயனுடைய குமாரன் சுந்தர சோழன் அதற்குள் காளைப் பருவத்தைக் கடந்து, பல போர்களிலே வெற்றி முரசு கொட்டி, மகா வீரன் என்ற பெயர் பெற்றிருந்தான். ஆதலின் கண்டராதித்தர் தமக்குப் பின்னர் சுந்தர சோழனே பட்டத்துக்குரியவன் என்று முடிவு கட்டிக் குடிமக்களுக்கும் அறிவித்து விட்டார். பின்னால் சிம்மாதனம் சம்பந்தமான குடும்பச் சண்டைகள் உண்டாகாதிருக்கும் பொருட்டுச் சுந்தர சோழருடைய சந்ததிகளே பட்டத்துக்கு உரியவர்கள் என்றும் சொல்லி விட்டார்.

தமது குமாரன் மதுராந்தகனைச் சிவ பக்தனாக வளர்த்துச் சிவ கைங்கரியத்தில் ஈடுபடுத்த வேண்டும் என்று தம் மனைவியிடமும் அவர் சொல்லியிருந்தார். இவையெல்லாம் அந்நாளில் நாடறிந்த விஷயங்களாயிருந்தன.

செம்பியன்மாதேவி தன் கணவருக்கு அளித்த வாக்கை நிறைவேற்றி வந்தாள். மதுராந்தகனுடைய சிறு பிராயத்திலேயே அவன் உள்ளத்தில் சிவபக்தியையும் உலக வாழ்வில் வைராக்கியத்தையும் உண்டாக்கி வளர்த்து வந்தாள்.

ஏறக்குறைய இருபது பிராயம் வரையில் மதுராந்தகன் அன்னையின் வாக்கையே வேத வாக்காகக் கொண்டு நடந்து வந்தான். இராஜ்ய விவகாரங்களில் அவனுக்குச் சிறிதும் பற்று ஏற்படவில்லை. சோழ சிங்காதனம் தனக்கு உரியது என்ற எண்ணமே அவன் உள்ளத்தில் உதயமாகாமல் இருந்தது.

இரண்டு வருஷங்களுக்கு முன்னால் சின்னப் பழுவேட்டரையரின் மகளை மணந்ததிலிருந்து அவன் மனம் மாறத் தொடங்கியது. ஆரம்பத்தில் இலேசாகத் தலைகாட்டிய ஆசைக்குப் பழுவூர்

இளையராணி நந்தினி தூபம் போட்டுப் பெரிதாக்கி வந்தாள். சிறிய தீப்பொறி அதிவிரைவில் பெரிய காட்டுத் தீ ஆகி விட்டது. பல்வேறு காரணங்களினால் சோழ நாட்டுச் சிற்றரசர்கள் பலரும் பெருந்தர அதிகாரிகளும் மதுராந்தகனை ஆதரித்துச் சதி செய்ய முற்பட்டதையும் பார்த்தோம். மதுராந்தகனைச் சிம்மாசனத்தில் ஏற்றுவதற்குச் சுந்தர சோழர் கண் மூடும் சந்தர்ப்பத்தை அவர்கள் எதிர் நோக்கியிருந்தார்கள். ஆனால் மதுராந்தகனோ அவ்வளவு காலம் காத்திருப்பதற்கே விரும்பவில்லை. சுந்தர சோழருக்குச் சிம்மாசனத்தில் பாத்தியதை இல்லையென்றும், தனக்கே சோழ சாம்ராஜ்யம் வந்திருக்க வேண்டும் என்றும் அவன் எண்ணத் தொடங்கினான். அதிலும் இப்போது சுந்தர சோழர் நோய்ப் பட்டுப் படுத்த படுக்கையாகி இராஜ்யத்தைக் கவனிக்க முடியாத நிலைமையில் இருந்தார் அல்லவா? ஆதலின் ஏன் தான் உடனடியாகத் தஞ்சாவூர் .சிங்காதனமேறி இராஜ்ய பாரத்தை ஏற்றுக் கொள்ளக் கூடாது?

இவ்விதம் மதுராந்தகனுக்கு ஏற்பட்டிருந்த அரசுரிமை வெறியைக் கட்டுக்குள் அடக்கி வைப்பது இப்போது பழுவேட்டரையர்களின் பொறுப்பாயிருந்தது. அவசரப்பட்டுக் காரியத்தைக் கெடுத்துவிட அவர்கள் விரும்பவில்லை. சுந்தர சோழரின் இரு புதல்வர்களும் வீராதி வீரர்கள். அவர்களுடைய வீரச் செயல்களினாலும் பிற குணாதிசயங்களினாலும் குடிமக்களின் உள்ளங்களில் அவர்கள் இடம் பெற்றிருந்தனர். கொடும்பாளூர் வேளார், திருக்கோவிலூர் மலையமான் என்னும் இரு பெரும் தலைவர்கள் சுந்தர சோழரின் புதல்வர்களை ஆதரித்து நின்றார்கள். சைன்யத்திலேயும் ஒரு பெரும் பகுதி வீரர்கள் சுந்தர சோழரின் புத்திரர்களையே விரும்பினார்கள். ஆகையால் சக்கரவர்த்தி உயிரோடிருக்கும் வரையில் பழுவேட்டரையர்கள் பொறுமையுடனிருக்கத் தீர்மானித்தார்கள். இதற்கிடையில், சக்கரவர்த்தியின் மனமும் சிறிதளவு மாறியிருந்ததை அவர்கள் அறிந்து கொண்டார்கள். தமக்குப் பிறகு இளவரசர் மதுராந்தகருக்குத்தான் பட்டம் என்று சுந்தர சோழரே சொல்லி விட்டால் ஒரு தொல்லையும் இல்லை. இதற்குக் குறுக்கே நின்று தடை செய்யக் கூடியவர்கள் இளைய பிராட்டியும் செம்பியன் மாதேவியுந்தான். இளைய பிராட்டியின் சூழ்ச்சிகளை மாற்றுச் சூழ்ச்சிகளினால் வென்று விடலாம். ஆனால் தமிழ் நாடெங்கும் தெய்வாம்சம் பெற்றவராகப் போற்றப்பட்டு வரும் செம்பியன் மாதேவி தடுத்து நின்றால், அந்தத் தடையைக் கடப்பது எளிதன்று. அந்தப் பெருமாட்டி தாம் பெற்ற புதல்வன் சிம்மாதனம் ஏறுவதை விரும்பவில்லையென்பது எங்கும் பரவியிருந்தது. அன்னையின் வார்த்தையை மீறி மகன் சிங்காதனம் ஏறுவதைக் குடிமக்கள் எப்படி ஏற்றுக் கொள்ளுவார்கள்? ஒன்று, அந்த அம்மாளும் தமது கணவரைப் பின்பற்றிக் கைலாச பதவிக்குச் செல்லவேண்டும். அல்லது அவருடைய மனம் மாறச் செய்ய வேண்டும். தாயின் மனத்தை மாற்றக் கூடிய சக்தி, பெற்ற பிள்ளையைத் தவிர வேறு யாருக்கு இருக்கக் கூடும்?

ஆதலின் அன்னையிடம் சொல்லி அவர் மனத்தை மாற்றும்படி மதுராந்தகத் தேவரை அடிக்கடி பழுவேட்டரையர்கள் தூண்டிக் கொண்டிருந்தார்கள். மதுராந்தகர் இந்தக் காரியத்தில் மட்டும் உற்சாகம் காட்டவில்லை. இராஜ்யம் ஆளும் ஆசை அவர் உள்ளத்தில் வெறியாக மூண்டிருந்தது. ஆனால் அன்னையிடம் அதைப் பற்றிப் பேச மட்டும் அவர் தயங்கினார். ஏன்? — அந்த மூதாட்டியைச் சந்தித்துப் பேசுவதற்கே அவர் அவ்வளவாக விரும்பவில்லை.

இப்போது, செம்பியன் மாதேவியே தஞ்சைக்குச் செய்தி சொல்லி அனுப்பியிருந்தார். தமது கணவருடைய விருப்பங்களில் முக்கியமானதொரு விருப்பத்தை நிறைவேற்றத் திட்டமிட்டிருப்பதாகவும், அந்தச் சந்தர்ப்பத்தில் தம் குமாரன் தம்முடன் இருக்க வேண்டும் என்றும் தெரியப்படுத்தியிருந்தாள். அதன்படியே சின்னப் பழுவேட்டரையர் மதுராந்தகரைப்

பழையாறைக்குப் போய் வரும்படி கூறினார். இச் சந்தர்ப்பத்தில் தஞ்சைச் சிங்காதனத்துக்குத் தமக்குள்ள உரிமை பற்றித் தாயிடம் வாதாடி அவருடைய மனத்தை மாற்ற முயலும்படியும் சொல்லி அனுப்பினார்.

அத்தியாயம் 17
திருநாரையூர் நம்பி

மதுராந்தகத் தேவர் தமது பரிவாரங்களுடனும் வந்தியத்தேவனுடனும் பழையாறை நகருக்குள் பிரவேசித்தார். ஆரியப்படை வீடு, பம்பைப் படை வீடு, புதுப்படை வீடு, மணப்படை வீடு முதலான வீரர்கள் வாழும் பகுதிகளின் வழியாக ஊர்வலம் சென்றது. பிறகு கடை வீதிகள், குடிமக்கள் வாழும் பகுதிகள், ஆலயங்கள், ஆலயங்களைச் சூழ்ந்திருந்த சந்நிதித் தெருக்கள் முதலியவற்றின் வழியாகச் சென்றது. ஆங்காங்கு ஒரு சிலர் வீட்டு வாசல்களில் நின்று பார்த்தார்கள். ஆனால் மக்களிடையே எவ்வித உற்சாகமும் இல்லை என்பதை வந்தியத்தேவன் கண்டான். முன்முறை அவன் இந் நகருக்குள் வந்திருந்த போது நகரம் கோலாகலத்தில் மூழ்கியிருந்தது. இப்போது வீதிகள் ஜன சூனியமாயிருந்தன. பழையாறை பாழடைந்த நகரமோ என்று சொல்லும்படி இருந்தது. மதுராந்தகத் தேவர் மீது பழையாறை மக்கள் அவ்வளவாக விசுவாசம் கொண்டிருக்கவில்லை என்பது வெட்டவெளிச்சமாகத் தெரிந்தது. வந்தியத்தேவனுக்கு இது ஒரு விதத்தில் சௌகரியமாயிருந்தது. தன் முகம் தெரிந்தவர்கள் யாரேனும் தன்னைப் பார்க்கும்படி நேரவும், அதனால் தொல்லை ஏற்படவும் இடமில்லையல்லவா?

இவர்கள் சோழ மன்னர்களின் புராதன அரண்மனை வீதியை நெருங்கிக் கொண்டிருந்த சமயத்தில் இன்னொரு பக்கமிருந்து பெரியதோர் ஊர்வலம் வந்து கொண்டிருந்ததைக் கண்



டார்கள். அந்த ஊர்வலத்தின் மத்தியில் திறந்த பல்லக்கு ஒன்று வந்து கொண்டிருந்தது. அதில் இருந்தவர் யார் என்பது நன்கு தெரியவில்லையாயினும் யாரோ சிவனடியார் என்றும் இளம் பிராயத்தினர் என்றும் தோன்றியது. சிவிகைக்கு முன்னும் பின்னும் ஜனக் கூட்டம் அதிகமாயிருந்தது. கையில் தாளங்களை வைத்து இனிய ஜங்கார ஓசையை எழுப்பிக் கொண்டு சிலர் பல்லக்கின் முன்னாலும் பின்னாலும் பாடிக் கொண்டு வந்தார்கள்.

இடையிடையே ''திருச்சிற்றம்பலம்'' ''ஹர ஹர மகாதேவா!'' என்ற கோஷங்களுடன் ''திருநாரையூர் நம்பி வாழ்க!'' ''பொல்லாப் பிள்ளையாரின் 'அருட் செல்வர் வாழ்க!'' என்ற கோஷங்களும் எழுந்து வானை அளாவின.

மதுராந்தகர் அந்த ஊர்வலத்தை அசூயை கொண்ட கண்களினாலே பார்த்தார். பக்கத்திலிருந்த வீரனைப் பார்த்து ஏதோ கேட்டார். ''ஆம்; பல்லக்கிலே வருகிறவர்தான் திருநாரையூர் நம்பி!'' என்று அவன் மறுமொழி கூறினான்.

''இருந்தாலும், என்ன தடபுடல்! இந்த ஊரில் நம்மை யாரும் கேட்பாரைக் காணோம்! இந்த நம்பியைச் சூழ்ந்து கொண்டு ஜனங்கள் இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்கிறார்களே?'' என்றார் மதுராந்தகத்தேவர்.

அந்த ஊர்வலம் இவர்கள் இருந்த இடத்திலிருந்து சற்றுத் தூரத்திலேயே சென்றது. ஆயினும் பல்லக்கின் அருகிலே வந்தவர்களில் ஒருவர், முன்னொரு சமயம் கொள்ளிட நதியைப் படகிலே தாண்டிய போது ஆழ்வார்க்கடியானோடு சண்டையிட்ட வீர சைவர் என்று வந்தியத் தேவனுக்குத் தோன்றியது.

மதுராந்தகத் தேவரும் அவருடைய பரிவாரங்களும் அரண்மனை வீதியை அடைந்து செம்பியன் மாதேவியின் மாளிகையை அடைந்தார்கள். அரண்மனை வாசலிலேயே பெரிய பிராட்டி நின்று கொண்டிருந்தார். யாரையோ வரவேற்பதற்கு ஆயத்தமாக அவர் காத்திருந்ததாய்த் தோன்றியது. மதுராந்தகர் ரதத்திலிருந்து இறங்கி அன்னையின் அருகில் சென்று வணங்கினார். வணங்கிய மதுராந்தகரை உச்சி முகந்து அன்னை ஆசி கூறினார். பின்னர், ''மகனே! நல்ல தருணத்தில் வந்து விட்டாய்! திருநாரையூர் நம்பி வந்து கொண்டிருக்கிறார். அவசியமானால் சற்றுச் சிரம பரிகாரம் செய்து கொண்டு விரைவில் சபா மண்டபத்துக்கு வந்து சேர்!'' என்று கூறினார்.



மதுராந்தகரின் முகம் பொலிவு இழந்ததை வந்தியத்தேவன் கவனித்துக் கொண்டான். பாவம்! தம்மை வரவேற்பதற்காகவே பெரிய பிராட்டி அரண்மனை வாசலில் காத்திருந்ததாக மதுராந்தகர் எண்ணியிருந்தார் போலும்! என்ன ஏமாற்றம்! பல்லக்கிலே பின்னால் ஊர்வலமாக வரும் சிவனடியாரை வரவேற்பதற்குத்தான் அவர் காத்திருந்தார் என்று

தெரிந்ததும் மதுராந்தகருக்கு, — நாளைக்குச் சோழ சிம்மாதனத்தில் ஏறலாம் என்று ஆசைப்பட்டுக் கொண்டிருப்பவருக்கு, — மிக்க ஏமாற்றமாயிருப்பது இயல்புதானே?

அரண்மனையில் மதுராந்தகருக்கு என்று ஒதுக்கப்பட்டிருந்த பகுதிக்கு எல்லாரும் சென்றார்கள். மதுராந்தகர் உடை மாற்றுதல் முதலிய காரியங்களைச் சாவகாசமாகவே செய்து கொண்டிருந்தார். சபா மண்டபத்துக்குப் போக அவ்வளவாக ஆர்வம் கொண்டிருந்ததாய்த் தெரியவில்லை. அன்னையிடமிருந்து ஆள்மேல் ஆள் வந்து கொண்டிருந்தனர். கடைசியாக, மதுராந்தகர் புறப்பட்டார். புறப்பட்ட போது ''அந்த நிமித்தக்காரன் எங்கே?'' என்று வினவினார். அவருடன் சபா மண்டபத்துக்குப் போகத் துடி துடித்துக் கொண்டிருந்த வந்தியத்தேவன் ''இதோ ஆயத்தமாயிருக்கிறேன்'' என்றான். அவனையும் இன்னும் சிலரையும் அழைத்துக் கொண்டு மதுராந்தகர் சபா மண்டபம் போய்ச் சேர்ந்தார்.

மண்டபத்தில் ஏற்கெனவே சபை கூடியிருந்தது. ஒரு பக்கத்தில் செம்பியன்மாதேவியும் குந்தவைப் பிராட்டியும் மற்றும் சில அரண்மனைப் பெண்களும் வீற்றிருந்தார்கள். சபையில் நடுநாயகமாகப் போட்டிருந்த பீடத்தில் ஒரு வாலிபர் அமர்ந்திருந்தார். அவர் இளம் பிராயத்தவர். விபூதி ருத்ராட்சதாரி. அவருடைய திருமுகம் களையுடன் பொலிந்தது. அவர் எதிரில் ஓலைச் சுவடிகள் சில கிடந்தன. கையிலும் ஓர் ஓலைச் சுவடியை அவர் வைத்துக் கொண்டிருந்தார். அவர் அருகில் விபூதி ருத்ராட்சதாரியான பெரியவர் ஒருவர் பரவசமாக நின்றார். இன்னும் சபா மண்டபத்தில் ஜனங்கள் நிறைந்திருந்தார்கள். இளைஞர் பல்லக்கிலே வந்தவர்தான் என்பதையும், பக்கத்திலே நின்றவர் முன்னொரு தடவை தான் கொள்ளிடத்துப் படகில் பார்த்தவர் என்பதையும் வந்தியத்தேவன் கண்டு கொண்டான். அவனுடைய கண்கள் சபா மண்டபத்தில் அங்கு மிங்கும் சுற்றிச் சுழன்றாலும் கடைசியில் பெரிய பிராட்டிக்கு அருகில் வீற்றிருந்த குந்தவையின் திருமுகத்திலேயே வந்து நின்றன. குந்தவை தேவியின் கண்களோ முதல் முறை அவனைப் பார்த்ததும் வியப்புக்கு அறிகுறியைக் காட்டின. பிறகு அவன் பக்கம் இளவரசியின் கண்கள் திரும்பியதாகவே தெரியவில்லை. தன்னை ஒரு வேளை தெரிந்து கொள்ளவில்லையோ என்றுகூட அவனுக்கு ஐயம் உண்டாயிற்று.

மதுராந்தகர் சபா மண்டபத்தில் பிரவேசித்ததும் பெண்மணிகளைத் தவிர மற்றவர்கள் எழுந்து மரியாதை செய்தார்கள். மதுராந்தகர் தம் பீடத்தில் அமர்ந்ததும் மற்றவர்களும் அவரவர்களுடைய இடத்தில் உட்கார்ந்தார்கள்.

செம்பியன் மாதேவி மதுராந்தகரைப் பார்த்து, ''குமாரா! இந்த இளம் நம்பி திருநாரையூரைச் சேர்ந்தவர். அவ்வூரிலுள்ள பொல்லாப் பிள்ளையாரின் பூரண அருளைப் பெற்றவர். இதுவரையில் யாருக்கும் கிடைக்காத தேவாரப் பதிகங்கள் சில இவருக்குக் கிடைத்திருக்கின்றன. முன்னொரு காலத்தில் நமது சோழ குலத்தில் உதித்த மங்கையர்க்கரசியார் பாண்டிமாநாட்டின் மகாராணியாக விளங்கினார். அவருடைய அழைப்புக்கிணங்கி ஆளுடைய பிள்ளையார் ஞானசம்பந்தர் மதுரை மாநகருக்குச் சென்றார். அங்கே சமணர்களை வாதப் போரில் வென்றார். அச்சமயம் மதுரை மாநகரில் சம்பந்தசுவாமி பாடிய பதிகங்கள் சில இவருக்குக் கிடைத்திருக்கின்றன. அந்தப் பதிகங்களில் நமது சோழ குலத்து மாதரசியைப் பற்றியும் சம்பந்தர் பாடியிருக்கிறார். அந்தப் பாடல்களைக் கேட்கும் போது எனக்கு உடல் பூரித்துப் பரவசமாகிறது. உன் தந்தை இருந்து கேட்டிருந்தால் எவ்வளவோ மகிழ்ச்சியடைந்திருப்பார். நீயாவது கேள்!'' என்று சொன்னார்.

மதுராந்தகர், ''கேட்கிறேன், தாயே! பதிகத்தை ஆரம்பிக்கட்டும்'' என்றார். ஆனால் அவருடைய முகம் அவ்வளவாக மலர்ந்திருக்க

வில்லை. அவருடைய உள்ளம் வேறு எங்கேயோ இருந்தது. திருநீறு ருத்ராட்சம் அணிந்த சாதாரணச் சிறுவன் ஒருவனைப் பெரியதொரு பீடத்தில் நடுநாயகமாக அமர்த்தித் தடபுடல் செய்வதும் அவருக்குப் பிடிக்கவில்லை. அன்னையைத் திருப்தி செய்வதற்காகப் பொறுமையுடன் உட்கார்ந்திருந்தார்.

பொல்லாப் பிள்ளையார் அருள் பெற்ற திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி தம் கையிலிருந்த ஓலைச் சுவடியிலிருந்து படிக்கத் தொடங்கினார். ஞான சம்பந்தர் மதுரைமாநகரைப் பார்த்ததும், "சிவபக்திச் செல்வத்திற் சிறந்த மங்கையர்க்கரசியார் வாழும் பதி அல்லவா இது?" என்று வியந்து பாடிய பதிகங்களை முதலில் அவர் பாடினார்.

"மங்கையர்க்கரசி வளவர்கோன்பாவை
வரிவளைக்கைம்மட மானி
பங்கயச்செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழலுருவன் பூத நாயகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற்கண்ணி தன்னோடும்அமர்ந்த
ஆலவாயாவதும் இதுவே!"

"மண்ணெலாம் நிகழ மன்னனால் மன்னும்
மணி முடிச் சோழன்றன் மகளாம்
பண்ணினேர் மொழியாள் பாண்டி மாதேவி
பாங்கினாற் பணி செய்து பரவ
விண்ணுளோர் இருவர் கீழொடு மேலும்
அளப்பரிதாம் வகை நின்ற
அண்ணலார் உமையோடு இன்புறுகின்ற
ஆலவாயாவதும் இதுவே!"

என்னும் பாடல்களைக் கேட்டபோது செம்பியன் மாதேவியின் கண்களிலிருந்து முத்து முத்தாக ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது. அத்தகைய மங்கையர்க்கரசியாரைப் பெற்ற குலத்தில் தாமும் வாழ்க்கைப்பட்டு மகாராணியாக வாழ்ந்திருக்கக் கொடுத்து வைத்திருந்த பூர்வ ஜன்ம பாக்கியத்தை எண்ணி எண்ணி மனம் பூரித்து மகிழ்ந்தார்.

மதுராந்தகருக்கோ மேற் கூறிய பாடல்களில் 'மண்ணெலாம் நிகழ மன்னனால் மன்னும் மணிமுடிச் சோழன்' என்னும் வரி மட்டுமே மனத்தில் பதிந்தது. அத்தகைய புராதனப் பெருமை வாய்ந்த சோழர் குலத்து மணி மகுடம் தன் சிரஸை அலங்கரிக்க வேண்டியதிருக்க, இன்னொருவர் அதை அபகரித்துக் கொண்டிருப்பதை நினைத்த போது அவருக்கு ஆத்திரம் உண்டாயிற்று.

சம்பந்தர் மங்கையர்க்கரசியாரைப் போய்ப் பார்க்கிறார். பாண்டிமாதேவி அந்தப் பாலகரைப் பார்த்து, "ஐயோ! இந்த இளம் பிள்ளை எங்கே? பிரம்ம ராட்சதர்கள் போன்ற சமணர்கள் எங்கே? இந்தப் பிள்ளை அவர்களுடன் எப்படி வாதப் போரிட்டு வெல்ல முடியும்!" என்று கவலையுறுகிறார். அதையறிந்த சம்பந்தர் பாண்டிமாதேவியைப் பார்த்துச் சொல்லுகிறார்: —

"மானினேர் விழி மாதராய் வழுதிக்கு
மாபெருந் தேவி கேள்!
பானல்வாயொரு பாலன் ஈங்கிவன்
என்று நீ பரிவெய் திடேல்!
ஆனை மாமலையாதியாய
இடங்களிற் பல அல்லல் சேர்
ஈனர்கட் கெளியேன் அலேன் திரு
ஆலவாயரன் நிற்கவே!"

என்ற பதிகத்தைத் திருநாரையூர் நம்பியாண்டார்நம்பி பாடியபோது, செம்பியன் மாதேவி தம்மையே மங்கையர்க்கரசியாகவும், பதிகம் பாடிய நம்பி

யையே ஞானசம்பந்தராகவும் பாவனை செய்து கொண்டு இந்த உலக நினைவையே மறந்து மனம் பூரித்தார்.

மதுராந்தகத்தேவரோ, ''ஆம்; நான் இளம்பிராயத்துச் சிறுபிள்ளை தான்! ஆனால் திருக்கோவலூர் மலையமானுக்கும் கொடும்பாளூர் பூதி விக்கிரம கேசரிக்கும் அவர்களுடைய ஆதரவைப் பெற்ற சுந்தர சோழரின் புதல்வர்களுக்கும் அஞ்சி விட மாட்டேன். சம்பந்தருக்கு ஆலவாயன் அருள் இருந்தது போல எனக்கும் பழுவேட்டரையர் உதவி இருக்கிறது!'' என்று எண்ணிக் கொண்டார்.

வந்தியத்தேவனுடைய செவிகளில் பாடல் ஒன்றும் புகவேயில்லை. அவனுடைய கண்களும் கருத்தும் குந்தவை தேவியினிடமே முழுதும் ஈடுபட்டிருந்தன. இளையபிராட்டி ஒருகால் தன்னைத் தெரிந்து கொள்ளவேயில்லையா, தெரிந்து கொண்டும் பராமுகமா, அல்லது தன்னிடம் ஒப்புவித்த காரியத்தை நிறைவேற்றி விட்டு வந்து உடனே சொல்லவில்லை என்ற கோபமா? — என்று இப்படி அவன் மனம் சிந்தித்துக் கொண்டிருந்தது. அத்துடன் இளையபிராட்டியைத் தனிமையில் எப்படிச் சந்திப்பது, சந்தித்துச் செய்தியை எப்படிச் சொல்லுவது என்றும் அவன் யோசனை செய்து கொண்டிருந்தான்.

பாடல்கள் முடிவடைந்ததும் செம்பியன் மாதேவி நம்பியாண்டாருடன் வந்திருந்த பெரியவரைப் பார்த்து, ''ஐயா! இந்த இளம் பிள்ளையைப் பார்த்தால் ஞான சம்பந்தரே மீண்டும் வந்து அவதரித்திருப்பது போலத் தோன்றுகிறது. இவரை அழைத்துக் கொண்டு தமிழகமெங்கும் ஊர் ஊராகச் செல்லுங்கள், அங்கங்கே கிடைக்கும் தெய்வீகமான தேவாரப்பதிகங்களைச்சேகரித்துக் கொண்டு வாருங்கள். அப்பர் பதிகங்களையும், சம்பந்தர் பதிகங்களையும் சுந்தரமூர்த்தியின் பாடல்களையும் தனித்தனியாகத் தொகுக்க வேண்டும். சிவாலயங்கள் எல்லாவற்றிலும்தினந்தோறும்பாடச் செய்ய வேண்டும். இது என் கணவருடைய விருப்பம். அதை என் வாணாளில் நிறைவேற்றிப் பார்க்க ஆசைப்படுகிறேன். நீங்கள் ஊர் ஊராய்ப் போவதற்கு வேண்டிய சிவிகைகள், ஆட்கள், பரிவார சாதனங்கள், — எல்லாம் அளிப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன். சக்கரவர்த்தியின் அனுமதியைக் கோரி என் குமாரனிடமே செய்தி சொல்லி அனுப்புகிறேன்!'' என்றார். அச்சபையில் அப்போது எழுந்த கோலாகலமான கோஷங்கள் மதுராந்தகரின் செவிகளுக்கு நாராசமாயிருந்தன.

(தொடரும்)



பேச்சாளர்களுக்கு ஒரு வேண்டுகோள்...

''கூட்டத்திலிருக்கும் ஆட்கள் எதிர்க்கட்சிக் கூட்டத்திற்கும் அட்வான்ஸ் வாங்கி இருப்பதால், பேசுபவர்கள் தலா ஐந்து நிமிஷங்கள் மட்டும் பேசி, கூட்டத்தைச் சீக்கிரம் முடிக்க வேண்டுகிறேன்!''

— மேல்குந்தை வாசு.



daCunha/GCM/147/88/TAM



கமலாவும் கம்ப்யூட்டரும்

அகஸ்தியன்

நான் காலையில் கையில் பேப்பரை எடுத்தால் என் அருமை மனைவி கமலாவிற்குப் பொறுக்காது.

''ஏன்னா... அடுப்பிலே சாத்தமுது கொதிக்கிறது. போய் அரை அணாவுக்குக் கொத்தமல்லி வாங்கிக் கொண்டு வாங்கோ...'' என்று டூ – இன் – ஒன் (அதிகாரம், அவசரம்) குரலில் என்னை விரட்டுவாள். அரையணா போய் எத்தனையோ மாமாங்கமாகி விட்டது மட்டுமல்ல, அரையணாவிற்குக் கொத்தமல்லி கேட்டால் காய்கறிக்கடைக்காரர் கொத்திக் குதறி விடுவார் என்பதும் கமலாவுக்கு மட்டும் தெரியாது!

இல்லாவிட்டால், சமையலறையிலிருந்து கத்துவாள், ''பரணிலிருந்து அப்பளக் குழவியை எடுத்துக் கொடுங்கள்'' என்று. எங்கள் வீட்டில் அப்பளக்குழவியை ஒரே ஒரு காரியத்திற்குப் பயன்படுத்துவாள் கமலா. டூத்பேஸ்ட் ட்யூபில் கடைசிச் சொட்டு 'பேஸ்ட்'டை எடுக்கக் குழவியை அதன் மேல் ஓர் ஐம்பது தடவை ஓட்டி, (ரோடு

எஞ்சின் ஏறியது போல், தட்டையாகிப் போகும் வரை) பேஸ்ட்டை எடுத்து உபயோகிப்பாள். இல்லாவிட்டால் பால்காரருடன் சண்டை போட ஆரம்பிப்பாள்.

"நேற்று முக்கால் ஆழாக்கு குறைச்சுக் கொடுத்தே. இன்னிக்கு அரை ஆழாக்குச் சேர்த்துக் கொடுத்துடு. ஞாபகம் வைச்சுக்க, இன்னும் ஏழரை ஆழாக்கு பாக்கி... நாளுக்கு நாள் பால் தண்ணியாயின்டே போறது. ஹூம்... நான் கத்தி என்ன பிரயோஜனம்...? ஐயா கிட்டே பணம் வாங்கிண்டு போயிடுவே கரெக்டா... அவர் ஒரு வார்த்தை சொல்ல மாட்டார்.. அவர் அலட்டல் எல்லாம் சமையல்கட்டு வரைதான்..." என்று பால்காரரைத் திட்டமுடியாத கோபத்தை என் பக்கம் திருப்பி விடுவாள். ஒரு விஷயத்திற்குக் கமலாவைப் பாராட்டாமல் இருக்க முடியாது. கோபம் வந்துவிட்டால் அதை வேஸ்ட் பண்ண மாட்டாள். ஒருத்தர் இல்லாவிட்டால் வேறு ஒருத்தர் மேல் அதைச் செலுத்தி விடுவாள்!

இப்படித்தான் அன்றொரு நாள் அவள் வாதம், விவாதம், விதண்டாவாதம் மூன்றையும் கலந்து நாலு வீடுகள் கேட்கும் அளவிற்கு உரத்த குரலில் பால்காரருடன் சண்டை போட்டுக் கொண்டிருந்தாள்!

"எனக்கா கணக்குத் தெரியாது. நான்தான் காலண்டரில் கரெக்டா எழுதிண்டு வர்றேனே! இதோ பார், ஒண்ணாம் தேதி இரண்டரை ஆழாக்கு, காலையில். சாயங்காலம் மூணு ஆழாக்குக் கொடுத்தே. முன்தினம் பாக்கி அரை ஆழாக்குப் போனா, இரண்டரைதான் கணக்கு. அப்புறம் இரண்டாம் தேதி மாடு உதைச்சிட்டுதுன்னு ஒன்பதரை ஆழாக்கு..."

ஆழாக்கு என்ற வார்த்தையைத் தமிழ் நாட்டில் இன்றும் பாதுகாப்பாகக் கட்டிக் காத்து உபயோகித்துவரும் ஒரே நபர் கமலாதான்.

போன வருஷம் வரை மூணே காலணா, ஆறேமுக்காலணா என்று சொல்லிக்கொண்டிருந்தவள், இப்போதுதான் நயா பைசாவிற்கு வந்தாள். ஆறு மாதம் வரை ஒரு வீசை, அரை வீசை என்று சொல்லி அதற்குக் கிராம் கணக்கில் என்னைக் கேட்டு, காய்கறி, சாமான்கள் வாங்கி வந்து கொண்டிருந்தாள்!

கமலா—பால்காரர் விவாதம், பேப்பரைப் படிக்க விடாமல் என்னைத் தடை செய்தது. ஆகவே, நான், "என்ன கமலா, பால்காரருடன் போராட்டம்? உனக்கு ஒரு கம்ப்யூட்டரை வாங்கித் தந்து விடுகிறேன். பால் கணக்குப் பார்க்க" என்றேன். அந்தக் கணம் என் நாக்கில் சனி குடியேறி இருக்க வேண்டும்!

"ஆஹா... கம்ப்யூட்டர்தானே... நீங்கதானே... ஹூம்... இந்த ஜன்மத்திலே இல்லே..."

"ஏன் கமலா இப்படி அலுத்துக்கறே... கம்ப்யூட்டர் வாங்கித் தருவேன். அதை உபயோகிக்க முதலில் கத்துக்கணும். அதுக்குன்னு என்னென்னமோ லாங்க்வேஜ் இருக்காம்."

"இருந்தால் என்ன... நம்ப வீட்டுக்கு வந்தால் நாம்ப பேசற பாஷையைத்தானா புரிஞ்சுகண்டுடறது... இப்போ நாய்க்குட்டி இருக்குது... அது வெள்ளைக்காரங்க வீட்டிலே வளர்ந்தால், 'ஸிட்'டுனா உட்காரும். இந்திக்காரன் வீட்டிலே வளர்ந்தால் 'பைட்'னா உட்காரும்... எல்லாம் பழக்கற விதத்திலே இருக்கிறது..."

"...ஆமாம், ஆமாம். கமலா, நீ சொல்றது ரொம்ப சரி," என்றேன். (இப்படிச் சொல்லாவிட்டால் இந்த விவாதம் பதினெட்டு நாட்கள் தொடரும். கமலாவிற்கு பாரதப்போரில் நிறைய ஈடுபாடு உண்டு.)

"ஊர்லே ஒரு குப்பைத் தொட்டி விடாமல் கம்ப்யூட்டர் காலேஜ் விளம்பரங்களை எழுதியிருக்காங்க... எதிலேயாவது சேர்ந்தால், தன்னாலே தெரிஞ்சுகண்டுடறது. இது என்ன பெரிய அசுர வித்தையா...?" என்று கேட்டாள்.

போதாத காலம் என்று வந்துவிட்டால் அது எத்தனையோ விதமாகவும் வரலாம். ஏன், ஏர் பஸ்ஸிலும் வரலாம் (அமெரிக்காவிலிருந்து என் மருமான் ஸ்ரீதர் உருவில்) அல்லது 17-ஆம் நூற்றாண்டு சைக்கிளிலும் வரலாம் (என் அருமை மனைவி கமலாவின் அருமைத் தம்பி தொச்சுவின் உருவில்!) எனக்கு ரொம்பவும் போதாத காலமாக இருந்திருக்க வேண்டும். ஆகவே அது இரண்டு உருவிலும் வந்தது.


அமெரிக்காவிலிருந்து வந்த ஸ்ரீதர், ஏதோ சுண்டை வற்றல், வேப்பம்பூ, வெங்கடேச சுப்ரபாத காஸட், சமைத்துப் பார் புத்தகங்கள் என்று வாங்கி ஊரைப் பார்க்கப் போக வேண்டியதுதானே? இவனை யார்தான் வாங்கியிருக்கும் கம்ப்யூட்டரைப் பற்றிப் பெருமையடித்துக்கொள்ளச் சொன்னார்கள், கமலாவின் எதிரில்...?

"மாமி... கம்ப்யூட்டர் இல்லாமல் உலகத்தில் இனிமே ஒண்ணுமே நடக்காது. எங்க வீட்டுக் கம்ப்யூட்டரில் சமையல் குறிப்பிலிருந்து இன்கம்டாக்ஸ் கணக்கு வரை எல்லாம் இருக்கு. அது மட்டுமில்லை, பால் கணக்கு, தயிர் கணக்கு கூட போடலாம்" என்றான்.

"ஏண்டா, அது என்னமோ வெவ்வேறு லாங்க்வேஜ் இருக்குன்னு உங்க மாமா பயமுறுத்தறாரே... இங்கெல்லாம் வெச்சுக்கறது கஷ்டமில்லையா...?"

"ஒரு மண்ணுமில்லை. சின்னப் பசங்கள் கூட சுலபமா உபயோகிக்கலாம்..."

"நீ சொல்லிட்டே... உங்க மாமா மனசு வந்து வாங்கணுமே... அதில்லாம பாவம் பணத்துக்கு எங்கே போவார்.? அவர் அம்மாவுக்கு அனுப்பணும்... போறாததுக்கு அவர் அக்கா, ரஜினிகாந்த், கமலஹாசன் மாதிரி வருஷசக்ரவர்த்தி. அப்பப்போ வந்துடுவா, தம்பி கையில முழுசா நூறு ரூபா நோட்டு



பிரிஜில் வைத்தால் போச்சு!

குளிர்சாதனப் பெட்டியில் (பிரிஜ்) வைத்துப் பாதுகாத்தால் மாம்பழம் கெட்டுப் போகாமல் இருக்குமா? இருக்காது என்பதுதான் பதில். மாம்பழம் வெப்ப மண்டலக் கனி வகையைச் சார்ந்தது. எனவே, இதற்குக் குளிர்சாதனம் பொருத்தமானது அல்ல. 12 டிகிரி சென்டி கிரேடுக்கும் குறைவான வெப்ப நிலையில் இருந்தால் அப் பழங்கள் அழுகி விடும்.

— கிங்கி அஹ்மது.

இருந்தால், அங்க மூக்கிலே வியர்க்கும்... போடாப்பா... அமெரிக்காவைப் பற்றியே இங்கே பேசாதே...''

ஸ்ரீதர் போட்ட விதையின் மேல் நான் வெந்நீர் விட நினைத்தேன். தைரியமில்லாததால் சும்மா இருந்து விட்டேன். ஆனால் அருமை மைத்துனன் தொச்சு அதற்கு தொழு உரம், விஜய் உரம், யூரியா, டி.ஏ.பி. என்று பலவித உரங்களைப் போடுவான் என்று தெரிந்திருந்தால், வந்தது வரட்டும் என்று வெந்நீரை விட்டிருப்பேன்.

தொச்சு ஒருநாள் வந்தான் அகால வேளையில். (அவன் எப்போதும் வந்தாலும் எனக்கு அகால வேளைதான்.)

என் மாமியாரும் கமலாவும் தொச்சுவுக்குப் பூரண கும்பம் வைத்து வரவேற்றார்கள்.

"வாடாப்பா... தொச்சு... எப்படி இருக்கே...? அங்கச்சி எப்படி இருக்கா? பசங்கள்லாம் சௌக்கியமா?'' என்று தாய்ப் பாசமும் தம்பிப் பாசமும் வெள்ளமாகப் பெருக்கெடுத்தோட, அவனை வரவேற்றனர்.

இந்த சமயத்தில் தொச்சு இருமினான்.

"என்னடா இப்படி லொக்கு லொக்குன்னு இருமறே... உடம்பைப் பார்த்துக்காமல் ஓயாமல் ஓடியாடினால் இப்படித்தான் வரும்!'' என்று அக்காக்காரி பச்சாதாபப்பட —

"ஏண்டி கமலா, எல்லாருக்கு மா நாற்காலியில் உட்கார்ந்துண்டு தத்துபித்துன்னு எழுதினால் பணம் வரும். அவனுக்குக் கெட்டிக்காரத்தனம் இருக்கு... சாமர்த்தியம் இருக்கு... அதிர்ஷ்டம் இல்லையேடி'' என்று மாமியார்க்காரி பின்பாட்டுப் பாட —

(பின்பாட்டு என்பது என்னைப் 'பின்'னால் குத்தும் பாட்டு!)

"அக்கா, அம்மா... என் இருமலை விடுங்கோ... அத்திம்பேர்கிட்ட முக்கியமான சமாசாரம் சொல்லிட்டு ஆசீர்வாதம் வாங்கிண்டு போக வந்தேன்'' என்றான் தொச்சு.

ஆசீர்வாதத்தை அவன் வார்த்தைகளால் மட்டுமல்ல, பொட்டலங்களாகவும் வாங்கிக் கொண்டு போவது வழக்கம்!

இனிமேலும் நான் பேசாமல் இருந்தால், தொச்சுவை அவமரியாதையாக நடத்தினேன் என்று பயங்கரக் குற்றச்சாட்டை, குதிரைச் சாட்டையைப் போல் என்மேல் வீசுவார்கள் என்று தெரியுமாதலால், நான் பொய்யான உற்சாகத்துடன், "என்னப்பா, தொச்சு... என் ஆசீர்வாதம் உனக்கு இல்லாமலா ...?ஏன் கமலா, தொச்சுவுக்கு காப்பி, டீப்பி எதுவும் கிடையாதா...? சொல்லுப்பா, தொச்சு...'' என்றேன்.

"இல்லே அத்திம்பேர், தொச்சு கம்ப்யூட்டர்ஸ்னு ஒரு கம்பெனி ஆரம்பிச்சிருக்கேன்...'' தொச்சு சொல்லி முடிக்கு முன், கமலா ஆயிரம் வோல்ட் மின்சாரம் பாய்ந்தது போல், "அப்படியாடா... கம்ப்யூட்டராடா... அடடா... அத்திம்பேர் கூட கம்ப்யூட்டர் வாங்கணும்னு சொல்லிக் கொண்டிருந்தார்... சொல்லுடா, சொல்லுடா... என்ன கம்ப்யூட்டர்?'' என்று ஆர்வத்துடன் கேட்டாள்.

ஏதோ ஒரு கம்ப்யூட்டர் கம்பெனிக்கு ஏஜென்சி எடுத்திருந்தான் தொச்சு. ஆகவே அடுத்த பதினைந்து நிமிஷத்திற்கு இன்புட், அவுட்புட், சி. டி. யூ., டிஸ்ப்ளே, மெமரி, மெகா பைட், ஸாஃப்ட் வேர், டிஸ்க், பேஸிக் என்று பல வார்த்தைகளைப் போட்டுக் குழப்பினான்.

"அக்கா, கோபால் லாங்வேஜ் சுலபமாகக் கத்துக்கலாம்...''

"அதென்னடா கோபால், ராஜகோபால்னு?'' என்று என் மாமியார் கேட்டாள்.

"டி — பேசுன்னு கூட ஒரு லாங்வேஜ் இருக்கு அம்மா.''

"அதென்னடா 'டி' போட்டுப் பேசறது... கம்ப்யூட்டர்னா மரியாதைகூட வேண்டாமோடா...? கலிகாலம்... சரி ... சரி ... சாப்பிட வாடா... டிபன் அடை பண்ணி இருக்கிறேன்'' என்று அழைக்க, தாய் சொல்லை, இந்த மாதிரி விஷயங்களில், தட்டாத தனயன் அடையிருக்குமிடத்தை அடைந்தான்!

தொச்சு... சீப்பாக வாங்கித் தர்றேன்னு சொல்லியிருக்கான். அதனாலே நான் கம்ப்யூட்டர் கிளாஸ்ல சேர்றேன்'' என்று ஒருநாள் கேட்டாள் கமலா.

"என்ன கமலா, இந்த வயசிலே போய்

கிளாஸ் அது இதுன்னு போக முடியுமா? சின்னச் சின்னப் பசங்கள் படிக்கிற இடத்தில் நீ போனால், பாட்டியம்மான்னுதான் கூப்பிடுவாங்க..."

"இருக்கட்டுமே... அப்புறம் பேப்பர்லே வந்திருக்கிற விளம்பரத்தைப் பார்த்தீங்களா? ஏழாம் தேதிக்குள் சேர்ந்தால் இருநூறு ரூபாய் ட்யூஷன் சம்பளத்தில் சலுகையாம்... நான் கூடப் பார்க்கலை. அங்கச்சிதான் பார்த்தாளாம். அவ ஓடி வந்து சொன்னா..." என்றாள் கமலா.

ஓஹோ! அங்கச்சியும் வந்தாயிற்றா, தன் பங்குக்குக் கைங்கரியம் செய்ய! இனி, என் பேச்சு எங்கே எடுபடப் போகிறது?

"செய் கமலா... எவ்வளவு வாரம் பயிற்சி?" என்று கேட்டேன்.

அடுத்த மூன்று மாதம் கமலா கம்ப்யூட்டர் வகுப்புக்குப் போனாள். அவ்வப்போது தொச்சு வந்து, "அக்கா, எப்படி போறது கிளாஸ்...? உனக்குச் சொல்லித் தரனுமா...? கற்பூரம் மாதிரி யாச்சே... 'கப்'புன்னு பிடிச்சிப்பியே..." என்று ஐஸ் வைத்துக் கொண்டிருந்தான். அவன் ஐஸ் வைக்க வைக்க எனக்கு உடம்பெல்லாம் எரிந்தது!

இருநூறு ரூபாய் மிச்சம் பிடிக்கச் சேர்ந்ததால் அந்தக் கம்ப்யூட்டர் சர்வகலாசாலை(!) ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம் மாதிரி நடந்தது. இருந்தாலும் மூன்று மாத முடிவில் விலைஉயர்ந்த காகிதத்தில் அழகாக அச்சிடப்பட்ட சர்டிபிகேட்டை லாமினேட் செய்து கமலாவிடம் கொடுத்தார்கள். ரூபாய் நோட்டைவிட விலை உயர்ந்த காகிதம் அது! காரணம் அதன் விலை மதிப்பு 1500 ரூபாய்! பட்டமளிப்பு(!!) விழாவிற்கு ஒரு முன்னாள் எம். எல். ஏ.வை அழைத்து இருந்தார்கள். அவர் கமலாவை ஆகா, ஓகோ என்று பாராட்டினார். "இந்த வயதிலும் படிக்கும் ஆர்வம் கொண்ட இந்தத் தாய்க்குலத்திற்குத் தலை வணங்குகிறேன். இது தமிழ்ப்பெண்களுக்கே உரிய அரிய பெரிய சிறப்பு... அன்று இமயத்திற்குச் சென்று கனக, விஜயர்கள் தலையில் கல் கொண்டு வந்தார்கள்..." எந்த நிகழ்ச்சியானாலும் முதல் இரண்டு வாக்கியங்களுக்குப் பிறகு கனக விஜயர்களைப் பிடித்துக் கொண்டு விடுவார் எம். எல். ஏ!

ஒருநாள் ஆபீஸிலிருந்து வீடு திரும்பும்போது சமையலறையில் தொச்சுவின் குரல் கேட்டது. (அவனுக்கு என் வீட்டின் சமையலறையின் மேல் அலாதியான ஈடுபாடு).

"அக்கா... மந்தைவெளியிலே இப்பத்தான் காலேஜ் ஆரம்பிச்சான் அந்த பையன். இப்போ அமெரிக்காவில வேலை கெடைச்சுட்டுது... போறான்..."

"சரி தாண்டா தொச்சு... சீப்பா வர்றதுன்னு சொல்றே... நானும் கொஞ்சம் படிச்சுட்டேன். ரொம்ப சௌகரியம்தான், வீட்டிலே ஒண்ணு இருந்தால்... ஆனா..."

"என்ன அக்கா... அத்திம்பேர் ஒரு நாவல் எழுதினால் ஐயாயிரம் ரூபாய் வர்றது.



ராஜீவ் புகழ்

ராஜீவ் காந்தியின் புகழ் இப்போது உலகம் முழுவதும் பரவியிருக்கிறது. பம்பாயிலும், டெல்லியிலும் ஆங்கிலத்தில் நடைபெற்ற ஒரு நாடகத்தைப் பற்றிக் கேள்விப்பட்டேன்.

அதிலே ஒரு காட்சி! 'ஏர் இந்தியா' விமானத்தில் பயணிகள் பயணம் செய்கிறார்கள். அரபு நாட்டைச் சேர்ந்த ஒரு ஷேக், அந்த விமானத்தில் இருக்கிற அழகான ஓர் ஏர்ஹோஸ்டஸைப் பார்க்கிறார். பார்த்தவுடன் பக்கத்திலே இருக்கிற பிரயாணியிடம், அந்த ஏர்ஹோஸ்டஸை நான் விலைக்கு வாங்கப் போகிறேன் என்று சொல்கிறார். பக்கத்தில் இருந்த பயணி அந்த ஏர்ஹோஸ்டஸ் (பணிப்பெண்) 'ஏர் இந்தியா'விற்குச் சொந்தம். ஆகவே உன்னால் வாங்க முடியாதென்று சொல்கிறார். அப்படியானால் நான் 'ஏர் இந்தியாவை'யே விலைக்கு வாங்குகிறேன் என்று ஷேக் சொல்கிறார். இல்லை 'ஏர் இந்தியா' இந்திய அரசிற்குச் சொந்தம் என்று பக்கத்துப் பிரயாணி ஷேக்கிடம் சொல்கிறார். அப்படியானால் இந்திய அரசையே நான் விலைக்கு வாங்குகிறேன் என்று ஷேக் சொல்கிறார். அதற்கு அந்தப் பிரயாணி அதுவும் முடியாது. ஏனென்றால், இந்திய அரசை ஏற்கெனவே 'போஃபர்ஸ்' விலைக்கு வாங்கி விட்டது என்று சொல்கிறார். இதுதான் ராஜீவ் காந்தியின் இன்றைய நிலைமை.

விஜயவாடா தெலுங்கு தேசக் கட்சி மாநாட்டில் கூறியவர் கலைஞர்.

தொகுப்பு: பி.எஸ்.கே.

அவருக்கு இன்னிக்கு இருக்கிற டிமாண்டிற்கு, எது வேண்டுமானாலும் வாங்க முடியும்!" (தொச்சு பெரிய வலையாக விரிக்கிறான்!)

நான் உள்ளே நுழைந்ததைப் பார்த்ததும் தொச்சு, "அத்திம்பேர் வாங்கோ. உங்களைப் பத்தித்தான் பேசிண்டிருந்தோம்...! அக்கா... அத்திம்பேருக்கு ஒரு கப் காப்பி கொடு" என்று உபசரித்தான். என்வீட்டுக்காப்பியை எனக்குக் கொடுப்பதில் அவன் மன்னன்!

"என்னப்பா தொச்சு... நீ வந்தாலே என் பர்ஸுக்கு டபுள் நிமோனியா வந்துடும்..." என்று நான் ஆரம்பிக்க, கமலா —

"ஆமாம், சொல்ல மாட்டீங்க: அவனால ஆயிரம் லாபம் கிடைச்சதை மறந்துடுவீங்க. ஒரு ஒண்ணே காலணா ("ஆமாம், கமலா இன்னும் காலணா யுகத்தில்தான் இருக்கிறாள்!") நஷ்டம் ஆனா, குடிமுழுகிப் போன மாதிரி கத்துவீங்க. உங்க அம்மா ஒரு மொக்கைப் பென்சிலால் கார்டு எழுதி விட்டால் உடனே தலையை அடகு வெச்சாவது பணத்தைக் கொட்டுவீங்க. அம்மாவுக்குச் செய்ய வேண்டியதுதான். அதுக்கும் அளவு வேண்டாமோ...? இவ்வளவு செய்றீங்களே, ஒரு திருப்தி உண்டா? அது ரத்தத்திலேயே கிடையாது. ஏன், என் கல்யாணத்தில் ஜானவாசத்தின் போது..." — கமலா முப்பது வருஷ புராணத்தை ஆரம்பித்து விட்டாள்.

நான் அவளைப் பேச விடாமல், "விடு கமலா... என்ன தொச்சு? என்ன சேதி?" என்று சர்க்கரை தடவிய விஷம் தோய்ந்த குரலில் கேட்டேன்!

"அத்திம்பேர்... ஒரு கம்ப்யூட்டர். பிராண்ட் நியூ... விலைக்கு வர்றது. அதை வாங்கின பையனுக்கு அமெரிக்காவிலே வேலை கெடைச்சுட்டுது... போறான். வந்த விலை வரட்டும். கொடுத்துடறேன்னு சொன்னான்... பன்னிரண்டாயிரம்தான். அப்பழுக்கில்லாமல் இருக்கு. அக்காதான் படிச்சிருக்காளே... உபயோகமாக இருக்கும்..." என்றான்.

"பன்னிரண்டாயிரமா? நம்மால முடியாது. எவ்வளவு குறைப்பானாம்?"

"உண்மையைச் சொல்றேன் அத்திம்பேர். பன்னிரண்டாயிரத்துக்கு விற்றுக் கொடுத்தால் எனக்கு ஆயிரம் ரூபாய் தர்றேன்னு சொன்னான். அதனால் பதினொண்ணுக்குச் செட்டில் பண்றேன். எனக்கு ஆயிரம் இல்லாவிட்டால் போகிறது." என்றான்.

"அத்திம்பேருன்னா, வர்ற லாபத்தையும் விட்டுடுவான் தொச்சு... அவனுக்குப் பணம் முக்கியமில்லை. மனுஷாள்தான் முக்கியம்" என்று அவசர சர்டிபிகேட்டை என் மாமியார் கொடுத்தாள்.

கமலா, "இல்லை அம்மா..." என்று ஆரம்பித்தாள். மேல்கொண்டு என்னென்ன வசனங்கள், வசவுகள், சாடல்கள், நிஷ்டூரப் பேச்சுக்கள் வரும் என்று எனக்குத் தெரியுமாதலால், நான் இடைமறித்து, "செய்ப்பா, தொச்சு. நல்ல கண்டிஷன்ல இருந்தா பத்தாயிரத்திற்கு வாங்கிக்கறேன்" என்றேன்.

"டன், அத்திம்பேர்" என்றான், தொச்சு. சரியான திரு "டன்."

கம்ப்யூட்டர் வந்துவிட்டது. அதற்கு அழகான மேஜை. தூசு படியாதிருக்க எம்ப்ராய்டரி பண்ணிய கவர் எல்லாம் போட்டாயிற்று. கமலா ஒரு வாரம் விடாமல் அதன் முன்னேயே உட்கார்ந்து இருந்தாள். சில சமயம் அவள், "சே, என்ன கம்ப்யூட்டர்?" என்று அலுத்துக் கொள்வாள். காரணம், சும்மா 12 X 8 என்ற பெருக்கலுக்கு முழு ஸ்கிரீன் அளவு 200 எண்களில் விடை(!) வரும். கம்ப்யூட்டருக்கு ஆழாக்கு, வீசை, காலணா, மரக்கால், கெஜம், மைல் என்பதெல்லாம் புரியவில்லை. கமலா அதற்குக் 'கமலா லாங்வேஜ்' கற்றுக்கொடுக்க எடுத்த முயற்சிகள் பலிக்கவில்லை!

அதென்னப்பா நீ தப்புத் தப்பாகக் கணக்குப் போடறே! ஒண்ணாம் தேதி முக்கால் ஆழாக்குக் குறைச்சுக் கொடுத்தே. அப்புறம் ஆறேமுக்காலணா பணம் பாக்கி இருக்கு...

பால்காரருடன் கமலாவின் வழக்கமான விவாதம்தான்!

கமலாவிடம் கம்ப்யூட்டர் தோற்று விட்டது!



"மந்திரி! நம் வீரர்கள் அனைவரும் புறமுதுகிட்டு வந்துள்ளனர். ஆனால் ஒருவருக்குக் கூட முதுகில் காயமில்லையே எப்படி?"

"நம் வீரர்கள் முன்னெச்சரிக்கையாகக் கவசத்தை முதுகுப்புறம் அணிந்து சென்றார்கள் மன்னா!"

— எஸ். சரவண செல்வன்.

"உன் சிரிப்பு எனக்குப் புரியலை" என்றான் தீபக்.

"என்ன புரியலை?" என்றான் ஷியாம் — சிகரெட் புகையை அவன் முகத்தில் செல்லமாக ஊதி.

"உன் நடவடிக்கை எல்லாம் விசித்திரமா இருக்கு. ஆத்திரமாக வேண்டிய நீ அடங்கிப் பேசறே, மன்னிப்புக் கேக்கறே. வேலையை ராஜினாமாச் செய்யறே. இதெல்லாம் என்ன?"

"ஏன் தீபக், ஒரு மனுஷன் ஏதாச்சும் ஒரு சந்தர்ப்பத்திலே திருந்தவே கூடாதா?"

"இந்த டயலாக் எல்லாம் இங்கே வேணாம் கண்ணா. எனக்கு உன்னைப் பத்தி முழுசாத் தெரியும்."

"என்ன தெரியும்?"

"பழி வாங்கறதில யானை நீ. சரியான சந்தர்ப்பத்துக்காக மறக்காம காத்திருக்கிற வன். ஏற்கெனவே எத்தனை விஷயங்கள்ல பார்த்திருக்கேன் உன்னை."

"அந்தக் குணம் எல்லாத்தையும் நிவிதா பஸ்பமாக்கிட்டா தீபக். நான் அவகிட்டே சந்தேகமில்லாம தோத்துட்டேன். இந்தத் தோல்வி எனக்குள்ளே சில தெளிவுகளை ஏற்படுத்தியிருக்கு. மிருக புத்தி கொஞ்சம் உள்ளே உலாவிக்கிட்டிருந்தது. இப்ப காணோம். மனசு நிர்மலமா இருக்கு. நீ நம்பு. நம்பாம போ. நிவிதா என்னை மாத்திட்டா."

தீபக் அவனை மௌனமாகப் பார்த்தான். எழுந்து அவன் எதிரில் இரண்டு கைகளையும் இடுப்பில் வைத்துக் கொண்டு பார்த்தான்.

"ஸோ, நீ திருந்திட்டே?"

"டபுள் எஸ்."

"நிவிதா மேல் நீ எந்த நடவடிக்கையும் எடுக்கப் போறதில்லை?"

"நிச்சயமாக் கிடையாது."

"சரி வேலையை எதுக்காக ராஜினமாச் செஞ்சிருக்கே?"

"எனக்குள்ளே சாத்தானை அனுமதிச்சதுக்காக எனக்கு நானே கொடுத்துக்கற தண்டனை அது."

"பைத்தியக்காரத்தனமா இருக்கு."

"எப்படி வேணும்னாலும் எடுத்துக்கோ."

"என்ன செய்யப் போறே இனிமே?"

"ரிலீவர் வர்ற வரைக்கும் ஆபீஸ் போய் வருவேன்."

"அதுக்கப்புறம்?"

"அதுக்கப்புறம்... இன்னும் தீர்மானிக்கலை. என்ன செய்யலாம்? நீதான் சொல்லேன்."

தீபக் தன் தலையை உலுக்கிக் கொண்டு அமர்ந்தான். சிகரெட் எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான்.

"ஷியாம், நான் சொன்னா எடுத்துப்பியா?"

"எடுத்துக்கிற மாதிரி நல்ல யோசனை இருந்தாச் சொல்லு. எடுத்துக்கறேன்."

"நிவிதா விஷயத்தை மற. இதோட விட்டுடு. உன் வேலையை ராஜினாமாச் செஞ்சதை வாபஸ் வாங்கிக்க. உன் வேலையைத் தொடர்ந்து செய். அதே ஆபீஸ்ல தினம் அவளைப் பார்க்கிறது உன்னைச் சங்கடப்படுத்தும்னா, ஒண்ணு அவளுக்கு வேறே எங்கேயாவது டிரான்ஸ்ஃபர் ஏற்பாடு செய். இல்லைன்னா உனக்கு டிரான்ஸ்ஃபர் வாங்கிக்க. அதை விட்டுட்டு ராஜினாமாச் செய்றது ரொம்ப அதிகப்படியா இருக்கு. முட்டாள்தனமாவும் இருக்கு."

ஷியாம் தீபக்கைத் தீர்க்கமாகப் பார்த்தான். திடீரென்று வாய் விட்டுச் சிரித்தான். கண்களில் நீர் துளிக்கும் வரை சிரித்தான்.

"ஏண்டா இப்பச் சிரிக்கிறே?"

"உன்னைப் பார்த்தாப் பரிதாபமா இருக்கு."

ஆகவே செக்ஷன் 302 படி

"இது நான் சொல்ல வேண்டிய வார்த்தை ஷியாம்."

"முட்டாள் தீபக்! எத்தனை வருஷமா நீ என்னோட பழகறே? என்னை நீ புரிஞ்சு வச்சிருக்கிறது இவ்வளவுதானா?"

"இப்பத்தான் ஷியாம் நீ புதுசா என்னைக் குழப்பறே."

"குழப்பாம தெளிவாச் சொல்லட்டுமா?"

"சொல்லு."

"நிவிதாவோட உடம்பு மேல எனக்கு இருக்கிற ஆசையை விட.... இப்போ அவளைக் கதறக் கதற வஞ்சம் தீர்க்கணும்ங்கற வெறிதான் அதிகமா இருக்கு தீபக். நான் அவமானம் பொறுக்க மாட்டேன்டா. ஒரு பொம்பளை — எனக்குக் கீழே வேலை பார்க்கிறவ போலீஸ்காரங்க முன்னாடி, அவளோட ஃப்ரெண்ட்ஸ் முன்னாடி என்னைத் தலை குனிய வச்சது உடனடியா மறந்து போற விஷயமா? பதிலுக்கு அவ தலை குனிய வேணாம்? வாழ் நாள் முழுக்கக் குனிய வேணாம்? அதை நடத்திக் காட்

டாம ஓய்வேனா நான்?''

''இதான் ஒரிஜினல் ஷியாம். சொல்லு. பின்னே, வேலை ராஜினாமா நாடகம் தானே?''

''இல்லை. நிஜமாவே ராஜினாமாச் செய்றேன். அது மட்டுமில்லை தீபக், இன்னிக்கு நிவிதாவை என் அறைக்குக் கூப்பிட்டு அவ கால்ல விழுந்து மன்னிப்புக் கேட்டேன் தெரியுமா?''

''நிஜமாகவா? என்னப்பா இது...? பழி வாங்குவேன்னு சொல்றே. கால்ல விழுந்தேன்னு சொல்றே... ஒரே முரண்பாடா இருக்கே...''

''இது ஒரு வகைத் தந்திரம் தீபக். எந்தப் பொம்பளையையாவது படுக்கைக்குக் கூப்பிட்டுப் பாரு, என்ன நடக்கும்? அதிலேயும் நம்ம நிவிதா மகா ரோஷப் பொம்பளை. திட்டம் போட்டுச் சதி பண்ணிக் கூப்பிட்டிருக்கேன். எவ்வளவு ரோஷம் வரும்? நடந்த சம்பவத்துக்கு இன்ஸ்பெக்டரே சாட்சி சொல்லத் தயாரா இருக்கார். நிவிதா என் மேல கேஸ் போடலாம். ஹெட் ஆபீஸுக்கு இன்ஸ்பெக்டரோட ரிப்போர்ட்டோட பெட்டிஷன் போடலாம். நிச்சயம் செய்யக் கூடியவ. சென்சா ஆபீஸ் முழுக்க விஷயம் தெரியும். என் மானமும் போகும். வேலையும் போகும். அந்த அவமானத்தை முதல்ல தடுத்துட்டு. அப்புறம்தான் நிவிதாவை வஞ்சம்தீர்க்கிற சமாசாரத்துக்கு வரணும்னு தீர்மானிச்சேன். அவ மூலமா வேலை போறதுக்கு முன்னாடி நானாக ரிசைன் செய்யறது என் கௌரவத்தைக் காப்பாத்தும். நிவிதாவுக்கு என் மேல இரக்கம் ஏற்படுத்தும். அவ வேகத்தைக் கட்டுப்படுத்தும். கால்ல விழுந்ததோட, நடந்த சம்பவத்தை என் கைப்பட எழுதியும் கொடுத்தேன் துணிச்சலா.''

''அடப்பாவி! அது உனக்கு ஆபத்துப்பா.''

''நான் எதிர்பார்த்த மாதிரியே என் பேச்சு அவளைக் கரைச்சிடுச்சி. ஒரு ஆம்பளை தன் கால்ல விழறதை எந்தப் பொம்பளையும் சகிச்சுக்க மாட்டா. அதிலேயே பாதி ஆத்திரத்தைப் பிடுங்கியாச்சு. நான் பேசின விதத்திலே, உன்னை மாதிரியே அவளும் நம்பிட்டா. எழுதிக் கொடுக்கிற மாதிரி கொடுத்து அவ கையாலேயே அந்த வாக்குமூலம் லெட்டரைக் கிழிச்சிப் போடவும் வெச்சேன்.''

''இல்லாடிப்பா நீ. அப்புறம்?''

''அப்புறம் என்ன? இனிமே நேரா கிளைமாக்ஸ்தான். ஆனா அவசரமே இல்லாத திட்டம் இந்தத் தடவையும். போன தடவை மாதிரி இந்தத் தடவை தோற்கவே மாட்டேன்.''

''என்ன செய்யப் போறே ஷியாம்?''

''தீபக், போன தடவை என் திட்டத்தோட ஒவ்வொரு வரியும் உனக்குத் தெரியும். நீயும் ஒத்துழைச்சே. இந்தத் தடவை ஒரு மாறுதல்.



செக்ஷன் 302படி குற்றவாளி யார்?
ஊகித்தால்
பரிசு ரூ 1000

இந்தக் கதையின் முடிவு நெருங்கும் போது வாசகர்களுக்கு ஒரு போட்டி காத்திருப்பதாகக் கூறினோம். இதோ:

1. இந்தத் தொடரில் உங்களைக் கவர்ந்த 'நறுக்'கென்ற வரிகள் யாவை?

2. செக்ஷன் 302—க்கான குற்றம் கொலை. கதையில் அந்தக் குற்றத்தைச் செய்யப் போகிறவர் யார்?

3. கொலை செய்யப்படும் நபர் யார்?

மூன்று பதில்களை ஓர் அஞ்சல் அட்டையில் எழுதி, உங்கள் விலாசத்துடன் அனுப்பவும். "செக்ஷன் 302 போட்டி" என்று தலைப்புத் தரவும். முடிவு தேதி: 22.6.88.

ஆசிரியர், கல்கி, சென்னை—600 032

"என்ன?"

"திட்டத்தைச் செயல்படுத்திட்டு அதுக்கப்புறம்தான் உன்கிட்டே சொல்றதுன்னு இருக்கேன்."

தீபக் அவசரமாகக் குறுக்கிட்டான்.

"ஷியாம், என்னடா இது திடீர்னு சேம்சைடு கோல் போடறேனேன்னு நினைக்காதே. நிவிதாவை நீ அவமானப்படுத்தினே. அவளும் உன்னை அவமானப்படுத்திட்டா. ரெண்டுமே ரகசியமா நடந்ததுதான். மேல் நடவடிக்கை எதுவும் அவ எடுத்துட முடியாதபடிக்கு அவகிட்டே மன்னிப்புக் கேட்டு வச்சிருக்கே. நவ் யூ ஆர் ஸேஃப். இந்த விவகாரத்தை இதோட விட்டுடேன். மறுபடியும் அவளை வஞ்சம் தீர்க்கறது... திட்டம் போடறது... இதெல்லாம் வேணாமே..."

சற்று நேரம் அமைதியாக இருந்த ஷியாம் நிதானமாகச் சொன்னான்:

"தீபக், என் மனசுல உள்ள தகிப்பு உனக்குப் புரியாது. எனக்கு இன்னும் ஒரு தடவை இதே மாதிரி நீ அட்வைஸ் செஞ்சேன்னா 'ப்ளீஸ் கெட் அவுட்'ன்னு சொல்ல வேண்டி வரும். அவ்வளவு சூடா இருக்கேன் நான்."

"பிடிவாதம்ப்பா. நான் சொல்லியா கேக்கப் போறே? உன் இஷ்டம்ப்பா. உன் வஞ்சம் தீர்க்கிற முயற்சி எனக்குப் பிடிக்கலை."

"உனக்குப் பிடிக்கணும்னு அவசியமில்லை."

"என் ஒத்துழைப்பு எதுவும்..."

"எதிர்பார்க்கலை. தேவையும் இல்லை. அப்புறம்?"

"ஷியாம், இவ்வளவு முரட்டுப் பிடிவாதம் வேணாம். நிவிதா எந்தத் தப்பும் செய்யலை. பிரச்னையை ஆரம்பிச்சது நீதான். யோசிச்சு விவேகமா நடந்துக்க. அவ்வளவுதான் சொல்வேன்."

"முடிச்சிட்டேயில்லே? நன்றி."

"அப்போ வேலையை விட்டது..."விட்டதுதான். அப்படித்தானே?"

"அப்படித்தான். ஆனா புத்திசாலித்தனமான மாற்று ஏற்பாடோடதான் அதைச் செஞ்சேன் தீபக். கொச்சின்ல இருக்கிற ஒரு பிரைவேட் கம்பெனியோட எம். டி.யை எனக்குப் பர்சனலாத் தெரியும். இந்தக் கம்பெனியில் கொடுக்கிற சம்பளத்தைவிட மாசம் ஐந்நூறு ரூபா அதிகம் தர்றேன். எங்க கம்பெனிக்கு வந்துடுங்கன்னு அடிக்கடி சொல்லிக்கிட்டே இருந்தார். நேத்து அவருக்கு போன் போட்டு உறுதி செஞ்சிக்கிட்டேன். இங்கே ராஜினாமாச் செஞ்சிட்டு ஒரு மாசம் சும்மா சுத்திக்கிட்டிருந்துட்டு அப்புறம் உங்க கம்பெனியில சேர்றேன்னு சொன்னேன். ஒத்துக்கிட்டார். அந்தத் தைரியத்திலேதான் வேலையை ராஜினாமா செய்றேன். எப்படி தீபக்?" என்று கண்ணடித்த ஷியாமை ஆச்சர்யமாகப் பார்த்தான் தீபக்.

அந்தப் பங்களாவின் முன்னால் பைக்கை நிறுத்தி விலாசத்தைச் சரி பார்த்துக் கொண்டான் வினோத்குமார்.

கீழே இறங்கினாள் நிவிதா.

"ஆத்மா டிஸ்ட்ரிபியூட்டர் முதலாளி வீடு இதுதான் நிவிதா. வா, போகலாம்."

இருவரும் முன் கேட்டில் கையைவைக்க உடன் நாய் குரைத்தது. எட்டிப் பார்க்க, அந்த நாய் சங்கிலியால் கட்டிப் போடப்பட்டிருந்தது.

"வா, ஒண்ணும் செய்யாது. அந்த டிராஃப்ட் எடுத்து என் கையில கொடுத்துடு. பேச வேண்டியதைப் பூரா நானே பேசிக்கிறேன்" என்றான் வினோத்குமார்.

முன் வாசல் கதவுக்கருகில் இருந்த அழைப்பு மணியை ஒலிக்கச் செய்துவிட்டு இருவரும் காத்திருந்தார்கள்.

(தொடரும்)

ஊனமுற்றவர் டாக்டராக முடியாதா?

''இளம் வயதிலேயே இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட நான் இரண்டு கால்களின் இயக்கத்தையும் இழந்தவனானேன். இருப்பினும் இடைவிடாத பயிற்சியினாலும் முயற்சியினாலும் ஊன்று கோல்களின் உதவியுடன் நடமாடும் திறன் பெற்றேன்.. அப்போதே, என்னைப் போன்ற உடல் ஊனமுற்றவர்களுக்குச் சேவை செய்ய வேண்டும். அதற்கு டாக்டர் படிப்புத்தான் சிறந்தது: எனவே நான் எப்பாடு பட்டாவது டாக்டருக்குத்தான் படிக்க வேண்டும் என்று ஒரு வைராக்கியத்தோடு படிக்க ஆரம்பித்தேன்.

''கடந்த 85—ல் பிளஸ் டு தேர்வில் எழுபத்தெட்டுச் சதவிகித மதிப்பெண்கள் பெற்றுத் தேறினேன். 86—ல் மருத்துவக் கல்லூரிக்கு விண்ணப்பித்தேன். அதற்கான நுழைவுத் தேர்வும் எழுதினேன். ஒரு பதிலும் வரவில்லை. எனினும் மனம் சோர்ந்து போகாமல் கடந்த ஆண்டும் விண்ணப்பித்து நுழைவுத் தேர்வு எழுதினேன்.

''நான் விண்ணப்பித்ததும் நுழைவுத் தேர்வு எழுதியதும் ஊனமுற்றோருக்கான ஒதுக்கீட்டில்தான் என்றாலும், நான் ஊன்று கோல்களின் உதவியின்றி நடமாடும் நிலையிலிருந்தால்தான் என்னை மருத்துவக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ள இயலும் என்று மருத்துவக் கல்வி இயக்குனரகத்திலிருந்து கடிதம் வந்தது. நான் சோர்ந்து போனேன்.



''இந்த நிலையில்தான் தஞ்சை மருத்துவக் கல்லூரியில் சீனிவாசன் என்பவர் கடந்த 75—ல் சக்கர நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே டாக்டருக்குப் படித்துத் தேறினார் என்ற செய்தியைப் பழைய பத்திரிகையொன்றில் படித்தேன். உடனே எனக்கு உற்சாகம் தாங்கவில்லை. அந்தச் செய்தியை எடுத்துக் கொண்டு மருத்துவக் கல்லூரி இயக்குனரகத்திற்கு ஓடினேன். அதைக் கண்ட அவர்கள், இம் மாதிரி விஷயங்களைத் தீர்மானிப்பது நாங்கள் அல்ல. இந்திய மெடிகல் கௌன்ஸில் என்ற குழு இருக்கிறது. அவர்கள் சட்ட திட்டங்களைச் சற்று மாற்றினால் நாங்கள் உங்களுக்கு அனுமதி அளிக்கலாம். எதற்கும் நீங்கள் 'இந்த ஆண்டு நடக்கப் போகும் மருத்துவக் கல்லூரியில் சேருவதற்கான நுழைவுத் தேர்வில் கலந்து கொண்டு எழுதுங்கள். இந்தப் பத்திரிகைச் செய்தியை வைத்துக் கொண்டே உங்களுக்கு இடம் தர வேண்டுமென்று போராடலாம். அதற்கு நாங்களும் எங்களால் ஆனதைச் செய்கிறோம்...' என்று நம்பிக்கையூட்டியிருக்கிறார்கள். அந்த நம்பிக்கையைக் கொண்டுதான் வரும் ஜூலையில் நடக்கவிருக்கும் நுழைவுத் தேர்விலும் கலந்து கொள்ளப் போகிறேன்...'' என்கிறார் சென்னை ரங்கராஜபுரத்திலிருக்கும் தி. பாஸ்கரன்.

இறுதியில், ''இதில் ஒரு பெரிய கொடுமை என்ன தெரியுமா சார்! ஊன்று கோல்களின் உதவியின்றி நிற்க முடியாத என்னை அரசு மருத்துவக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளத்தான் விதிகள் இடம் தரவில்லையாம். இரண்டரை லட்ச ரூபாய் 'டொனேஷன்' கொடுத்தால் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளத் தயாராய் இருக்கிறார்கள். அங்கே இந்த விதிமுறைகளெல்லாம் குறுக்கே வரவில்லையாம்! இந்த ஒரு காரணத்திற்காகவே நான் இந்த முறை அரசாங்கத்தோடு நேருக்கு நேர் நின்று போராடத் துணிந்து விட்டேன்!'' என்றார் பாஸ்கரன்.

தன்னம்பிக்கை மிகுந்த பாஸ்கரனுடைய பேச்சுக்கள் அவருக்கிருக்கும் உடல் ஊனத்தையே மறக்கடிக்கச் செய்து விடுகின்றன. அவருடைய போராட்டம் வெற்றி பெற நமது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

சந்திப்பு: **பிரின்ஸ்**

வண்ணப்படம்: **கே. வி. ஆனந்த்**

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க

டெபாசிட் சேகரிப்பு விழா!

30-6-89 வரை நீடிக்கப்படுகிறது

ஜெயசக்தி

வழங்கும்

அன்பளிப்புகளுடன் இணைந்த

கீழ்க்கண்ட வட்டி விகிதங்களில் பிக்ஸட் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

காலம்	வட்டி
6 மாதங்கள்	18%
1 வருடம்	19%
2 வருடங்கள்	20%
3 வருடங்கள்	21%

முதலீட்டுத் தொகை	சிறப்புப் பரிசு
ரூ. 1,00,000	ஒரு சவரன் அல்லது ரூ. 3000/- ரொக்கம்
ரூ. 50,000	பூஜை மணை அல்லது ரூ. 1500/- ரொக்கம்
ரூ. 25,000	வெள்ளி காமாட்சி விளக்கு அல்லது ரூ. 750/- ரொக்கம்
ரூ. 10,000	வெள்ளி குத்து விளக்கு அல்லது ரூ. 300/- ரொக்கம்
ரூ. 5,000	வெள்ளி கிண்ணம் அல்லது ரூ. 150/- ரொக்கம்



அன்பளிப்பின் விவரம் :-

* மூன்று வருடத்திற்கு குறையாமல் டெபாசிட் செய்பவர்களுக்கு மட்டும் மேற்கண்ட சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்.
* 3 வருடத்திற்கு குறைவாக டெபாசிட் செய்பவர்களுக்கு 2% CASH INCENTIVE மதிப்புள்ள பொருள்கள் வழங்கப்படும்.

ஜெயசக்தி பைனான்சியர்ஸ்

(FIRM)

39, நடேசன் தெரு, (2வது மாடி), சிவா-விஷ்ணு கோவில் அருகில்
தி.நகர், சென்னை-600 017. போன் : 442218

விபரம் வேண்டுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

- சென்னை :- 39, நடேசன் தெரு, (2வது மாடி) தி.நகர், போன் :- 442218
- திருச்சி :- 22, மதுரை ரோடு, (முதல் மாடி) ராஜா தியேட்டர் அருகில், போன் :- 31376/33397
- கோயமுத்தூர் :- 666, ராஜா தெரு, (முதல் மாடி) போன் :- 34369
- மதுரை :- 41, வடக்கு வெளி வீதி, (முதல் மாடி) [illegible], போன் :- 37233
- பாண்டிச்சேரி :- 11, நேரு தெரு, ([illegible] எதிரில்) 2வது மாடி, போன் :- 26493/26471
- திருநெல்வேலி :- 18-K, [illegible], போன் :- 25785/25702
- தஞ்சாவூர் :- எண், 2 & 3 முதல் மாடி, [illegible] ரோடு, போன் :- 21626/22286
- பெங்களூர் :- 24/1-A, [illegible] ரோடு, (10வது கிராஸ்) மல்லேஸ்வரம், போன் :- 366971
- கும்பகோணம் :- 12, கிழக்கு சாரங்கபாணி தெரு, போன் :- 22647
- திருவண்ணாமலை :- 14/A, [illegible] தெரு, போன் :- 2483
- பட்டுக்கோட்டை :- 121/B, [illegible] தெரு, போன் :- 453
- தூத்துக்குடி :- 10 & 11, [illegible].
- வேலூர் :- 'கோல்டன் பில்டிங்' ([illegible] அருகில்) [illegible] தெரு, வேலூர்-632 004.
- ஈரோடு :- 19, பார்க் ரோடு, ([illegible] தியேட்டர் அருகில்) ஈரோடு-3, போன் :- 24577

LOTUS/38/88/Tam



ஓடு தொழிற்சாலை நசுக்கப்படுகிறது

சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன், காஞ்சிப் பெரியவர் ஒரு செங்கல் தொழிற்சாலைக்கு வந்தார். அமைந்தகரை தாண்டி, அண்ணாநகர் அருகேயுள்ள திருமங்கலம் என்னுமிடத்தில் இருந்தது தொழிற்சாலை. அங்கே தங்கி, சங்கர ஜெயந்தியும், கோ பூஜையும் பண்ணினார்.

மேற்குக் கடற்கரைப்பகுதியில் உள்ள மங்களூர், கோழிக்கோடு நகரங்களில் தயாரிப்பது போல, தமிழ்நாட்டில் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் ஓடுகள் தயாரிக்கும் தொழிலே கிடையாது. அப்படி ஓடு தயாரிக்கும் தொழில் ஆரம்பிக்கலாமா, அல்லது அந்த நிலத்தில் சர்க்கரை ஆலை அமைக்கலாமா என்று செங்கல் சூளை உரிமையாளர் ஏ. கே. ரங்கநாதன் பெரியவர்களைக் கேட்டார்.

''ஏழைகளுக்கு வீடு கட்டச் சௌகரியமாய் ஓட்டுத் தொழிற்சாலையே அமையுங்கள். குறைந்த செலவு வீடு, கிராமப்புற வீடு எல்லாவற்றுக்கும் உதவியாக இருக்கும்'' என்றார் காஞ்சிப் பெரியவர்.

அப்படி ஆரம்பிக்கப்பட்டதுதான் கிருஷ்ணா டைல்ஸ் தொழிற்சாலை.

''பிரிட்டிஷார் காலத்தில் மங்களூர் ஓடுகள் தயாரிப்பில் வெள்ளைக்காரர்கள் அக்கறை காட்டினார்கள். காமன்வெல்த் டிரஸ்ட் என்ற கம்பெனிக்கு நிறையச் சலுகை காண்பித்தார்கள். எங்கள் கம்பெனிக்கு நிறையச் சிரமத்தைக் கொடுத்தார்கள்! அதனால் மிகவும் சிரமப்பட்டோம்!'' என்றார் கிருஷ்ணா டைல்ஸின் நிர்வாக உரிமையாளர் ஏ. ஆர். கிருஷ்ணமூர்த்தி. இவரும் இவரது சகோதரர் ஏ. ஆர். ராஜகோபாலனும்தான் இப்போது இந்த நிறுவனத்தை நடத்தி வருகிறார்கள்.

''ஆனாலும் அந்த சிரமத்தையெல்லாம் பொருட்படுத்தாமல் முன்னேறினோம். இன்றைய ஜனாதிபதி ஆர். வி. 1957—ல் தமிழகத்தில் தொழில் அமைச்சராக இருந்தார். அப்போது வந்து பார்த்துவிட்டு, தொழிற்சாலையை விரிவுபடுத்தச் சொன்னார். அப்போதுதான் கூரை ஓடு, தளவரிசைக் கல், குழாய்க் கல் (Hollow Tiles) எல்லாம் தயாரிக்க ஆரம்பித்தோம்'' என்றார் கிருஷ்ணமூர்த்தி.

''அப்படிப்பட்ட தொழிற்சாலைக்கு மறுபடி ஆபத்து வந்தது!'' என்றார் ராஜகோபா

லன்.

"ஆபத்தா? பிரிட்டிஷார் காலத்தை விடவா பெரிய ஆபத்து?"

"ஆமாம். 63–64ல், அண்ணாநகர் உருவாகும் போது சுமார் இருநூறு ஏக்கருக்கு மேல் எங்கள் நிலத்தை நில ஆர்ஜிதச் சட்டத்தின் கீழ், அரசு எடுத்துக்கொண்டு விட்டது. நிறைய வீடுகள் உருவாகின்றன என்ற சமூக நலன் கருதி மிகக் குறைந்த நஷ்ட ஈட்டைப் பெற்றுக் கொண்டு அந்த நிலங்களைக் கொடுத்து விட்டோம். எங்கள் தொழிற்சாலைக்கு நிறையக் களிமண் தேவை. இருநூறு ஏக்கருக்கு மேல் அரசுக்குக் கொடுத்த பிறகு போதிய அளவு கிடைக்கவில்லை. வெளியேயிருந்து மண் கொண்டு வந்து — செலவு கூட ஆனாலும் — தொடர்ந்து நடத்திக் கொண்டு வந்தோம், மீதியிருந்த சுமார் ஐம்பது ஏக்கர் நிலத்தில்."

"தொழிற்சாலையை மூடி விடுவோம் என்று தோன்றவில்லையோ?"

"சிரமங்களைச் சமாளித்து நடத்திக் கொண்டிருக்கிறோம் என்றால், அதற்குக் காரணம் இது பலருக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கும் தொழில் என்பதுதான். இதையே புதிதாகத் தொடங்குவது என்றால் வருமான வரி, விற்பனை வரி, மின்சாரம் இவற்றில் எல்லாம் சலுகைகள் கொடுக்கும் அரசு... ஆனால் நெடுங்காலமாய் இருந்து வருவதால் எங்களுக்குக் கிடையாது. அது போகட்டும், இருப்பதைப் பிடுங்கிக் கொள்ளாமலாவது இருக்கக் கூடாதா?"

"அதென்ன? மேலும் புதிய ஆபத்தா?"

"ஆமாம் பட்ட காலிலேயே படும் என்பது போல்" என்ற கிருஷ்ணமூர்த்தி விரிவாக விளக்கினார். "சிரமங்களைச் சமாளித்து எப்படியோ தொழில் நடத்திக் கொண்டிருக்கிற போது, வருமான வரி நிறையச் சேர்ந்து போய், கோர்ட்டில் தாவா செய்து போராட வேண்டியதாயிற்று. கிட்டத்தட்ட ஐம்பது லட்ச ரூபாய் வரி பாக்கி கட்ட வேண்டியிருந்தது. அண்ணா நகர் டவருக்குப் பக்கத்தில் எங்களுக்கு ஒன்பதரை ஏக்கர் விவசாய நிலம் இருந்தது. அது நகர்ப்புற உச்ச வரம்பின் கீழ் வராதது. 'அதை ஏலம் விட்டு, பணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். எங்களிடம் வேறு பண வசதி இல்லை' என்றோம். இன்கம்டாக்ஸ் இலாகாவும் அதை 1987 மார்ச் மாதத்தில் ஏலம் போட்டுத் தங்களுக்குச் சேர வேண்டிய வரியை எடுத்துக் கொண்டார்கள். அடங்கல் எனப்படும் ரெவின்யூ ரெக்கார்டுகள் படி இந்த ஒன்பதரை ஏக்கரும் விவசாய நிலம்.


"தமிழ்நாடு அரசு, நாங்கள் ஏதோ வேண்டுமென்றே, நகர்ப்புற நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் வருகிற நிலத்தை வருமான வரி இலாக்காவுக்கு, வரி பாக்கிக்காகக் கொடுத்து விட்டதாக எண்ணிக் கோபம் கொண்டது. நில உச்சவரம்புச் சட்டத்தின் ஆறாவது செக்ஷனின் கீழ், வருமான வரி இலாகா அப்படி ஏலம் போடக் கூடாது என்று, அதுவரை சும்மா இருந்த தமிழ்நாடு நிலச் சீர்திருத்த ஆணையர் ஒரு பொது அறிவிப்புச் செய்தார்."

"உங்களுக்கு அதிர்ச்சியாக இருந்திருக்குமே?"

"ஆமாம்! வருமான வரி இலாகாவோ மத்திய அரசைச் சேர்ந்தது... அட்டர்னி ஜெனரல் கே. பராசரனின் ஆலோசனைப் படி, மத்திய அரசுக்குக் கூடுதலான அதிகாரம் (ஓவர் ரைடிங் பவர்ஸ்) உள்ளது என்றும், அவர்களுக்குச் சேர வேண்டிய வரி பாக்கிக்காகக் குறிப்பிட்ட நிலத்தை ஏலம் விட்டு வசூலித்துக் கொள்ளுவதில் தவறு ஏதும் இல்லை என்றும் அவர் தெரிவித்த அபிப்ராயத்தை அறிந்து கொண்டோம். மத்திய அரசு நிறுவனமான பாரத் பெட்ரோலியம் கம்பெனி மேற்படி நிலத்தை ஏலம் எடுத்துப் பணத்தைக் கொடுத்து விட்டது.

"இதற்குள் தமிழக அரசின் உரிய அதிகாரி, நில உச்ச வரம்புச் சட்டத்தின் 9(1) பிரிவின்படி, தொழிற்சாலை இருக்கிற இடத்தைத் தவிர, மீதி நிலம் எல்லாம் காலி நிலம் என்று ஓர் உத்தரவு பிறப்பித்து, அந்த நிலத்தை எல்லாம் எடுத்துக் கொள்ளப் போவதாக அறிவித்து விட்டார்.

"நாங்கள் அவரிடம் விவரமாக எடுத்துச் சொல்லி, மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் எடுக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டோம். உரிய அதிகாரி எங்கள் நிலத்தையும், தொழிற்சாலையையும் வந்து பார்த்து விட்டுப் போனார். இரண்டரை கிரவுண்டு தவிர மீதி நிலம், தொழிற்சாலை



"உங்க வீட்டுக்கு வந்த திருடன், தொழிலுக்குப் புதுசுன்னு எப்படிச் சொல்றே?"

"கத்தியைக் காட்டி மிரட்டும் போது, 'சத்தம் போடாதே! சத்தம் போட்டால் ஓடிடுவேன்'னு சொன்னானே!"

— இளை. அ. கதிர்வேல்.

அமைந்துள்ள இடம், எல்லாம் நில உச்ச வரம்புச் சட்டத்துக்கு உட்பட்டுத்தான் இருக்கிறது என்றும் சொன்னார்.

நீங்கள் கொஞ்சம் நிம்மதிப் பெருமூச்சு விட்டிருப்பீர்கள்!''

''நிம்மதி சில மணி நேரம் கூட நீடிக்கவில்லை. அவர் சொன்னது ஒன்றாக இருக்க அவர் அலுவலகத்திலிருந்து வந்த கடிதம் வேறாக இருந்ததுதான் ஆச்சர்யம்! இன்கம் டாக்ஸ் இலாகாவுக்கு விற்ற நிலமும் சேர்ந்து, மொத்தம் உள்ள நாற்பத்தி மூன்றரை ஏக்கரில் இருபத்தேழு ஏக்கர் அதிகப்படி நிலம் என்று அதில் தெரிவித்திருந்தார்! இதில் தொழிற்சாலை அமைந்துள்ள நிலம் தவிர, முந்நூறு தொழிலாளர்களில் சுமார் இருநூற்றைம்பது பேருக்கு கிருஷ்ணா டைல்ஸ் நிர்வாகமே கட்டிக் கொடுத்திருக்கிற வீடுகள் உள்ள நிலமும் சேரும்! இவர்கள் காலங்காலமாக, இங்கே வாழ்ந்து வரும், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தொழிலாளர்கள். இவர்களை இங்கேயிருந்து போகச் சொன்னால் எங்கே போவார்கள்? தொழிற்சாலையில் வேலை செய்யும் பரம்பரைத் தொழிலாளரின் வீடுகள் அமைந்துள்ள இடம் எப்படி வெற்று நிலமாகும்? இதில் இன்னொரு வருந்தத்தக்க விஷயம், 'தொழிற்சாலைக்கட்டடம்,தொழிற்சாலைக்குத் தேவையான இயந்திரங்கள் இவற்றை விற்று விட்டு இன்கம் டாக்ஸ் பாக்கியைத் தீர்ப்பதுதானே' என்று கேட்கிறது அரசு உத்தரவு!

''நில உச்ச வரம்புச் சட்டம் வந்ததோ 1978ல். நாங்கள் கொடுக்க வேண்டி வந்த வருமான வரி பாக்கியோ 1971–72ஐச் சேர்ந்தது. அதற்குத்தான் ஒன்பதரை ஏக்கர் விவசாய நிலத்தை அவர்கள் 1976ல் 'அட்டாச்' செய்து விட்டார்கள். இப்படி 1976 — லேயே வசப்படுத்திக் கொண்டு விட்ட வரி பாக்கிக்கான நிலத்தை, மறுபடி அவர்களிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொண்டு, தமிழ்நாடு அரசின் ஆர்ஜித ஆணைக்குக் கட்டுப்பட வேண்டும் என்று தமிழக அரசு அதிகாரி உத்தரவிட்டிருக்கிறார்!''

''நில உச்ச வரம்புச் சட்டம் என்ன சொல்லுகிறது?''

''தமிழ்நாடு நில உச்ச வரம்புச் சட்டம் இருபதாவது பிரிவின்படி சில குறிப்பிட்ட வெற்று நிலங்கள் அதன் கீழ் வரவே வராது. தமிழ்நாட்டில், எங்களுக்குத் தெரிந்தவரை, தொழிற்சாலைக்குத் தேவையான நிலங்களை, நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் இதுவரை ஆர்ஜிதம் செய்யவில்லை, செய்யவும் முடியாது. தொழிற்சாலையை, அழித்து விட்டு, ஹரிஜன தொழிலாளர்களுக்குக் கட்டிக் கொடுத்துள்ள வீடுகளையும் அழித்து விட்டு, அவர்கள் வேலையையும் போக்கி விட்டு, அந்த நிலத்தில் என்ன செய்யப் போகிறார்கள்?''

அரசியல் நிர்ணயச் சட்டம் 19(g) பிரிவின் கீழ், இந்தியக் குடிமகன் எவனும், எவ்விதத் தடங்கலும் இன்றி, தங்கள் தொழிலை மேற்கொள்ளலாம் என்று உறுதியளிக்கிறது. அதற்கு இடையூறாக ஒரு சட்டம் குறுக்கிட



• ஏ. ஆர். கிருஷ்ணமூர்த்தி

முடியுமா? என்ற கேள்வி ஒருபுறமிருக்க தொழிலாளர் சங்கத் தலைவர் கோபால், செயலாளர் கேசவன் இருவருமே, தொழிலாளர்களும் பாதிக்கப்படுவதால் இது சம்பந்தமாகத் தாங்களும் நீண்டதொரு தந்தியை விண்ணப்பமாக ஆளுநருக்கும், ஆலோசகருக்கும் அனுப்பியிருப்பதாகச் சொன்னார்கள்.

தொழிற்சாலையைச் சுற்றிப் பார்த்த போதும் சரி, அதன் ஒர்க்ஸ் மேனேஜர் பாஸ்கரனை விசாரித்த போதும் சரி, ஒரு விஷயம் தெளிவாகப் புரிந்தது. இந்த அளவு கூட நிலம் இல்லை என்றால் இந்தத் தொழிற்சாலையும் இயங்க முடியாது; சுமார் முந்நூறு தொழிலாளர் குடும்பங்களும் இந்த வீடுகளில் வாழ முடியாது. இரண்டு வருட மண் 'ஸ்டாக்'கை வைத்திருந்தது போக, இரண்டு மாதத் தேவையைக் கூட இப்போது வைத்துக் கொள்ள முடிவதில்லை என்பதோடு, எங்கே மண்ணைக் குவித்து வைத்துக் கொள்ளுவது, எங்கே ஓடுகளையும், கற்களையும், செங்கல்லையும் சுடுவது, அடுக்கி வைப்பது, காய வைப்பது என்ற யதார்த்தமான கேள்விகள் எழுகின்றன.

மேலும், குழாய்க் கற்களும், கட்டடம் கட்டுவதற்குத் தேவையான, துளை போடப்பட்ட கட்டடக் கற்களும் (perforated bricks) மற்றும் தளத்திற்குத் தேவையான ஓடுகளும் (pressed tiles) தயாரித்து, தொழிற்சாலையை விரிவுபடுத்தும் திட்டம் என்ன ஆவது என்பது இவர்கள் கவலை. போதிய நிலம் இல்லாமல் என்ன செய்ய முடியும்?

ஒரு தொழிற் சாலையைப் புதிதாக ஆரம்பிப்பது என்றால் எத்தனையோ சிரமங்கள் இருக்கின்றன! இந்தப் பின்னணியில், பார்க்கும் போது, ஏற்கெனவே நடந்து கொண்டிருக்கும் ஒரு தொழிற் சாலையைப் பிடிவாத ஆணையிட்டு நசுக்கி, தொழிலாளர்களையும் நிர்க்கதியாக நட்டாற்றில் விட வேண்டாம் என்று அரசைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

சந்திப்பு: சாருகேசி

புகைப்படங்கள்: யோகா


UIPC:SSV:2:88

அலைகள் ஓய்ந்து...



சூாலையில் வானொலி ஒலித்த விதம் சரியில்லை. ஒரு தந்தி வாத்தியம் பலவந்தப் படுத்தப்பட்டுச் சோகமாக நாதமெழுப் பியது. ஓரிரு நிமிடங்களுக்குள் காரணம் தெரிந்துவிட்டது. தந்திவாத்தியத்தின்சோகத் தைப் பல மடங்கு பிரதிபலித்து ஓர் ஆண் குரல் 'இன்று அதிகாலை தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் காலமா னார் என்பதை வருத்தத்துடனும் வேதனை யுடனும் தெரிவித்துக் கொள்கிறோம்...''

அவனுக்கு நம்ப முடியவில்லை. முதலில் வானொலியை, வானொலிப் பெட்டியை. அது சரியாகத்தான் வேலை செய்கிறதா? உண்மையாக ஒலிபரப்பப்படுவதைத்தான் ஒலிக்கிறதா அல்லது தானாக ஏதாவது தயா ரித்துத் தருகிறதா? அது சரி, எம். ஜி. ஆரா வது காலமாவதாவது.

ஆனால் அச்செய்தி திரும்பத் திரும்ப வந் தது. வெவ்வேறு குரல்களில் வந்தது. பிறகு செய்தி அறிக்கையில் பெரும்பகுதி அச் செய்தி பற்றியே இருந்தது.

அவனுக்கு எம். ஜி. ஆர். முதன் முதலில் தெரிய வந்தது விஜயகுமாரால்தான். அவ னால்தான் அந்த நாளில் மூன்று மாதத் துக்கு ஒரு முறை தென்னிந்தியாவுக்குப் போய்விட்டு வரமுடிந்தது. இவனும் ஆண்டுக்கு ஒரு முறை அவனுடைய அப்பா, அம்மா, அக்கா, தங்கை, தம்பிகளோடு ஒரு தென்னிந்தியச் சுற்றுப்பயணம் போவான். அதில் திருப்பதியும், வைதீசுவரன் கோயி லும் தவறாமல் இருக்கும். அவர்கள் எந்த ஊரிலும் ஓர் இரவுக்கு மேல் தங்க மாட்டார் கள். பகலில் உறவினர் வீடுகளுக்கும் கோயில் களுக்கும். இதனால் ஊருக்கு ஊர் வித்தி யாசப்படுவது போலக் கூடத் தெரியாது. ஆனால் விஜயகுமார் தென்னிந்தியா போய்விட்டு வந்தால் நாள் கணக்கில் விஷ

யங்கள் சொல்வான். பத்து நாட்கள் ஊருக்குப் போய்விட்டு வந்தால் இவ்வளவு இடங்களையும் இவ்வளவு விஷயங்களையும் பார்த்து விட்டு வர முடியுமா? எப்போதும் அப்பாவுடனும் அம்மாவுடனும் இருந்தால் திரும்பத் திரும்ப உறவினர்களைத்தான் பார்க்க முடியும். அதுவும் எப்படி? பெரியவர்கள் பேசிக் கொண்டேயிருக்கத் தான் மட்டும் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு அவர்கள் பேச்சைக் கேட்டு ரசிக்க வேண்டும். அல்லது ரசிப்பது போலப் பாவனை செய்ய வேண்டும். இதற்கு ஊருக்கு எதற்குப் போக வேண்டும்? வீட்டிலேயே இருந்துவிடலாம்.

விஜயகுமார் எவ்வளவோ விஷயங்களோடு இதையும் மிக ஆர்வமாகச் சொன்னான்: கத்திச் சண்டை சினிமாவுக்கு இப்போது ஒரு புதுமுகம் வந்திருக்கிறது. போ, சென்னைக்குப் போய் 'மந்திரி குமாரி' பார்.

சென்னை ஐந்நூறு மைல்களுக்கப்பால் இருந்தது. ஆனால் கத்திச் சண்டை வீரர்களை டஜன் கணக்கில் அங்கேயே நினைவில் வரவழைத்துக் கொள்ளலாம். ஒரு சினிமாவில் எர்ரால் பிளின் பிரமாதமாக வாளை விசினால் இன்னொரு படத்தில் டைரோன் பவர் அதைவிடப் பிரமாதமாக வீசுவான். டைரோன் பவரின் 'மார்க் ஆஃப் ஜோரோ' படத்தைக் காட்டிலும் சிறப்பாக ஒரு கத்திச் சண்டை சினிமா சாத்தியமா?

அவன் அதைத்தான் விஜயகுமாரிடம் உடனே கேட்டான். விஜயகுமார் ஒரு விநாடி தயங்கினான். பிறகு, "இதோ பாரு, டைரோன் பவர், கர்னல் வைல்ட் எல்லாம் எங்கேயோ கண்காணாத இடத்திலே இருப்பவங்க. இந்த எம். ஜி. ஆரும், நம்பியாரும் இங்கே மெட்ராஸிலே இருக்கிறவங்க. இவுங்க தமிழிலே பேசிண்டு தமிழிலே பாட்டுப் பாடிண்டு தமிழ்க் குட்டிகளைக் கட்டிப் பிடிச்சுண்டு வந்தா அந்தக் குஷியே வேறேதான். நீ எப்படியும் 'மந்திரிகுமாரி' போய்ப் பார்த்துடு.''

"கத்திச் சண்டையிலே ரஞ்சன்தானே முதல்?''

"ரஞ்சன் மாதிரியேன்னு வைச்சுக்கோயேன். இந்தப்புது ஆளும் இன்னொரு ஆளும் சண்டை போடறப்போ அப்படியே 'காலண்ட் பிளேட்' சண்டை மாதிரியே இருக்கு. உனக்குத் தெரியுமா? 'காலண்ட் பிளேடை'யும் அப்படியே தமிழிலே எடுக்கறாங்களாம்.''

"அப்படியா?''

"ஆமாம். பேர் கூட வைச்சுட்டாங்க.''

"என்ன பேரு? வீரவாளா?''

"இல்லை, 'சர்வாதிகாரி!''

"அதென்ன பேரு?''

"இதிலேயும் எம். ஜி. ராமச்சந்திரன்தான் ஹீரோ. 'மந்திரிகுமாரி'யிலே 'காலண்ட் பிளேட்' சண்டையை வைச்சுட்டாங்க. இப்ப அதையே தமிழிலே எடுக்கிறப்போ என்ன சண்டை வைப்பாங்களோ?''

"ஏன், வேறே சினிமாலேருந்து வைச்சுடுவாங்க. உனக்குத்தான் தமிழ் பேசிண்டு யார் எப்படிக் கத்தி விசினாலும் பிடிக்குமே.''

"நீ எம். ஜி. ராமச்சந்தரைப் போய்ப் பார்த்துட்டு வா. அப்புறம் சொல்லு.''

விஜயகுமார் வெகு நாட்களுக்கு 'மந்திரிகுமாரி' பற்றிப் பேசிக் கொண்டிருந்தான். அவர்கள் இருந்த ஊரில் தமிழ் பேசுகிறவர்கள் அதிகம் கிடையாது. யாரும் இரண்டு தமிழ் வாக்கியங்கள் பேசினால் அதில் மூன்று தெலுங்குச் சொற்கள் இருக்கும். அல்லது உருதுச் சொற்கள் இருக்கும். விஜயகுமாருக்கே தமிழைத் தட்டுத் தடுமாறித்தான் படிக்க முடியும். இதனாலெல்லாம் கூட அவனுக்குத் தமிழ்ப் படம் என்றால் ஒரு பரவச நிலை ஏற்படுவதற்குக் காரணமாயிருக்கலாம்.

அந்த ஆண்டு பள்ளிக்கூட லீவில் அவன் வீட்டில் யாரும் தமிழ்நாட்டுக்குப் போகவில்லை. மாறாக ஒரு வாரம் நூறு மைல் தள்ளி ஒரு சிறு கிராமத்தில் இருந்த குஷ்டரோகிகள் விடுதியில் பணிபுரிந்து வந்த உறவினர் வீட்டிற்குப் போய்த் தங்கிவிட்டு வந்தார்கள். அந்த விடுதி ஏதோ அயல் நாட்டினர் ஏற்படுத்தியது. எல்லா வைத்திய விடுதிகளையும் போலத்தான் அது இருந்தது. ஆனால் சுற்றி மைல் கணக்கில் மனித வாசனை கிடையாது. புலி வரும் என்பார்கள். உறவினர் வீடும் ஏகப்பட்ட மரங்கள் நடுவேதான் இருந்தது. அவன் அங்கிருந்த நாட்களில் புலி ஏதும் வரவில்லை. பாம்புதான் நான்கைந்து முறை கண்ணில் தென்பட்டது. அங்கிருந்தவர்கள் பாம்புகளைச் சட்டையே செய்யாமல் அவரவர்கள் வேலையைப் பார்ப்பார்கள். பாம்புகளுக்கு ரோஷம் இருந்தால் ஒன்று அங்கிருந்து எல்லாம் ஓடிப் போய்விட வேண்டும், அல்லது எல்லாரையும் தம்மைக் கவனிக்கும்படி ஏதாவது செய்ய வேண்டும்.

லீவு முடிந்து பள்ளிக்குப் போன முதல் நாளே விஜயகுமார் கேட்டான், "மந்திரிகுமாரி' பார்த்தியா?''

"நாங்க மெட்ராஸுக்கே போகலியே?''

"போயிடும். நீ அங்கே போறதுக்குள்ளே படம் போயிடும்.''

விஜயகுமார் அவ்வளவு வருத்தப்பட்டிருக்க வேண்டியதில்லை. யாருக்கோ கல்யாணம் என்று வீடு கலகலத்தது. பள்ளிக்கூடம் திறந்து ஒரு வாரத்துக்குள். அவனுடைய வீட்டில் அவனும் அவனுடைய அப்பாவுமாக அந்தக் கல்யாணத்துக்குப்

அசோகமித்திரன்

அடுத்த இதழில்...

• பரவசமான பழனி குடமுழுக்கு

— அட்டைப்படச் சிறப்புக் கட்டுரை



• "குற்றவாளிக்கு எப்போது கைவிலங்கு மாட்டலாம்...?"

— கிரன் பேடியுடன் ஒரு பேட்டி!



போவதற்காகக் கிளம்பினார்கள்.

அப்பாவுடன் மட்டும் ஊருக்குப் போவது ஒரு புது அனுபவமாக இருந்தது. முதலில் ஏகப்பட்ட சாமான்கள் இல்லை. நாளெல்லாம் புளித்திருக்கும் தயிர் சாதத்தை வேண்டா விருப்பாக ரயிலில் விழுங்கித் தவிக்க வேண்டியதில்லை. அப்பா அவ்வப்போது ரயில் நிலையங்களிலிருந்து சூடாக ஏதாவது வாங்கிக் கொடுத்து விடுவார். மெட்ராஸ் போனதும் முதல் காரியமாக அப்பாவே 'வா, சினிமாவுக்குப் போகலாம்,' என்று கூப்பிட்டார்.

"அப்பா, 'மந்திரிகுமாரி' பார்க்கலாம்பா."

"அது என்னது? புது சினிமாவா?"

"ஆமாம்பா. அதிலே நிறையக் கத்திச் சண்டையெல்லாம் இருக்காம்."

"சினிமாவிலே என்ன சண்டை — எல்லாம் அட்டைக் கத்திச் சண்டை."

"இல்லேப்பா.எம்.ஜி.இராமச்சந்திரன்னு ஒரு புது ஆக்டர் சண்டை போடறது ரொம்ப நல்லாயிருக்காம். விஜயகுமார், ராஜ்குமார் இரண்டு பேரும் சொன்னாங்க."

"அதெல்லாம் வேண்டாம். 'ஆர்யமாலா' மறுபடியும் வந்திருக்கு. நீயே பாரு. உனக்கு ரொம்பப் பிடிச்சதுன்னு நீயே சொல்லுவே."

ஆனால் அப்பா அழைத்துப் போன சினிமாவில் 'ஆர்யமாலா' ஓடவில்லை. உண்மையில் அந்த நேரத்தில் சென்னையில் ஓரிடத்திலும் அந்தப் படம் ஓடவில்லை. அப்பா எதைப் பார்த்து ஏமாந்தோம் என்று புரியாதபடி மிகுந்த வருத்தத்தில்தான் இருந்தார். பக்கத்துக் கொட்டகையில் 'மந்திரிகுமாரி.'

அப்படித்தான் அவன் 'மந்திரிகுமாரி' பார்த்தான். அவனுடைய அப்பா படம் ஆரம்பித்த ஐந்து நிமிடங்களுக்கெல்லாம் தூங்க ஆரம்பித்து விட்டார். அவன்தான் படத்தை முழுக்கப் பார்த்தான்.

இரவு பத்து மணிக்கு மேல் ஜட்கா பிடித்து அவர்கள் தங்கியிருந்த உறவினர் வீடு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் உறவினர் அந்த நேரத்தில் விளக்கைப் போட்டுக் கொண்டு காத்துக் கொண்டிருந்தார்கள். "ஏன் இவ்வளவு லேட்?" என்று மூன்று பேர் கேட்டு விட்டார்கள்.

நல்லவேளையாக அப்பா ஏதோ சொல்லி மழுப்பி விட்டார். 'மந்திரிகுமாரி' சினிமாவுக்குப் போயிருந்தோம் என்று சொல்லியிருந்தால் அந்த உறவினர்களுக்கு மிகுந்த ஏமாற்றமாயிருந்திருக்கும்.

அவனுக்கும் ஏமாற்றமாகத்தான் இருந்தது. இந்தச் சினிமாவைப் பார்த்தா விஜயகுமாரும் ராஜகுமாரும் அவ்வளவு புளகாங்கிதம் அடைந்தார்கள்? அவனுக்கு அப்படத்தின் கதையைப் பற்றி நினைக்க நினைக்க ஆச்சரியமாக இருந்தது. நிமிஷத்துக்கு நிமிஷம் அது பைத்தியக்காரத்தனமாக அவனுக்குத் தோன்றியது. இரண்டு பேர் எதிரும் புதிருமாக இருந்தால் உடனே நீண்ட



தென்னக ரயில்வே சீப் ஆபரேடிங் சூப்பரின்டென்டன்ட் ஸ்ரீ N. V. சுப்ரமணியன் அவர்களின் குமாரத்தி சௌபாக்யவதி அபர்ணா (உஷா)வுக்கும் மம்மிடிபுடி ஸ்ரீ வெங்கடேஸ்வருலு அவர்களின் குமாரன் சிரஞ்சீவி வித்யாநாத்துக்கும் விவாஹம் சென்னை தேனாம்பேட்டை மவுண்ட்ரோடு, நெ. 57, ரோஸ்ட்ரவாரில் 5.6.88 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது. விவாஹத்திற்கு தென்னக ரயில்வே பொது மேலாளர் ஸ்ரீ K. V. பாலகிருஷ்ணன், ரயில்வே அதிகாரிகள், முக்கிய பிரமுகர்கள், மற்றும் சங்கீத கலாநிதி செம்மங்குடி ஸ்ரீநிவாச ஐயர், ஸ்ரீமதி D. K. பட்டம்மாள், ஸ்ரீமதி M. S. சுப்புலக்ஷ்மி ஸ்ரீசதாசிவம் ஆகியோர் வந்திருந்து தம்பதியரை ஆசீர்வதித்தனர். வாழ்க மணமக்கள்.



"ரிட்டயர் ஆனப்புறம் என்ன பண்ணிக்கிட்டிருக்கீங்க?"

"ஆபீஸ் கனவுகளுக்குப் பலன்'னு ஒரு புஸ்தகம் எழுதிக்கிட்டிருக்கேன்!"

— ஈழை. அ. கதிர்வேல்.

நீண்ட பிரசங்கங்கள். அதிலும் அப்பாவும் பிள்ளையும் பேசிக் கொள்வது உச்சகட்டப் பைத்தியக்காரத்தனமாக இருந்தது. அவனும் அவனுடைய அப்பாவும் ஒரு நிமிடம் அந்த மாதிரிப் பேசிக் கொள்ள முடியுமா? எந்த அப்பாவும் பிள்ளையும்தான் அம்மாதிரி பேசிக் கொள்ள முடியும்? ஆனால் கத்திச் சண்டை இருந்தது. எம். ஜி. ராமச்சந்திரன் போடும் கத்திச் சண்டை இருந்தது. அன்று ஏனோ அந்தக் கத்திச் சண்டை கூட அவனுக்குப் பிடிக்கவில்லை.

இந்த விதத்தில் நாற்பது ஆண்டுகள் முன்பு தெரிய வந்த எம். ஜி. ஆர்தான் இப்போது எவ்வளவு வித்தியாசமான தோற்றம் பெற்றாகி விட்டது?

அவனுக்கு விஜயகுமாரைப் போய்ப் பார்க்க வேண்டும் என்றிருந்தது. இந்நேரத்தில் விஜயகுமாரும் வானொலிப் பெட்டி அருகிலேயே உட்கார்ந்து கொண்டு எம். ஜி. ஆர் மறைந்தது பற்றிச் செய்திகள் கேட்டுக் கொண்டிருப்பான். அழுது கொண்டு இருக்கவும் கூடும். ஆனால் விஜயகுமாரை எப்படிக் கண்டுபிடிப்பது?

எம். ஜி. ஆர். மறைவு பற்றியும் அவர் மறைவுக்குப் பல பிரமுகர்கள் கூறிய இரங்கல் செய்திகளும் வானொலியிலும் தொலைக்காட்சிப் பெட்டியிலும் தொடர்ந்து வந்து கொண்டேயிருந்தது. அவனுக்குத் திரும்பத் திரும்ப விஜயகுமாரும் 'மந்திரிகுமாரி' படமும்தான் கண்முன் வந்து நின்றன. விஜயகுமாரைப் பள்ளி நாட்களுக்குப் பிறகு ஒரே ஒரு முறை சந்திக்க முடிந்தது. விஜயகுமார் தமிழ்நாட்டிலேயே கல்யாணம் செய்து கொண்டு சேலத்திலோ ஈரோடிலோ வசித்து வந்தான். அந்த ஒரே ஒரு சந்திப்பின் போது ஒழுங்காக முகவரிகளைக் கூடப் பரிமாறிக் கொள்ள முடியவில்லை. ஆனால்விஜயகுமாரை அங்குபார்த்தோம், இங்கு பார்த்தோம் என்று யாராவது ஆறு மாதம் ஒரு வருடத்துக்கு ஒரு முறை சொல்வார்கள். ஆனால் அவன் கண்களுக்கு விஜயகுமார் கிடைக்கவில்லை. அவனுக்கு அப்போதிருந்த வேகத்தில் சேலத்துக்கும் ஈரோடுக்கும் சென்று விஜயகுமாரைத் தேடிப் பார்த்தால் என்ன என்று கூடத் தோன்றியது.

எம். ஜி. ஆர். இறுதி ஊர்வலத்துக்கும் அடக்கத்துக்கும் நாலா பக்கங்களிலிருந்தும் மக்கள் சென்னையில் வந்து குழுமிக் கொண்டிருந்தார்கள். இதற்கு முன்னர் இந்த மாதிரித் தலைவர்கள் மறைவின் போது விபத்துக்களும் டஜன் கணக்கில் சாவும் நடந்திருக்கின்றன. இம்முறையாவது லாரிகளிலும் ரயில் கூரைகளிலும் பயணம் செய்து சென்னை வருபவர்கள் கவனமாக வர வேண்டும்.

விஜயகுமார் 'மந்திரிகுமாரி' பற்றி மது உண்டவன் போல இருந்தான். அது அந்தத் திரைப்படத்தினாலா அதில் கத்திச் சண்டை போட்ட எம். ஜி. ஆராலா? அவனுக்கு இப்போது ஒரு சந்தேகம் எழுந்தது. 'மந்திரிகுமாரி' படத்தில் கத்திச் சண்டையே இருந்ததோ இல்லையோ. அப்படியானால் விஜயகுமாருக்கு மிகப் பிடித்த படம் 'சர்வாதிகாரி'யாக இருக்க வேண்டும். அந்தப் படத்தில் போதும் போதும் என்று கூக்குரலிடும் அளவுக்குக் கத்திச் சண்டை இருந்தது. அந்த நாளில் விஜயகுமார் மட்டும் தமிழ்நாட்டிலேயே வசித்து வந்தானானால் அப்படத்தைத் தினமும் போய்ப் பார்த்த வண்ணம் இருப்பான். ஏன் லேட் என்று வீட்டில் கேட்டால் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காரணம் சொல்லிக் கொண்டிருப்பான்.

நாடெல்லாம் ஊரெல்லாம் எம். ஜி. ஆர்., எம். ஜி. ஆர். என்று கதறிக் கொண்டிருந்தபோது அவன் மட்டும் என்றோ அவனோடு சேர்ந்து படித்த நண்பனுக்காக ஏங்குவது விசித்திரமாகப்பட்டது. துக்கம், நினைவு, நட்பு, மகிழ்ச்சி எல்லாமே ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து தோன்றுவதாகத்தான் அப்போது எண்ண முடிந்தது. எந்தச் சாவும் தனித்த நிகழ்ச்சியாக இருப்பதில்லை.

விஜயகுமாருக்கு இப்போதெல்லாம் திரைப்படங்களில் ஆர்வம் குறைந்து போயிருக்கலாம். திரைப்படங்களைக் கண்டாலே எரிச்சலாகக் கூட இருக்கலாம். ஆனால் அடுத்த முறை எப்படியாவது எங்கேயாவது என்றாவது பார்க்க நேர்ந்தால், 'என்னப்பா, எம். ஜி. ஆர். கூடப் போயிட்டாரே?' என்றுதான் பேச்சைத் துவக்க முடியும். அவனைப் போலவே விஜயகுமாருக்கும் எம். ஜி. ஆர். கூட மரணமடையக்கூடும் என்பது நம்ப முடியாததாகத்தான் இருக்கும்.

சுஜாதா

சோமசேகர் தர்மராஜனைப் பார்த்து, "மொத்தம் எத்தனை ஏஸிடி?" என்றார்.

"இதுவரைக்கும் எட்டு.

"இதுவரைக்கும் எட்டு ஆட்டோ அகப்பட்டிருக்கு!"

"ஏஸிடி'ன்னா என்னன்னு தெரிஞ்சுதா?"

"இது கம்பெனி பேரு. ஏ. சந்திரசேகர்னு ஒருத்தர் பெட்ரோல் பங்க், டெம்போ சர்வீஸ், ஆட்டோ வாடகைக்கு விடறது, இப்படி பலதரப்பட்ட பிஸினஸ் வெச்சிருக்காரு. "ஏஸி ட்ரான்ஸ்போர்ட்"டுன்னு பேரு..."

"எத்தனை ஆட்டோ இருக்காம் அவர்கிட்ட?"

தர்மராஜன் புன்னகையுடன் "நூற்றம்பது" என்றார்.

சோமசேகர் அலுப்புடன் "சரிதான், அத்தனையையும் இப்ப விசாரிக்கணுமா?"

"விசாரிச்சுத்தான் ஆகணும்னா நீ சொன்னாச் செய்யறோம், ஆனா கொஞ்சம் நாளாகும்."

"எத்தனை நாளானாலும் பரவால்லை, செய்துருங்க. என் டாட்டர்கிட்ட நான் சவால் விட்டிருக்கேன். எப்படியாவது குற்றவாளிங்களைக் கண்டு பிடிக்கிறதா. இல்லைன்னா வீட்டில என் பேர் கெட்டுப் போயிரும்" என்றார்.

தர்மராஜன் பெருமூச்சுடன் சல்யூட் அடித்து விட்டுக் கிளம்பினார். "ஒரு நிமிஷம் தர்மு" என்று அவரை மறுபடி அழைத்தார். "அந்தம்மாகிட்டேயிருந்து வேற ஏதாவது விஷயம் தெரிஞ்சுக்க முடிஞ்சுதா?"

"இல்லை ஸார். ப்ரொபஸர் இன்னமும் கோபத்தில்தான் இருக்காரு. அவங்ககிட்டருந்து எந்தவித ஒத்துழைப்பும் எதிர்பார்க்க முடியாது. இந்தக் கேஸை, குற்றவாளியை நாம கண்டுபிடிச்சாலும் எப்படி நிரூபிக்கப் போறோம்னு மலைப்பா இருக்குது. அந்தம்மா நிச்சயம் சாட்சி சொல்ல மாட்டாங்க. அத்தனை வெறுப்பு அவங்க புருஷனுக்கு."

"ஒரு வாரம் பொறுத்து, நான் போய்ப் பார்க்கறேன். கொஞ்சமாவது சமாதானமாயிருப்பாரு. இல்லைன்னா கமிஷனரைச் சந்திக்கச் சொல்றேன்."

"எனக்கு நம்பிக்கை இல்லை."

தர்மராஜன் அங்கிருந்து புறப்பட்டு, ஜீப்பில் ஏறிச் சந்திரசேகரைச் சந்திக்கச் சென்றார். கண்டோன்மெண்ட் பகுதியில் சிவாஜி நகர் பஸ் நிலையத்தை அடுத்து அமைதியாக இருந்த சந்தில், வரிசையாக மஞ்சள் நிற டெம்போக்கள் நின்று கொண்டிருந்தன. எல்லாவற்றிலும் 'ஏஸிடி'. எதிர் வரிசையில் ஆறு ஏழு ஆட்டோக்கள் நின்று கொண்டிருக்கக் கண்டஸ்ஸா கார், மாருதி, ப்ரீமியர் என்று வகைக்கு ஒரு கார் வைத்திருந்தார். மாடியும் கீழுமாகப் பெரிய வீடு.



பெரிய நாய், அங்கங்கே வேலைக்காரர்கள், காவல்காரன். ஜீப்பை நிறுத்தி விட்டுச் சுற்று முற்றும் பார்த்து உள்ளே வந்தார். நாய் குரைத்தது.

"நாயைக் கட்டிப் போடுய்யா" என்று அதட்டினார். உள்ளே வராந்தாவில் போட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்து, "உங்க எஜமானரை வரச் சொல்லு" என்றார்.

சந்திரசேகருக்கு வயது நாற்பத்தெட்டு இருந்தாலும் தலைச்சாயம், மேனாட்டுக் கறுப்புக் கண்ணாடி உதவியுடன் அதை நாற்பதுக்குக் குறைத்திருந்தார். கையில் தங்கச் சங்கிலி, கடிகாரத்தைத் தவிர, மற்ற உடைகள் யாவும் எளிதாகத்தான் இருந்தன. பணக்கார எளிமை!

இருள் வரும் நேரம்

10

"வாங்க இன்ஸ்பெக்டர். என்ன விசயம்?"

"தெரு பூரா அடைச்சுக்கிட்டு வாகனங்களை நிறுத்தியிருக்கீங்களே, உங்களுக்கு யாரு பர்மிஷன் கொடுத்தாங்க?"

"டேய், நிஸ்ஸார்! தெருவிலயா டெம்போக்களை நிறுத்தியிருக்கீங்க? முட்டாளுங்களா! இதோ இப்ப நீக்கிடச் சொல்றேன் பாருங்க. கராஷ் ஏகத்துக்கு இடம் பின்பக்கத்திலயே இருக்குது. இங்கிருந்து போரிங் ஆஸ்பிட்டல் வரைக்கும் நம்முளுதாங்க... நிஸ்ஸார் ஓ, காடி ஸப்கோ அட்டாவோ பாய்" என்றார்.

யாரும் கேட்காமல் கூல் டிரிங் வந்தது.

"இதைக் கேக்கவா வந்தீங்க? ஒரு ட்ராபிக் கான்ஸ்டபிளை அனுப்பிச்சிருக்கலாமே?"

"இல்லை. நான் வந்தது வேறு விஷயத்துக்காக. போன வாரம் கபன் பார்க்கில ஒரு ரேப் கேஸாயிருச்சு, பேப்பர்ல பாத்திருப்பீங்க."

"இல்லைங்க எனக்கு நேரமில்லை. சொல்லுங்க, என்ன ஆச்சு?"

"யூனிவர்ஸிட்டி ப்ரொபஸர் ராம் பிரகாஷின் மனைவியை ரெண்டு பேர் ஆட்டோ ரிக்ஷாவில் கபன் பார்க்குக்குள்ள கூட்டிக்கிட்டுப் போயி பலாத்காரம் பண்ணிருக்காங்க."

"அப்படியா! வெரி பாட்! ரொம்ப மோசம்!"

"அந்த ஆட்டோவில பின்னால 'ஏஸிடி'ன்னு எழுதியிருந்ததாச் சாட்சி சொல்லியிருக்காரு, பாத்திருக்காரு ஒருத்தர்."

"அப்படியா திஸ் இஸ் சீரியஸ்!"

"எல்லா 'ஏஸிடி' ஆட்டோக்களும் உங்களுது தானே?"

"ஆமாங்க! நிஸ்ஸார் அந்த ரிஜிஸ்தரைக் கொண்டு வா."

"நீங்க எப்படி ஆட்டோங்களை வாடகைக்குக் கொடுப்பீங்க?"

"டேஷிப்ட்டு நைட்ஷிப்ட்டுன்னு இருக்கு. அவங்கவங்க டிரைவர்ங்க வந்து வண்டி எடுத்துக்கிட்டுப் போவாங்க. அவங்களே பெட்ரோல் போட்டுக்கிட்டு மினிமம் ஒரு நாளைக்கு எங்களுக்குக் கொடுத்துரணும். ராத்திரி என்ன நேரமானாலும் சரி, கொண்டு பங்கில விட்டுரணும்." நிஸ்ஸார் அந்த ரிஜிஸ்தரை எடுத்து வர, "இத பாருங்க, தினப்படி யார் யாருக்கு எந்த எந்த நம்பர் போயிருக்குன்னு விவரம் இருக்குது. தேதி என்ன சொன்னீங்க?"

தர்மராஜன் அந்தப் புத்தகத்தை வாங்கிப் பார்த்தார்.

"ஒரு நாளைக்கு எழுபது ஆட்டோ வெளிய போகுது. இதில எதுன்னு கண்டு பிடிப்பீங்க? நம்பர் தெரிஞ்சிருந்தாலும் பரவால்லை."

"நம்பர் தெரியாது. இந்தப் புஸ்தகத்தை நாளைக்குத் திருப்பிக் கொடுக்கலாமா?"

"தாராளமா."

"உங்க கிட்ட ஆட்டோ வாடகைக்குத் தினப்படி எடுத்துப் போறவங்க பட்டியல் இருக்குமா?"

"இருக்குதே, நிஸ்ஸார்!"

"அதில யார் யார் வயசானவங்க யாரு இளைஞர்கள்னு சொல்ல முடியுமா நிஸ்ஸார்?"

"எல்லாருமே பெரும்பாலும் சின்னப் பசங்கதான் ஸார்."

"அப்படியா?" என்று சற்று ஏமாற்றத்துடன் புறப்பட்டார்.

"**வா** வர்ஷா" என்று ப்ரொபஸர் ராம் பிரகாஷ் அவளைச் சற்று தயக்கத்துடன் வரவேற்றார்.

"இதான் வர்ஷாவா?" என்றாள் அம்ருதா.

"ஆமாம். எப்படி இருக்கீங்க ஆண்ட்டி?"

"நான் ஒண்ணும் உனக்கு ஆண்ட்டி இல்லை. என்னைப் பேர் சொல்லியே கூப்பிடலாம். இல்லை மிஸஸ் ராம் பிரகாஷ்னு..."

"வர்ஷா என்ன விஷயம்?"

"எச்.ஓ.டி. இதை உங்ககிட்ட கொடுக்கச் சொன்னார்."

ராம்பிரகாஷ் அந்தக் காகிதத்தை வாங்கிப் பார்த்தார். "அன்புள்ள ராம், நடந்ததெல்லாம் கேள்விப்பட்டு மனம் வருத்தப்பட்டேன். ஏதும் அவசரமில்லை. நிதானமாகவே ட்யூட்டிக்கு வரலாம். அடுத்த வாரம் போன் பண்ணி விட்டு வந்து பார்க்கிறேன். பார்ப்பதால் உனக்கு ஏதும் லாபமிருக்குமா என்று நிச்சயித்துக் கொண்டு. நாங்கள் யாவரும் உங்களுக்காகப் பிரார்த்திக்கிறோம். உடன் லீவு மனு..."

"இதைக் கொடுக்க வந்தியா? போஸ்ட்ல அனுப்பிச்சிருக்கலாமே!"

"வர்ஷா நீ எதுக்கு வந்தே?" என்றாள் அம்ரு.

"அம்ரு உள்ள போய் ரெஸ்ட் எடுத்துக்கம்மா. அவ ஆபீஸ் விஷயமா வந்திருக்கா."

"ஆபீஸ் விஷயமாவா, இல்லை...."

வேதாசலம் "அம்ரு கம் வித் மி!" என்றார்.

"இந்தப் பொண்ணு கூடத்தான்பா இவருக்கு ரொம்ப அன்னியோன்னியம்."

"அம்ரு ஷட் அப்!"

வர்ஷா இதையெல்லாம் மவுனமாகக் கவனித்துக் கொண்டிருந்தாள். அம்ருவை வேதாசலம் அடுத்த அறைக்கு அழைத்துச் செல்ல, "ஸாரி! ப்ரொபஸர், தப்பான சந்தர்ப்பத்தில் வந்துட்டேன்."

"ஆமா வர்ஷா நான் நிலைமையைச் சமாளிக்க முடியாம திணறிக்கிட்டு இருக்கேன். நான் பண்ற எல்லாமே நான் இந்தப் பிரச்னையை அணுகற விதமே, தப்புன்னு நல்லாத் தெரியுது. இருந்தும் அற்பத்தனமா அவகிட்ட நடந்துக்கிட்டு இருக்கேன். கோபத்தை அடக்க முடியலை. இது ஏன் வர்ஷா?"

"உங்களாலயே பதில் சொல்ல முடியலைன்னா நான் என்ன சொல்ல முடியும் ப்ரொபஸர்! உங்களை எப்படியும் பார்த்து ஆறுதலா ஏதாவது சொல்லணும்னு தோணிச்சு. வாங்க வெளியே போகலாம்!"

"வேறே வினையே வேண்டாம்."

"ஏன்?"

"அம்ரு தப்பா நெனச்சுப்பா."

"அதுக்காகப் பார்த்தா முடியுமா?"

"வர்ஷா நீ அனுதாபத்துக்கா வந்தே?"

"இல்லை உங்களைப் பார்க்கறதுக்கு."


"எதுக்கு?"

"எனக்கு உங்க மேலதான் அனுதாபம்!"

"அம்ருதா?"

"அவங்களை எனக்குத் தெரியாது. உங்களைத் தெரியும். உங்க மாணவி. உங்க அறிவு பூர்வமான லெக்சர்ங்களையெல்லாம்





"நீங்க பேசின கூட்டத்தில் கல்வீச்சாமே! அப்படி என்ன பேசினீங்க?"

"பொறுத்தது போதும். பொங்கி எழுங்கன்னேன்! அவ்வளவுதான்!"

— தேவநாதன்.

கேட்டுக் கேட்டு உங்ககிட்ட இருக்கிறதைக் கொஞ்சமாவது எனக்கு உள்ள வாங்கிக்கணும்ங்கற தாகத்தோட இருக்கிறவ..."

"வர்ஷா நான் இப்ப இருக்கிற குழப்பத்தில புதுசா நீயும் ஏதாவது சேர்க்காதே."

"இது ரொம்பப் பழைய குழப்பம் டாக்டர்!"

வர்ஷாவை நிமிர்ந்து பார்த்த போது, அவள் மஸ்டர்ட் நிறத்தில் அணிந்திருந்த சட்டையின் மையத்தில் 'ஆர்பி' என்று எழுதியிருந்தது. அவள் உதடுகள் ஈரமாக மெலிதாக இருந்தன. கண்களைச் சந்திப்பது கஷ்டமாக இருந்தது. "வர்ஷா உன்னை எனக்குப் புரியவே இல்லை."

"புரிந்து கொள்ள மறுக்கிறீர்கள்."

"இந்த வேளையில உன்னால் எப்படி இப்படி...."

"எந்த வேளையிலும் ப்ரொபஸர் நீங்கள் ஒருவர்தான் எனக்கு முக்கியம்."

"உன்னை முதுகில் நாலு அறை அறையலாம் போல வருகிறது."

"அறையுங்கள்!"

"க்ரேஸி கர்ள்" என்று சிரித்தார். அதே சமயம் குற்ற உணர்வு உறுத்தியது. அம்ரு அவர்கள் இருவருக்கும் தேநீர் கொண்டு வைத்தாள். "என்ன, எல்லாம் பேசியாச்சு?"

"ஆண்ட்டி நான் அப்புறம், எல்லாம் சரியானப்புறம் வர்றேன்" என்றாள்.

"ம்?"

"அதும் அப்புறம்" என்று புறப்பட்டாள்.

அம்ரு அவரருகில் உட்கார்ந்து கொண்டு, "ஏன் இப்படி என்னைச் சித்திரவதை பண்றீங்க?" என்றாள்.

"என்ன செய்தேன்?"

"என் கண் முன்னாலயே அந்தப் பொண்ணைக் கூட்டி வெச்சுக்கிட்டு மணிக்கணக்காப் பேசறிங்களே, எங்கூட பேசுங்களேன். நான் நொந்து போய் உக்காந்திருக்கேனே?"

"உங் கூடப் பேசினா சண்டை வர்றது. மேலும் அவகிட்ட யூனிவர்ஸிட்டி விசயமாகத்தான் பேசினேன்."

வேதாசலம் உள்ளே நுழைந்து, "ராம் எனக்கு ஒரு யோசனை தோணுது. நீங்க பெங்களூர்ல இருந்தாகணும்னு கட்டாயமா?"

"இல்லை?"

"உங்களுக்கு அம்ருவை என் கூட தனியா அனுப்பறதில விருப்பமில்லைதானே?"

"இல்லை."

"நீங்களும் என் கூட வந்துருங்க. இந்த ஊரை விட்டு முதல்ல விலகலாம். சமீபகால நிகழ்ச்சிகளுடைய ஞாபகத்தை மறக்கணும்னா ஊரை விட்டுப் போறதுதான் நல்லது."

"எனக்கு வேலை இருக்குது."

"அவர் வர்ஷாவை விட்டு வரமாட்டாரப்பா."

"ஷட் அப் அம்ரு! மாப்பிளை, இவ இமோஷனலா இருக்கிற நிலையில சொல்றதையெல்லாம் பெரிசா எடுத்துக்காதீங்க. அம்ரு, ராம் லவ்ஸ் யூ, லவ்ஸ் யூ வெரி மச். தெரியுமில்லை?"

அப்போது வாசலில் ஜீப் சப்தம் கேட்டது. சோமசேகர், "மே ஐ கமின்" என்றார்.

"ஓஹ தி போலிஸ்!"

அம்ருதா அவசரமா "நான் உள்ளே போறேன்" என்று மறைந்தாள்.

"வாங்க சோமசேகர்! இவர் என் மாமனார் வேதாசலம்...."

"உங்களை ஏதும் தொந்தரவு செய்ய வரலை நாங்க."

"பேப்பர்ல செய்தி போட்டதுக்காக ரொம்ப வருத்தம் ரெண்டு பேருக்கும்" என்றார் வேதாசலம்.

"இருக்கலாம். பேப்பர்ல போட்டதைப் பாத்துட்டு ஒருத்தர் அடையாளம் சொல்ல வந்து குற்றவாளியைக் கண்டுபிடிக்கிறதுக்கு உதவியாத் தகவல்கள் தெரிஞ்சிருக்கு. பேப்பர்ல போடறது அதுக்காகத்தான் ஸார்!"

"என்ன தகவல்?" என்றார் ராம்.

"ஆட்டோவுக்குப்பின்னால் 'ஏஸிடி' ன்னு எழுதியிருந்ததாம்."

ராம்பிரகாஷ், "ஆ! எனக்குக்கூட நினைவு வர்றது. அன்னைக்கு ராத்திரி இவ தூக்கத்தில ஏஸிடின்னு முணு முணுத்துக்கிட்டு இருந்தா!"

"அப்படியா நீங்க ஏன் சொல்லவே இல்லை?"

"உங்களுக்கு ஏதும் சொல்றதா இல்லை நாங்க."

"அத்தனை வெறுப்பா?"

"ஆமா. ஏஸிடி! அப்புறம் என்ன?"

அதிலிருந்து ஆட்டோ ஓனருக்குப் போய் டிரைவர்ங்க பட்டியல் கிடைச்சது. அதில இருந்து பத்துப் பேருக்கு லிஸ்ட்டு குறுகி இப்பச் சந்தேகம் ஓர் அஞ்சு பேர் மேல இருக்குது!"

"அதனால?"

"மேல 'ப்ரொஸீட்' பண்ணறதுக்கு முன்னால உங்க மனைவிக்கு அவங்களை அடையாளம் காட்ட விருப்பமான்னு தெரியணும்!"

(தொடரும்)



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ. கோவிந்த தீக்ஷிதரவர்களால் 1542ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் **85** மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரு நாள் உணவளிக்க சுமார் ரூ 250/— ஆகிறது. இந்த தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ 2500/— மூலதனம் ஏற்படுத்தியோ அல்லது அவ்வப்போது ரூ 250/— அனுப்பியோ ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹா ராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி
D—76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம்—612 001.

இந்த நன்கொடைக்கு 80 G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு.



மனம் கவரும் அட்டைப்படங்கள்...

• கல்கியில் வெளியாகும் ஒவ்வொரு வார அட்டைப்படம் மற்றும் சிறுகதை நடிப்புப் படம், ஆகிய அனைத்தும் என் மனத்தை மிகவும் கவர்கின்றன.

முகவை, எம். சாகுல் அமீது.

• கவர்னரின் ஒவ்வொரு பதிலிலும், ஒரு நல்ல திறமையான நிர்வாகிக்குரிய தெளிவான, தீர்க்கமான, முடிவான கருத்து இருந்தது.

திட்டகுடி. தி. க. கணேசன்.

• அரசியல் கட்சித் தலைவர்களின் பேட்டிகளாகவே படித்து வந்த வாசகர்களுக்கு இம்முறை கவர்னரின் பேட்டியைப் படித்ததென்பது ஒரு மாறுதலாக இருந்தது.

சென்னை — 33, எஸ். ராம கோபால்.

• 'சாதாரண மக்களும் அணுகக் கூடிய தூரத்தில் நான் இருந்தாக வேண்டும்; அது அதிகாரிகள் விழிப்புணர்ச்சியுடன் செயலாற்ற உதவும்' என்ற கவர்னர் அலெக்சாண்டரின் பேட்டியை இன்றைய அரசியல் தலைவர்கள் உணர்ந்து, நடந்து கொள்ள வேண்டும். சந்திக்க முடியாத வண்ணம் முதல்வர் பதவியை இனியும் அலங்கரிக்க முயற்சி செய்யக் கூடாது.

சைதாப்பேட்டை, இரா. தி. இரஞ்சன்.

• கோடானு கோடி இந்திய மக்களின் உணர்வுகளைப் பிரதிபலித்தது தலையங்கம். வி. பி. சிங் அலகாபாத்தில் நிற்பது 'அமிதாப்' என்ற நடிகருக்காகவோ, அரசியல் வாதிக்காகவோ அல்ல; ஒரு பண முதலையை எதிர்த்துத்தான் என்ற உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டிய கல்கிக்குக் கோடானு கோடி நன்றிகள்.

மேல்பட்டி, எம். வி. வெங்கடேஸ்வரன்.

• இவ்வாரத் தலையங்கம் அருமையாக இருந்தது. எந்தப் பிரச்னைக்கும், தீர்வு காண இயலாத ராஜீவ் அரசுக்கு அலகாபாத் மக்கள் தீர்ப்பு வழங்கச் சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. இதை அம் மக்கள் புரிந்து கொண்டு, வி. பி. சிங்கை ஆதரித்து, உபயோகமற்ற அரசுக்குப் பாடம் புகட்டுவார்கள் என்று நம்புவோம்.

விருத்தாசலம் — 1, கி. குருராஜன்.

• கருத்துப் படங்கள் ரொம்பப் பிரமாதம். தலையங்கம் உண்மையில் எங்கள் மன நிலையை அப்படியே பிரதிபலிப்பதைப் போல் உள்ளது.

செய்துங்கநல்லூர்.
ஆர். கே. பாலசுப்பிரமணியன்.

• 'நிஜங்கள் புரிந்த போது' கதையில் சூர்யா பாத்திரப் படைப்பு வித்தியாசமானது. அந்த மாதிரி ஓர் ஏமாற்றத்துக்கு ஆளாகாமல் ஒருத்தரை ஒருத்தர் புரிந்து கொண்டால் என்ன? என்று சௌதாமினி எண்ணுவது; அதன்படியே சூர்யா நடப்பது... உண்மையிலேயே அருமை. கதைக்குப் பொருத்தமாகப் புகைப்படம் வெளியிட்டது, கதைக்கு மேலும் மெருகேற்றியது.

விருத்தாசலம், ஏ. டி. சௌமியன்.

வட்டமேஜை

• "கம்பீரம்" சிறுகதையில் அனுபவம் முதிர்ந்த ஏழை இஸ்லாமியரின் உணர்ச்சிகளை, கரீம்பாய் பாத்திரம் மூலம் துல்லியமாகச் சொல்லியிருந்தார் கதாசிரியர்.

சென்னை — 52, திரவெஸ்ட்.

• 'ஒளிப்பதிவுக்காக மட்டுமே ஒரு படம் ஓடும் என்பதை நான் ஒப்புக் கொள்ளவில்லை; ஒளிப்பதிவு சிறப்பாக இருக்கிறது என்று 'சொல்லப்படுமானால் அந்தப் பெருமை இயக்குனர் மற்றும் என்னோடு ஒத்துழைத்த 'யூனிட்'டிலுள்ள அனைவரையுமே சேரும்' என்ற விருது பெற்ற ஒளிப்பதிவாளர் ஸ்ரீராமின் தன்னடக்கமான பதில்... நிறை குடம் ததும்புவதில்லை என்ற பழமொழியை நினைவுபடுத்தியது!

விருதுநகர், கே. டி. ஆர். சேகர்.

• வெயிலுக்குச் சிலர் பலியாவது பற்றி விளக்கமாக எடுத்துக் கூறி, அதைத் தவிர்ப்பதற்கான சில யோசனைகளையும் டாக்டர் ரங்கபாஷ்யம் கூறியவை பயனுள்ளவை.

திருவாரூர், ஜி. சிவராமன்.

• பொற்கோயிலில் மத்திய அரசின் நடவடிக்கை பற்றித் தராக கூறிய பதில் நிதர்சனமான நிஜம்!

திருத்துறைப்பூண்டி, ஜெயந்தி ப்ரியன்.

• கடைசியாகக் கிடைத்த (துப்பு துலக்கிய பின்) தகவலின்படி, புத்தனாம்புரம் கிராமத்தில் சமீபத்தில் பெருகிவிட்ட எலிகள் தான் திருமதி விஜயா செய்து வைத்த வடைகள் காணாமல் போனதற்குக் காரணம் என்று தெரிய வருவதாகப் புலனாய்வுத் துறை அறிக்கை சமர்ப்பித்திருப்பதாக அறிகிறோம்.

மதுரை — 16, மதுரை ஜெயா வாசு.

• 'ஜெனரல் ஜெயலலிதா!' எதிரிக்கும் நன்மை எண்ணும் ஜானகி இரு அணித் தலைவிகளின் குணாதிசயங்களை விளக்கும் இரண்டு கட்டுரைகளையும் ஒரே இதழில் வெளியிட்டு, ஒருவருடன் ஒருவரை ஒப்பிட்டுப் பார்க்க வைத்து விட்டீர்கள்.

காட்டூர், எஸ். அருள்மொழி.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157;
ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 380/—; விமானத் தபால் ரூ. 680/—.
அறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.

…EGISTERED No. M. 4392
…gistered as a Newspaper in Sri Lanka

